23 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978



FREE
Real Estate
Classes start every week
Call:416.321.6969



RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர் (Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733



நதி 23 | பாலம் 17 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | SEPTEMBER 01, 2013


# சர்வாதிகாரப் போக்கில் சிறிலங்கா - நவநீதம்பிள்ளை

இலங்கையின் இறுதிப்போரில் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களின் நம்பகரமான குற்றச் சாட்டுக்கள் குறித்து, போர்க்குற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என ஐ.நா. மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம் பிள்ளை அவர்கள் தெரிவித்துள்ளார். இலங்கைக்கான தனது ஏழு நாள் பயணத்தின் முடிவில் 31-08-2013 ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் சிறி லங்காவின் காவல்துறை மற்றும் இராணுவத்தினரின் அச்சுறுத்தலை எதிர்கொண்டமை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும், இதுபோன்ற கண்காணிப்பும், அச்சுறுத்தல்களையும் நோக்கும்போது, சிறிலங்கா மோசமான நிலையில் உள்ளது போல் தோன்றுகிறது எனவும் நவநீதம்பிள்ளை அவர்கள் தெரிவித்துள்ளார்.



சனிக்கிழமை தலைநகர் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இக்கருத்தினை தெரிவி த்துள்ளார். இதேவேளை சிறிலங்கா வில் எதேச்சாதிகாரப் போக்கு அதி- கரித்து வருவதாகவும் அவர் எச்சரித்துள்ளார்.

இந்த உண்மை கண்டறியும் தனது பயணத்தின் போது, தன்னுடன் கலந்துரையாடிய மனித உரிமை திருகோணமலையில் அவரை சந்தித்த இரு தமிழ் பாதிரியார்கள் ஒருசிலரால் விசாரிக்கப்பட்டமை தொடர்பில் ஐ.நா. ஆணையாளரின் கவனத்திற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு கொண்டு வந்திருந்தது. "உங்கள் பிள்ளைகளை அனுப்பின இடத்துக்கே உங்களையும் அனுப்புவதா" என முள்ளிவாய்க்கால் பகுதியில் ஐ.நா. ஆணையாளரிடம் முறைப்பாடுகளை மேற்கொண்டிருந்த பொதுமக்களை சிறிலங்கா படையினர் அச்சுறுத்தியமை நவநீதம்பிள்ளையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. இந்நிலையில் இவ்விவகாரத்தில் தனது கோபத்தினை வெளிப்படுத்திய ஐ.நா. ஆணையாளர் "இதுபோன்று நடந்து கொள்வதற்கு, என்னைப் போன்றவர்களை அழைக்கக் கூடாது" என சிறி லங்காவின் போக்கை கண்டித்துள்ளார்.

இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில், நிலைகொண்டுள்ள சிறி லங்கா படைக்கட்டமைப்பினை, சிறி லங்கா அரசுத் தலைவர் குறைக்க வேண்டும் எனவும் ஐ.நா. ஆணையாளர் கூறியுள்ளார்.

## நவநீதம்பிள்ளையின் இலங்கைப் பயணம்

ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையாளர் நவநீதம்பிள்ளை ஓகஸ்ட் 25 இல் இருந்து ஓகஸ்ட் 31 வரை இலங்கைப் பிரயாணத்தை மேற்கொண்டு வருகின்றார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு தீர்மானங்களுக்கு அமையவே ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையாளர் அலுவலகம் LLRC அறிக்கையில் சமர்ப்பிக் கப்பட்ட பரிந்துரைகளை இலங்கை அரசு எவ்வாறு நடைமுறைப்படுத்துகின்றது என அவதானித்து வருகின்றது. ஏனெனில் இவ் அலுவலகம் செப்ரெம்பர் மாதம் ஜெனிவா வில் நடைபெற உள்ள மனித உரிமைகள் சபையின் 24 ஆவது மாநாட்டில் இதுபற்றி ஒரு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இவ் அறிக்கையை தயாரிப்பதற்காகவே இலங்கை அரசு எவ்வாறு LLRC அறிக்கை


தொடர்ச்சி 02ஆம் பக்கம்



Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099
Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
kjegasothy@markville.com | 416.451.0565
குமார் ஜெகசோதி
TOYOTA MARKVILLE
905.294.8100

துரித பணமாற்றுச் சேவை
• 55 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 22 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3 — 416.267.8221
3351 Markham Rd. #109 — 416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5, Markham & Eglinton, Tel:416.264.3232
3351Markham Rd., #129, Markham & Steeles, Tel: 416.609.2022

# நவநீதம்பிள்ளையின்.....

01ஆம் பக்கத்தொடர்ச்சி

யில் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துகின்றது என அறிவதற்கு ஐ.நா. மனித உரிமைகள் உயர் ஆணையாளர் நவநீதம்பிள்ளை அவர்கள் தனது இலங்கை விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இலங்கையில் தனது பிரயாணத்தை ஆரம்பிக்கும் போது நவநீதம்பிள்ளை ஊடகவியலாளர்களுக்கு தெரிவிக்கையில் தான் இலங்கை உட்பட ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஏற்றுக்கொண்ட மனித உரிமைகளை எவ்வாறு இலங்கையில் நடைமுறைப் படுத்தப்படுகின்றது என்று பார்க்கவே வந்ததாகக் கூறினார். தான் இலங்கையை பற்றி விமர்சிக்க (Criticise) வரவில்லை, மனித உரிமைகள் மீதான தனது கரிசனையை (Concerns) தெரிவிக்கவே வந்துள்ளதாக கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் தான் போர் நடைபெற்ற வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கு பிரயாணம் செய்யப்போவதாகவும் பின்னர் இலங்கை அதிபர் இராஜபக்சவை சந்திப்பார் எனவும் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கம் செப்ரெம்பரில் நடைபெற உள்ள மனித உரிமைகள் சபையின் போகின்றோம். அவர் எங்கே வேண்டுமானாலும் செல்லலாம், யாருடன் வேண்டும் என்றாலும் பேசலாம் என்றார்.

மிகவும் அண்மைக்காலம் வரை வடக்கில் போர் நடைபெற்ற சில பகுதிகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை உத்தியோகத்தர்களையோ அல்லது வெளிநாட்டு ஊடகவியலாளர் களையோ செல்ல இலங்கை அரசு அனுமதிக்கவில்லை என AFP செய்தி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

## வடமாகாணப் பயணம்

வட மாகாண பகுதிகளில் மேற்கொள்ளப் பட்டுள்ள கட்டுமானப்பணிகள் மகிழ்ச்சி அளித்தாலும் அதனை மதிப்பீடு செய்வதற்காக தான் இலங்கை வரவில்லை. உள்நாட்டில் மனித உரிமைகளின் தற்போதைய நிலைவரத்தை மதிப்பீடு செய்வதே இலங்கைக்கான தனது பயணத்தின் நோக்கமும் கடமையும் ஆகும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை சுட்டிக் காட்டியுள்ளார். யாழ். நூலகத்திற்கு சென்ற நவநீதம்பிள்ளை நூலகத்தை பார்வையிட்டார். அங்கு வட மாகாணத்தின் அனைத்து மாவட்ட செயலாளர்கள் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் பிரதி செயலாளர் விஜயலட்சுமி ரமேஷ்



ஆகியோரின் தலைமையில் வடக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகள் தொடர்பில் விளக்கமளித்தார்கள். இங்கு நவநீதம்பிள்ளை உரையாற்றுகையிலேயே இதனைத் தெளிவுபடுத்தியுள்ளார். தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர் இலங்கையின் வடபகுதியில் பல்வேறு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளமையை உங்களின் விளக்கமளிப்பு களுக்கூடாக அறிந்து கொள்கின்றேன். குறிப்பாக ஐ.நா. இலங்கையில் முன்னெடுக்கப்படுகின்ற மக்கள் மேம்பாட்டுத் திட்டங்களையும் ஐ. நா. கொள்கைகளையும் ஏற்றுக்கொண்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின் றது. மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலான நடவடிக்கைகளும் மகிழ்ச்சியளிக்கின்றது. இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரத்தை முழுமையாக மதிப்பீடு செய்வதும் குறிப்பிட்ட சில தரப்புக்களையும் பொது மக்களையும் சந்தித்து உண்மை நிலைவரத்தை கண்டறிய வேண்டியதும் எனது கடமையாகும் எனக் கூறியுள்ளார்.

மாநாட்டில் இலங்கையில் LLRC அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட பரிந்துரை களின் அமலாக்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று காட்டுவதற்கும், நொவம்பரில் இலங்கையில் நடைபெற உள்ள பொதுநலவாய தலைவர்களது மாநாட்டிற்கு மற்றைய பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் வராமல் விடுவதை தவிர்ப்பதற்குமாகவே நவநீதம்பிள்ளையை வரவேற்பது என முடிவு எடுத்ததாக AFP செய்திஸ்தாபனம் கூறுகின்றது.

ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் மனித உரிமைகள் பிரதிநிதி மகிந்தா சமரசிங்கா தெரிவிக்கையில், இலங்கையில் மனித உரிமைகளை நிலைநாட்ட நாங்கள் மேற்கொண்ட திட்டங்களை நவநீதம்பிள்ளை ஏற்றுக் கொள்ளவில்லை. அதனாலேயே அவரை நேரில் இங்கு வந்து காணுமாறு அழைப்பு விடுத்தோம் என்றார். நாங்கள் அவரிற்கு என்னென்ன திட்டங்களை அமலாக்க தொடங்கியுள்ளோம் என காட்டப்






ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளரை வடக்கு மாகாண ஆளுநரும் முன்னாள் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியுமான மேஜர் ஜெனரல் சந்திரசிறி வரவேற்ற பொழுது காணாமல் போன ஒருவரின் தாயார் அவரைக் கொலையாளி என்று ஏசியுள்ளார். யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சந்திரசிறி பதவி வகித்த காலத்திலேயே தனது பிள்ளை கடத்தப்பட்டதாகவும் சந்திரசிறியின் கட்டளையின் கீழே தனது மகன் காணாமல் போனதாகத் தெரிவித்து அழுதார். குறித்த காலத்தில் 2000 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் காணாமல் போனதுடன் பலர் கொலையும் செய்யப்பட்டனர். பலாலி இராணுவ முகாமை அண்மித்த பகுதிகளில் பல சித்திரவதைக் கூடங்கள் இரகசியமாக இயக்கப்பட்டதாகவும் அப்போது குற்றச் சாட்டுக்கள் எழுந்திருந்தன. யாழ்ப்பாணத்தை உலுப்பி எடுத்த பயங்கரக் காலமாக சந்திர சிறி இராணுவத்தளபதியாக பதவி வகித்த காலம் இருந்தது. இந்நிலையில் தாம் நீதி கோரி நவநீதம்பிள்ளையிடம் வந்துள்ளதாக வும் இங்கு அவரையே தன் மகனைக் கொலை செய்த கொலையாளி வரவேற்றுச் செல்லும் பொழுது தனக்கான நீதி எப்படிக்கிடைக்கும்? காணாமல் போன தன் பிள்ளையை சந்திரச-றி திருப்பித் தருவாரா என அந்தத் தாயார் அழுது புலம்பினார்.

ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஆணையர் நவநீதம்பிள்ளை அவர்கள் வடபகுதிக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தையடுத்து, முகாம்களுக்குள் முடக்கப்பட்டிருந்ததாகக் கூறப்பட்ட இலங்கை இராணுவத்தினர் மீண்டும் வீதிகளில் தமது கடமைகளில் ஈடுபட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. நவநீதம்பிள்ளை யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கும், அங்கிருந்து முல்லைத்தீவு மாவட்டம் புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால் மற்றும் கேப்பாப்பிலவு மாதிரி கிராமம் ஆகிய இடங்களுக்கும் பயணம் செய்த வீதிகளில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ காவலரண் கள் உரு மறைப்பு செய்யப்பட்டும் சில காவலரண்கள் முற்றாக அகற்றப்பட்டும் இருந்தன. எனினும் இந்த காவலரண்கள் மீண்டும் செயல்படத் தொடங்கியிருந்ததாக அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் கூறுகிறார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து A9 வீதியூடாக நவநீதம்பிள்ளை பிரயாணம் செய்ததையடுத்து, மூடப்பட்டிருந்த ஆனையிறவு வீதிச் சோதனை முகாமும் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

ஆனையிறவின் வழியாகச் செல்கின்ற வாகனங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை களில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டிருந்த தாக பயணிகளும் வாகன ஓட்டுநர்களும் தெரிவித்துள்ளனர். முள்ளிவாய்க்கால் கிராமத்திற்குச் சென்றிருந்த நவநீதம் பிள்ளையிடம் மீள்குடியேற்றப்பட்டுள்ள தங்களுக்கு இன்னும் வீட்டு வசதிகள், வாழ்வாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்றும், சில இடங்களில் தமது வயல் மற்றும் தோட்டக்காணிகள் படையினரால் அடைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்து, அவற்றைத் தங்களுக்கு பெற்றுத் தருமாறும் அந்த மக்கள் கேட்டுக் கொண்டனர். தென்னிலங்கையில் இருந்து தமது பகுதிக்குள் வந்து தொழில் செய்கின்ற

தொடர்ச்சி 04ஆம் பக்கம்

விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜய்பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.


Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram Publications Inc. ,
   5215 Finch Ave. E. #201,
   Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: www.vlambaram.com
   www.tamilvanakkam.com




# கனடா ஒரு கண்ணோட்டம்

## கடந்த இதழ் தொடர்ச்சி

### பிரசையின் உரிமைகள்

கனடிய உரிமைகள்-சுதந்திரங்கள் பட்டயத்துக்கு அமைய கனடியப் பிரசைகளின் உரிமைகள் பின்வருமாறு:

- கூட்டாட்சி, மாகாண ஆட்சி, ஆள்புல ஆட்சிக்கான தேர்தல்களில் வேட்பாளர்களாகப் போட்டியிடும் உரிமை,
- இரண்டிலோர் ஆட்சி மொழியில் கல்வி கற்கும் உரிமை,
- கனடியக் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் உரிமை,
- கூட்டாட்சி, மாகாண ஆட்சி, ஆள்புல ஆட்சிக்கான தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை,
- தங்குதடையின்றிக் கனடாவுக்கு வந்து போகும் உரிமை.

பிரசையின் உரிமைகளுடன் பொறுப்புகளும் சேரும். எடுத்துக்காட்டாக, தேர்தல்களில் வாக்களிப்பது ஓர் உரிமை மாத்திரமல்ல, பொறுப்பும் ஆகும். நீங்கள் அடுத்த பிரிவை வாசிக்க முன்னர் உரிமை நிரலை மீள்நோக்கி, அத்துடன் கூடிய பொறுப்புகளையும் சிந்தித்துப் பார்க்கவும்.

### பிரசையின் பொறுப்புகள்

கனடியப் பிரசைகள் அனைவரின் பொறுப்புகளும் பின்வருமாறு:

- தேர்தல்களில் வாக்களித்தல்,
- சமூகத்தில் வாழும் மற்றவர்களுக்கு உதவுதல்
- எமது பாரம்பரியத்தையும் சூழலையும் கட்டிக்காத்தல்,
- கனடியச் சட்டங்களுக்கு அமைந்தொழுகுதல்,
- தங்குதடையின்றி கருத்துகளை எடுத்துரைத்தல், மற்றவர்களின் உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் மதிப்பளித்தல்,
- பாகுபாட்டையும் அநீதியையும் ஒழித்தல்

### கனடிய அலுவல்களில் பங்குபற்றுதல்

ஒரு கனடியப் பிரசையாக விளங்குவது என்பது தேர்தல்களில் வாக்களித்து, சட்டங்களுக்கு அமைந்தொழுகுவதுடன் முடிந்துவிடுவதில்லை. நீங்கள் ஒரு பிரசையாக விளங்குவது என்பது உங்கள் சமூக, நாட்டு அலுவல்களில் நீங்கள் பங்குபற்றுவது ஆகும். ஒவ்வொருவரும் கனடிய நாட்டை மேம்படுத்துவதில் பங்கு பற்ற வேண்டும். பங்குபற்றும் விதங்கள் சில பின்வருமாறு:

- சூழல் பேணும் குழுமம் போன்ற ஒரு சமூகக் குழுமத்தில் இணைதல்,
- நீங்கள் விரும்பும் ஒரு வேட்பாளரின் தேர்தல் பிரசாரத்தில் தொண்டாற்றுதல்,
- உங்கள் அயலவர்களுக்கு உதவுதல்,
- உங்கள் சமூகம் எதிர்நோக்கும் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு மற்றவர்களுடன் ஒத்துழைத்தல்,
- தேர்தலில் வேட்பாளராகப் போட்டியிடல்.

### குடியுரிமைச் சத்தியம்

நீங்கள் ஒரு கனடியப் பிரசை ஆகுவதற்கு முன்னர் உரிய தலைமை அதிகாரி மொழிவதைச் செவிமடுத்து பின்வரும் குடியுரிமைச் சத்தியத்தை நீங்கள் ஒப்புவிக்க வேண்டும்:



### குடியுரிமைச் சத்தியம்

கனடிய அரசி ஆகிய மாட்சிமை தங்கிய இரண்டாவது எலிசபெத் அரசி, அவருடைய மரபுரிமையாளர்கள், பின்னுரிமையாளர்கள் மீது நான் உரிய பற்றுறுதியும் உண்மையான விசுவாசமும் கொண்டிருப்பேன் என்றும், கனடியச் சட்டங்களுக்கு நான் அமைந்தொழுகுவேன் என்றும், ஒரு கனடியப் பிரசை என்ற வகையில் எனது கடமைகளை நான் நிறைவேற்றுவேன் என்றும் இத்தால் நான் சத்தியம் செய்கிறேன். (அல்லது உறுதி அளிக்கிறேன்).

### மேலதிக விபரங்கள் : கனடியக் குடியுரிமை

ஒரு கனடியப் பிரசை ஆகுவது எப்படி என்னும் சிற்றேட்டின் பிரதியையும் மற்றும் பிற குடியுரிமை விண்ணப்ப விபரங்களையும் பெற்றுக்கொள்ளவும்.

தொலைபேசி வாயிலாக அழைப்பு நிலைய இலக்கங்கள்:
மொன்றியலில் (514) 496 1010 ரொறன்ரோவில் (416) 973 4444
வான்கூவரில் (604) 666 2171

கனடாவின் உள்ளே ஏனைய பகுதிகளில் இலவச தொலைபேசி இலக்கம்: 1888 242 21000

குறிப்பு: கனடாவுக்கு வெளியே இருந்து அழைப்பவர்கள் தத்தம் கனடிய தூதரகம், உயர் ஆணையகம், காவற்றூதரகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இணைய வாயிலாக குடியுரிமை-குடிவரவு அமைச்சின் இணையத் தளத்தை அணுகவும்: www.cic.gc.ca. இதிலிருந்து கனடா: ஒரு கண்ணோட்டம் என்னும் சிறுநூலின் பிரதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

தொடரும்...

- மணி வேலுப்பிள்ளை

APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6



# தொப்பையா? குப்பையா?

6 பேக் வயிறுக்கு ஆண்களிடம் போட்டி, ப்ளாட்டான வயிறுக்கு பெண்களிடம் ஏகப்பட்ட டிமான்ட் - ஒரு காலத்தில் முக அழகை பராமரிக்க என்று ஊரையே கலக்கிக் கொண்டிருந்த விளம்பரங்கள் போய் இன்று உங்கள் வயிற்றை அழகாக காண்பிக்க என்று விளம்பரங்கள் தாறுமாறாக அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. நீங்களும் அதில் ஒருவரா, இல்லையென்றாலும் இதைப் படிக்க தவறாதீர்கள்.

தொப்பையா? குப்பையா? பதில் உள்ளே...

டாக்டர். சாட்சி சுரேந்தர்,
ஈஷா ஆரோக்யா

நம் விநாயகத்திற்கு வயது 36. தனியார் கம்பெனியில் உட்கார்ந்த இடத்தில் சொகுசு வேலை, இவர் பெயர் இராசியோ என்னவோ, இவரது 'கொழுக் மொழுக்' தொப்பை காண்பவருக்கு கட்டாயம் விநாயகப் பெருமானை ஞாபகப்படுத்திவிடும். 'விநாயகா! லட்டு தின்ன ஆசையா? என்றாலே, நாவூறும் ஸ்வீட் பிரியர், நொறுக்குத் தீனி கொறிப்பதில் கணக்கு வழக்கு இல்லை. இவரது உடல் மண்ணுக்காம், உயிரோ KFC சிக்கனுக்காம்!'

தொப்பை (Central obesity) வெறும் அழகுப் பிரச்சனை மட்டுமல்ல, உங்கள் ஈரக்குலையின் தேவையற்ற கொழுப்பு, உங்கள் இதயத்துக்கே உலை வைக்கலாம்.

'நாளைலேர்ந்து கண்டிப்பா' வாக்கிங்! D சபதமெடுப்பதும், பின்னர் மறுநாள் எழுப்பும் 6 மணி அலாரத்தை, 15 முறை ஸ்னூஸ் செய்து, மனைவியின் நல்ல வார்த்தை அர்ச்சனைக்கு பிறகு 9 மணிக்கு பரபரவென ஆபீஸ் கிளம்புவார். முதல் மாடியிலேயே ஆ.'.பீஸ் இருந்தாலும் 'சொய்ய்ங்கு'னு




லி.'.ப்ட் ஏறும் உழைப்பாளி! நேற்று அவருக்கு ஏற்பட்ட திடீர் மயக்கத்தாலும் நெஞ்சு படபடப்பாலும், பதறி யடித்து டாக்டரிடம் சென்றவருக்கோ கிடைத்தது, ஆயுள் தண்டனை! ஆம்! 'வெரி ஸாரி விநாயக் சார்! 320 மில்லிகிராம்ஸ், ஹை கொலஸ்ட்ரால், .'.பாஸ்டிங் சுகர்கூட 218 மில்லிகிராம்ஸ். வேற வழியே இல்ல' லை.'.ப் லாங் மெடிசன்ஸ் எடுத்தே ஆகனும், இனியும் வாயைக் கட்டி, உடம்பை குறைக்கலேனா, ஹார்ட்டுக்கு நல்லதில்ல' என்ற டாக்டர், புரியாத மருந்து பெயர்களால் ஒரு பக்கக் கட்டுரையை முடித்தார்.

ஆம், என் சக சராசரி குடிமகன்களே! தொப்பை (Central obesity) வெறும் அழகுப் பிரச்சனை மட்டுமல்ல, உங்கள் ஈரக்குலையின் தேவையற்ற கொழுப்பு, உங்கள் இதயத்துக்கே உலை வைக்கலாம்.

## தொப்பை ஏன்?

உடலும் ஒரு இயந்திரம்தான். இயந்திரம் இயங்க எரிபொருள் தேவை. உடல் இயங்க, உணவு எரிவதால் (செரிமானம்) உண்டாகும் 'கலோரிகள்' தேவை. உடலின் தேவையை விட, அதிக அளவு உணவின் மூலம் கிடைக்கும் கலோரிகள், உடலில் கொழுப்பாய் சேமிக்கப்படுகின்றன. இது ஆண்களுக்கு வயிற்றிலும், பெண்களுக்கு தொடை மற்றும் கூபகப் பகுதியிலும் (பின்புறம்) சேர்கின்றன. இது பின்னாளில் உணவு கிடைக்காத நிலையில் கொழுப்பை எரித்து பயன்படுத்திக்கொள்ள உடல் எடுத்துக்கொள்ளும் தற்காப்பு அம்சமே.

ஆனால் இன்றோ விளம்பர/வியாபார சக்தி



சத்குரு வாசுதேவ்

களால் தறிகெட்டு போய்விட்ட உணவு பழக்கங்களும், நலிந்து போய்விட்ட உடல் உழைப்பும் சேர்ந்து நவீன இந்தியர்களை, தொந்தியர்களாக மாற்றிக் கொண்டிருக்கின்றன. அதுவும், மரபணு வழியிலேயே மற்ற எந்நாட்டினரையும் விட, நம் நாட்டவர்க்கே தொப்பை ஏற்படும் வாய்ப்பு (Tendency) அதிகம் உள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## தொப்பையா? குப்பையா?

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

தேவை இல்லாதவற்றை ஒரு வகையில், குப்பைதான் எனக் கொண்டோமேயானால் தொப்பையும் ஒரு குப்பைதானே? குப்பையைக்கூட ஒதுக்கிவிட்டு நடக்கலாம். ஆனால் தொப்பையைத் தனியாய் கழட்டி வைக்க முடியுமா என்ன?

இந்த தொப்பை (குப்பை) தொட்டியால் நம்மை அண்டும் குப்பைகளில் சில: சர்க்கரை நோய், அதிக கொழுப்பு, உயர் இரத்த அழுத்தம், இருதய நோய் (மாரடைப்பு முதல் திடீர் மரணம் வரை), முறையற்ற மாதவிடாய் சுழற்சி, கர்ப்பம் தரிப்பதில் சிக்கல், உளவியல் ரீதியான தாழ்வு மனப்பான்மை, மனச்சோர்வு. இதற்காக ஒருவர் வாழ்நாள் முழுவதும் செலவிடும் தொகையால் தனிமனித மற்றும் நாட்டின் வருமான இழப்பும் உண்டு.

## நவநீதம்பிள்ளையின்.....

02ஆம் பக்கத்தொடர்ச்சி

வெளிமாவட்ட மீனவர்களினால், மீன்பிடி தொழிலில் தாங்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கியிருப்பதாகவும் அவர்கள்



நவநீதம்பிள்ளையிடம் தெரிவித்தனர். இறுதி யுத்தத்தின் முடிவில் இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமல் போயிருப்பவர்கள் தொடர்பான பிரச்சினைகளையும் அங்குள்ள மக்கள் அவரிடம் எடுத்துக் கூறினார்கள். நவநீதம்பிள்ளையைச் சந்தித்த மக்கள் அச்சுறுத்தப்பட்டிருப்பதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### கிழக்கு மாகாணப் பயணம்

திருகோணமலை மாவட்டத்திற்கு விஜயம் செய்த நவநீதம்பிள்ளை மூதூர் பிரதேசத்திற்கும் பயணம் மேற்கொண்டார். மூதூர், கிளிவெட்டி இடைத்தங்கல் முகாமுக்குச் சென்ற அவர், அங்குள்ள மக்களின் நிலைமையை நேரில் கேட்டறிந்து கொண்டார். முகாமிலிருந்த மக்களில் சிலர் காணாமற் போயுள்ள தமது உறவுகள் மீள வருவதற்கு வழி செய்து தருமாறும் நீண்ட காலமாக சொந்த வாழிடத்தில் குடியமர முடியாது தவிக்கும் தம்மை மீளக் குடியமர்த்து வதற்கு ஆவன செய்யுமாறும் கண்ணீர் விட்டழுது கோரினர். சம்பூருக்கு அண்மையில் உள்ள கூனித்தீவு, நவரெட்னபுரம் மற்றும் சுடைக்குடா மக்களை மீள்குடியேற்றியது போன்று எங்களையும் மீள் குடியேற்ற வேண்டும் எனவும் தெரிவித்தனர். எங்களுக்கு எமது சம்பூர் தான் வேண்டும் என மக்கள் மன்றாடினர். இதேவேளை, இளம் தாய் ஒருவர் தனது பிள்ளையுடன் நவநீதம் பிள்ளையிடம் கண்ணீர் மல்க எனது கணவர் கைது செய்யப்பட்டு தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டு இருப்பதால் தாங்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றோம், அவரை

தொடர்ச்சி 06ஆம் பக்கம்




# மோட்கேஜ் கிளினிக்



தயா (PK) கந்தையா
BAS, ABR, AMP
Principal Broker / President
FSCO Lic # M 08001063
**Cell : 416-716-8707**

இலவச ஆலோசனைக்கு தயக்கமின்றி அழையுங்கள்

- லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேண்டுமா?
- கடன்களை ஒன்றுபடுத்தி எல்லா பேமேன்டையும் ஒரே பேமேண்டாக மாற்ற வேண்டுமா?
- ரீபைனான்ஸ் செய்ய வேண்டுமா?
- 2 வது மற்றும் 3வது மோட்கேஜ் தேவையா?
- பாங்க்ரப்சி செய்தோருக்கான மோட்கேஜ் தேவையா?
- உரிய நேரத்தில் மோட்கேஜ் தவணைப் பணத்தினை செலுத்தமுடியாது பவர் ஒப் சேலினை எதிர்நோக்குகிறீர்களா? உடனடித்தீர்வுக்கான ஆலோசனைகள் தேவையா?
- உங்கள் வீட்டினை வாடகைக்கு விட வேண்டுமா?
- அனைத்து ரியல் எஸ்டேட் சம்பந்தமான சேவைகளையும் குறைந்த செலவில் செய்ய வேண்டுமா?
- மற்றும் பல சேவைகள்



ஜெ இராசதுரை MBA, BBA (Hon), AMP
Mortgage Development Manager / Agent
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**



உதயன் (Utha) மாணிக்கவாசகர்
Mortgage Agent
FSCO Lic # M 11001140
**Cell : 647-282-8842**



நிஷாந்தன் சுவர்ணராஜா
Mortgage Agent
FSCO Lic # M 10001638
**Cell : 647-385-2710**



சுரேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent
FSCO Lic # M 12001741
**Cell : 647-861-8240**

## வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

CENTUM™
Rapid Mortgages Inc.
LIC # 10156

80 Nashdene Road, Suite # 211
Toronto, ON. M1V 5E4.
416-644-3555

rapid realty inc.

# அதிவேக ஓட்ட வீரன் கேசிகன் பிரபாகரன்

## விளையாட்டுத் தகவல்கள் 354

கனேடிய சமூகத்தில் 14 வயதுடைய தமிழ் வீரன் கேசிகன் பிரபாகரன் அதிவேக ஓட்டக்காரர் ஆக (15 வயதுக்குட்பட்டோர் பிரிவில்) திகழுகின்றார் என்பது எமது தமிழர் சமூகமே பெருமைப்பட கூடிய விடயமாகும். United Sports Club கழகத்தில் பயிற்சி பெற்று வரும் கேசிகன் பிரபாகரன் பல கனேடிய தடகள போட்டிகளிலும், North American தடகள போட்டிகளில் மிக வேகமாக வளர்ந்து வரும் வீரனாக திகழ்கின்றார்.

• ஜுலை 13, 2013 ஆம் திகதி Birchmount stadium இல் நடைபெற்ற தடகள போட்டிகளில் Fast Male Runner in Tamil community என்ற விருதை கேசிகன் பிரபாகரனுக்கு, தமிழர் நிர்வாகத்தில் ஒன்ராறியோ மாநிலத்தில் பல சாதனைகளை புரிந்த United Sports Club வழங்கி கௌரவித்தது.

• ஓகஸ்ட் 03, 2013, Hershey North American Finals இல் 15 வயதுக்குட்பட்டோர் பிரிவில் 200 மீற்றர் போட்டியில் முதலாவது இடத்தை பெற்று சாதனை புரிந்துள்ளார்.

• ஜுலை 27, 2013, Athletics Ontario (AO) 15 வயதுக்குட்பட்டோர் பிரிவில் 300 மீற்றர் தூரத்தை 37.06 செக்கனில் கடந்து புதிய ஒரு சாதனையை நிலை நாட்டினார்.

• ஜுலை 20, 2013 கேசிகன் பிரபாகரன் Minor Track Association (MTA), ஒன்ராறியோ மாகாண போட்டிகளில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டப்பந்தயங்களில் முதலாம் இடத்தை பெற்று சாதனை புரிந்துள்ளார்.


• Durham Track and Field இறுதிப் போட்டிகளில் 11:50 செக்கனில் இருந்த 100 மீற்றர் சாதனையை 11:32 செக்கனில் முறியடித்து புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளார். 200 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் 24:00 செக்கனில் இருந்த சாதனையை 23:25 செக்கனில் ஓடி புதிய ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளார்.



• கேசிகன் பிரபாகரன் 100 மீற்றர், 200 மீற்றர், 100 மீற்றர் அஞ்சல் ஓட்டம் (Relay), நீளம் பாய்தல் (Long Jump) ஆகிய தடகள போட்டிகளில் கனேடிய சமூகத்தில் பல சாதனைகளை இளம் வயதில் நிலை நாட்டியுள்ளமை அனைத்து தமிழ் சமூகமும் பெருமைப்படக் கூடிய விடயமாகும்.

இளம் வயதில் கனேடிய தேசிய அளவில் பங்கு பெறக் கூடிய திறமைகளை தன்னகத்தே கொண்டுள்ள கேசிகன் பிரபாகரனுக்கு எப்படி இந்த திறமைகள் வந்தது என்று பார்த்தால் அவரது பாட்டனார் (Grand father) மறைந்த கனகலிங்கம் இளையதம்பி, யாழ். நகரில் யாழ். இந்துக் கல்லூரி மாணவரும், அகில இலங்கையில் புகழ்பெற்ற தடகள வீரரும், புகழ்பெற்ற உதைபந்தாட்ட பந்து காப்பாளரும், First Class சர்வதேச உதைபந்தாட்ட நடுவரும் (Referee) யும், ஆவார். மேலும் சொல்லப்போனால் இவரது சகோதரர் யாழ். இந்துக்கல்லூரி, மத்திய கல்லூரி அதிபராகவும் திறமை மிக்க சகல துறை வீரர் ஆகவும் திகழ்ந்த யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் ஆன திரு. சபாலிங்கம் இளையதம்பி (சபான்) ஆவர். இவரை இலங்கையில் உள்ள எந்த துறை விளையாட்டு ரசிகர்களும் மறந்திருக்க முடியாது என்பது உண்மை. இப்படியான விளையாட்டு திறமை மிக்க பரம்பரையில் வந்துதித்த இளம் வீரர் கேசிகன் பிரபாகரன் சர்வதேச அளவில் புகழ்பெற்று மேலும் பல சாதனைகளை கனேடிய, தமிழ் சமூகம் சார்பாக நிலை நிறுத்த வேண்டும் என்று 'விளம்பரம்' பத்திரிகை சார்பில் வாழ்த்துகின்றோம்.

**எஸ். கணேஷ்**



## நவநீதம்பிள்ளையின்.....

04ஆம் பக்கத்தொடர்ச்சி

விடுதலை செய்ய நடவடிக்கை எடுங்கள் என்றார். இதன்போது கோரிக்கை அடங்கிய மகஜரொன்றும் நவநீதம்பிள்ளை யிடம் கையளித்தனர். சம்பூர் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் நான் பேசுவேன் என நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார். 'எனது பயணத்தின் இறுதியில் இலங்கை அரசாங்கத்தின் உயர் மட்டத்தினரை சந்திக்கவுள்ளேன். இதன்போது சம்பூர் மக்களின் மீள்குடியேற்றம் குறித்து பேசுவேன்' என அவர் குறிப்பிட்டார். சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படாது மாற்று இடத்தில் குடியேற்றப்பட்டதனால் நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தொடர்பாக நான் அறிவேன் என அவர் மேலும் தெரிவித்தார்

## கொழும்புப் பயணம்

காணாமற்போனோர் விவகாரத்தில் தனது அதிகூடிய கவனத்தைச் செலுத்தியுள்ள நவநீதம்பிள்ளை, காணாமற்போனோரின் உறவினர்கள் 300 பேருடன் கொழும்பில் விசேட சந்திப்பு ஒன்றை நடத்த திட்டமிட்டுள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் வடக்கு - கிழக்குக்கான பயணங்களின் போது காணாமற்போனோரின் உறவினர்களால் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டங்கள், கையளிக்கப் பட்ட மனுக்கள் ஆகியவற்றை அடுத்து கொழும்பில் இந்த விசேட சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இலங்கைக்கான தனது பயணத்தின் போது 3 நாட்களை நவநீதம்பிள்ளை வடக்கு - கிழக்கில் செலவி ட்டிருந்தார். இதன்போது காணாமற் போனோரின் உறவுகள் தமது பிள்ளைகளை கண்டுபிடித்துத் தருமாறு கோரி நவநீதம்பிள்ளை செல்லும் இடமெல்லாம் பின்தொடர்ந்து சென்று கவனவீர்ப்புப் போராட்டங்களை நடத்தினர். யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் இந்தப் போராட்டங்கள் நடைபெற்றன. இதனைவிட முல்லைத்தீவுக்குச் சென்ற ஆணையாளரை சூழ்ந்துகொண்ட மக்கள், தமது பிள்ளை களை எப்படியாவது மீட்டுத் தரவேண்டும் என்று கண்ணீர்மல்க கோரிக்கை விடுத்தனர். அத்துடன் யாழ்ப்பாணத்தில் நவநீதம்பிள்ளை யுடனான சந்திப்பின் போது காணாமற் போனோர் விவகாரம் தொடர்பில் மனு ஒன்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகளால் கையளிக்கப்பட்டது.

நவநீதம்பிள்ளை இலங்கைக்கு வந்த ஓகஸ்ட் 25 ஆம் திகதி இலங்கை அதிபர் மகிந்த இராஜபக்ச Belarus நாட்டுக்கு பயணம் மேற்கொண்டார். ஆனாலும் அவர் நவநீதம்பிள்ளை இலங்கையில் இருந்து புறப்பட முன்னர் இலங்கைக்கு திரும்பி நவநீதம்பிள்ளையை சந்திப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Belarus இல் அதன் அதிபர் Alexander Lukashenko ஐ சந்தித்தபோது இலங்கை அதிபர் மகிந்த இராஜபக்ச, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை தங்கள் இரண்டு நாடுகளையும் நேர்மையற்ற முறையில் தாக்குகின்றது என்றார். தங்களுடைய நாடுகள் மீது சில நாடுகள் மனித உரிமைகள் சபையை உபயோகித்து பழிபோடுகின்றன. இது கண்டிக்கப்பட வேண்டிய விடயம் என்றார்.

நவநீதம்பிள்ளை ஓகஸ்ட் 30 ஆம் திகதி அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களையும் எதிர்க்கட்சி தலைவரையும் சந்தித்தார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தினார். எனினும் அவருடன் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பான தகவல்கள் உடன-டியாக வெளியிடப்படவில்லை. பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவையும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சில் நவநீதம்பிள்ளை சந்தித்தார்.

போருக்கு பின்னர் வடக்கு கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி பணிகள் தொடர்பாக அமைச்சர் பசில் ராஜபக்ஷ மனித உரிமைகள் ஆணையாளருக்கு தெளிவுப்படுத்தியுள்ளார். அத்துடன் சர்வதேச சமூகம், சர்வதேச அரச-சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உதவியுடன் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

நவநீதம்பிள்ளை, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை கொழும்பு கேம்பிரிஜ் பிளேஸில் உள்ள அவரது அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தினார். சுமார் ஒரு மணிநேரம் இப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.



இந்த சந்திப்பின் போது, நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவது, நாட்டின் சட்டத்தின் ஆட்சியை கட்டியெழுப்புவது உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதாக சந்திப்பிற்கு பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்தார். நவநீதம்பிள்ளை இதன் பின்னர் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவையும் சந்தித்து கலந்துரையாடினார்.

# வீடு/மனை கட்டுவதற்காக கொடுக்கப்படும் பணம்

நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 397

தமிழில் ஒரு பழமொழி உண்டு. “தாயும், மகளும் ஆயினும் வாயும் வயிறும் வேறு”. இது எதை நமக்கு ஞாபகப்படுத்துகின்றது. எவ்வளவு தான் மிக அண்மையில் ஒன்று போல இருந்தாலும் இரண்டும் வேறு வேறானவை. இது ஆதன வியாபாரத்திற்கும் பொருந்தக்கூடியது தான். ஆதனம் நிர்மாணம் செய்வதற்காக தேர்ந்து எடுக்கப்படும் இடம் (Location) மிக முக்கியம். நிலத்தின் அளவு, அமைந்திருக்கும் பகுதி போன்றவைகளும் முக்கியமானவையே. அத்துடன் கிடைக்கப் பெறும் சேவைகளும் (Amenities) முக்கிய மானவையே. கட்டிடத் தேவைகளுக்காக பாவிக்கப்படும் நிர்மாணப் பொருட்கள், அதற்கான கூலி (Labour) யும் மாறுபடும்.

எந்த வகையான நிர்மாணம் என்பதும் அதற்குரிய பொருட்செலவுகளும் (material) பெரிய பங்கு வகிக்கும். மேற்குறிப்பிட்ட வற்றிற்கு மேலதிக செலவாக மூன்று அடுக்கு அரசுகளிற்கும் (Central, Provincial, Municipal) கொடுப்பனவு செய்யும் செலவுகளும் (Land Development Charges) அடங்கும். இந்த land development செலவு கடந்த 10 வருடங்களாக பெரிய அளவில் அதிகரிக்கப்பட்டு வந்துள்ளது.

ரொறொன்ரோ பெரும்பாகத்தின் (GTA - Greater Toronto Area) வெவ்வேறு பகுதிகளில் 2004 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை இச்செலவு 143 வீதத்திலிருந்து 357 வீதம் வரை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இன்று ரொறொன்ரோவில் ஒரு அறை அடுக்குமாடி மனைக்கு அலகிற்கு $8,356 இலிருந்து சாதாரண வீட்டிற்கு $19,412 வரை அறவிடப்படுகின்றது.

செப்ரெம்பர் 24, 2013 இல் நிறைவேற்றப்படலாம் என எதிர்பார்க்கும் சட்டப்படி, இப்பெறுமதி $12,192 இலிருந்து $28,435 வரை அதிகரிக்கப்படலாம் என ஊகிக்கப்படுகின்றது. இவ்வாறு அதிகரிக்கப்படும் Land Development Fees, கட்டிட நிறுவனங்களில் அறவிடப்பட்ட போதிலும், இறுதியாக வீடு, மனை வாங்குபவர்களே செலுத்தியாக வேண்டும்.



புதிய அடுக்குமாடி மனையின் சதுர அடியின் விலையும் இதனால் அதிகரிக்கும் என்பதனை அறிந்து கொள்ளலாம்.

எனவே புதிதாக நிர்மாணம் செய்யும் மனைகள் / வீடுகளின் விலையில் அதிகரிப்பே ஏற்படும்.

### அடமானக்கடன் வட்டிவீதம் - மேல் நோக்கிய நகர்வு

நிதி நிறுவனங்கள், காலத்திற்கு காலம் ஏதாவது மாற்றங்கள் செய்து கொண்டே இருப்பதனை அனுபவத்தினால் காணக் கூடியதாக உள்ளது. இதன் ஒரு கட்டடமாக அண்மையில் தொடர்ச்சியாக ஏற்படுத்திய அடமானக்கடனின் மேல்நோக்கிய வட்டிவீத நகர்வைக் கொள்ளலாம். இளவேனில் காலத்தில் (Spring 2013) இலிருந்து அடமானக்கடனில் சிறிது சிறிதான அதிகரிப்பு ஏற்பட்டு வருகின்றது. இவ் அதிகரிப்பாய் ஏறக்குறைய 1% அதிகரிப்பு இதுவரை ஏற்பட்டுள்ளது.

இத்தொடர்ச்சியான அதிகரிப்பால் ஏறக் குறைய 10% மேலதிக அதிகரிப்பு, வீட்டின் செலவில் ஏற்பட்டுள்ளது. ஓகஸ்ட் 23, 2013 இல் இலிருந்து 5 வருடத்திற்குரிய றோயல் வங்கிக்குரிய வட்டிவீதம் 3.89% ஆகவும் TD வங்கி 3.79% ஆகவும் அதிகரிக்கப்படு கின்றது. இதே நிலைமை அமெரிக்காவிலும் ஏற்படுகின்றது. வட்டிவீதம் அதிகரிப்படு கின்றது. இந்த அதிகரிப்புகள், அடமானக் கடன் பெறுவதில் மேலும் இறுக்கமான நிலையை ஏற்படுத்தும் என்பதில் சந்தேக மில்லை. மே 2013 இல் 5 வருடத்திற்குரிய வட்டிவீதம் 2.89% ஆகக்காணப்பட்டது. இப்பொழுது ஏறக்குறைய 1% அதிகமாகக் காணப்படுகின்றது. இந்த வட்டிவீத அதிகரிப்பிற்கு முன்பாக 80% ஆன வாங்குனர்கள் நீண்டகால 5 வருட மாறாத (Closed) அடமானக்கடனையே எடுத்தார்கள் என்பது கவனிக்கத்தக்கது. எனினும் இவ்வாறான அதிகரிப்பு தொடரலாம் போலத்தான் தோன்றுகின்றது.

### இந்த வட்டிவீத அதிகரிப்பு, ஆதன வியாபாரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துமா?

இப்பொழுது பெறக்கூடிய சிறந்த மாறும் அடமானக்கடன் Variable Mortgage 2.5% ஆக உள்ளது. மாறுகின்ற வட்டிவீதம், கனடிய மத்திய வங்கியின் வட்டிவீதம் 1.0% ஆகவும், நிதி நிறுவனங்களில் முதன்மை வட்டி வீதம் 3% ஆகவும் காணப்படுகின்றது. பொருளாதார ஆய்வாளர்களின் அறிக்கைகளின் பிரகாரம் கனடிய மத்திய வங்கி ஆகக்குறைந்தது எதிர்வரும் ஒரு வருடத்திற்கு தனது வட்டி வீதத்தில் மாற்றம் ஏற்படுத்தாது எனத் தெரியவருகிறது. அதாவது மத்திய வங்கியின் வட்டிவீதமும் முதன்மை வட்டி வீதமும் முறையே 1% ஆகவும் 3% ஆகவும் காணப்படலாம்.


**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

*Independently Owned & Operated


“கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது”



*Raja Mahendran*, P.Eng.
Broker / Owner

**5215 Finch Ave, E, #203, Toronto. Tel.:416.321.6969**

**CONDO FOR SALE**
**NEILSON & MCLEVIN**



1 Bedroom condo for sale. 1 Washroom. Close to all facilities. price$139,900

**CONVENIENCE STORE FOR SALE**
**MIDDLEFIELD & FINCH**



Well established store for sale.Grocery / Audio /CD/ video/ Lotto/Stamps. Asking Price $89,000

**LESLIE & BLOOMINGTON**
Over 5000 Sq.ft. 3 Parking. Custom built home. Golfcourse + Natures area. Gated house. Only 74 neighbours. Avail. Summer 2014.

**CONDO FOR SALE**
**LAKE VIEW**
2 Bedroom condo for sale. 2 Washroom. Balcony. Close to all facilities. 2 Years old Price $399,900.

**HOUSE FOR SALE**
**EGLINTON & MIDLAND**



Free hold 2 storey town house for sale. Over 1600Sq.ft. 3 Bedroom finished bsmt. Close to RH King School. Asking Only $419,900

**CONDO FOR SALE**
**KENNEDY & HWY 401**
1 + 1 Condo for sale. 1 Washroom. Close to TTC, mall, school, bank. Asking price $270,900

**HOUSE FOR SALE**
**NEILSON & SHEPPARD**



Semi detached 4 bedroom house for sale. 2 Storey. Asking Only $299,900

# மரணத்தின் பின் கனடிய மத்திய அரசு வழங்கும் பண உதவி

# மரணத்தின் பின் குடும்பத்தவர்களுக்கு கனடிய மத்திய அரசு வழங்கும் பண உதவி

## கனடிய தகவல் தொடர் 202

உயிர் இழப்பு என்பது எந்தவொரு மனிதனுக்கும் எந்த நேரத்திலும், எந்த ரூபத்திலும் எவருக்கும் ஏற்படலாம் என்பது எல்லோரும் தெரிந்த ஒரு விடயம். ஒருவரின் உயிர் இழப்பின் பின்பு பாதிக்கப்பட போவது அவரில் தங்கியிருக்கும் குடும்பத்தவர்கள் மட்டுமே. உழைக்கும் பணத்தில் ஒரு சிறு தொகையினை செலவுகளோடு செலவாக செலுத்தி ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் (Life Insurance) என ஒன்றை முன்கூட்டியே செய்து வைத்திருந்தால் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு எஞ்சியிருக்கும் வாழ் நாளில் ஒரு சிறு ஆறுதலாக இருந்திருக்கும்.

இத்தகைய ஆயுள் காப்புறுதி ஒப்பந்தங்கள் செய்து வைத்தீர்களோ? அல்லது வைத்திருக்கவில்லையோ? அல்லது அவ்வாறு வைத்திருந்து ஆயுள் காப்புறுதியிலிருந்து ஒரு தொகை பணம் பெற்று கொண்டாலும், இன்னொரு நான்கு வழிகளில் கனடிய மத்திய அரசிலிருந்து ஒரு சிறு பணம் தொகையாக, தொடர்ந்து மாதாந்த சிறு வருமானமாக பெற்றுக்கொள்ளலாம்.

வீட்டினுள் மரணம் ஒன்று நடந்த அதிர்ச்சியினால் இவ்விண்ணப்ப மனுக்களை அனுப்பாவிட்டால் எப்படி நிவாரணம் கிடைக்கும்? மரணத்தினை உறுதிப்படுத்தும் அத்தாட்சியுடன் மனுவினை கனடிய அரசுக்கு அனுப்பினாலேயே நிவாரணம் கிடைக்கும்.

கனடிய தேசிய ஓய்வூதிய சேமிப்பு திட்டத்திலிருந்து (Canadian Pension Plan)

1. மரணமாகியவரின் குடும்பத்தினருக்கு ஒரு சிறு பணத்தொகை (CPP Death Benefit)

2. மரணமானவரின் மனைவி அல்லது கணவனுக்கு மாதா மாதம் வழங்கும் சிறு வருமானம் (CPP Survivor Benefit)

3. மரணமாகியவரின் மனைவி அல்லது கணவனுக்கு வழங்கும் இன்னொரு சலுகை பணம் (CPP Allowance for the Survivor)

4. மரணமாகியவரில் தங்கியிருக்கும் பிள்ளைகளுக்கு வழங்கும் சிறு வருமானம் (CPP Children Benefit)

இதுவரை மரணம், நடந்த அதிர்ச்சிகள், தாக்கங்கள் காரணமாகவோ அல்லது அறியாத நிலையிலேயோ மனு அனுப்ப தவறினால் பிரச்சினையே இல்லை. காலதாமதமாகவும் அனுப்பி தவறிய நிவாரணங்களையும் சேர்த்துப்பெறலாம். இக்குறிப்பிட்ட சிறுபண தொகை, சிறு மாதாந்த வருமானம் ஆகியவற்றினை மரணமடைந்தவரின் குடும்பத்திற்கு வழங்குவது கனடாவின் மத்திய அரசினால் நிர்வகிக்கப்படும் தேசிய ஓய்வூதிய சேமிப்பு திட்டத்திலிருந்து ஆகும்.

கனடாவின் தேசிய ஓய்வூதிய சேமிப்பு திட்டம் (Canadian Pension Plan) என்பது கனடிய மத்திய அரசினால், மாகாண அரசுகளின் ஒத்துழைப்போடு நிர்வகிக்கப்படுவது ஆகும். 18-70 வயதுக்கு இடைப்பட்ட காலத்தில் கனடாவில் தொழில் செய்து உழைக்கும் ஒருவர் தம்முடைய




மாத சம்பளத்தில் ஒரு சிறு வீதத்தினை சேமிப்பதுடன், தொழில் செய்து உழைப்பவரின் தொழில் வழங்கும் நிறுவனமும் (Employer) சேர்த்து, தம்மிடம் தொழில் செய்பவருக்கு ஒரு சிறுவீதத்தினை இவ் ஓய்வூதிய சேமிப்பு திட்டத்தில் மேலதிகமாக சேமித்து தொழிலாளியினை ஊக்குவிக்கின்றது. இவ் அரச ஓய்வூதிய சேமிப்பு திட்டம் என்பது இறுதிக் காலத்தில் தொழில் செய்யமுடியாது, ஓய்வு பெறும் நிலையில் உள்ளவர்களுக்கு கைகொடுக்க வேண்டும் என்பதற்காக அரசினால் உருவாக்கப்பட்டு நடைமுறை படுத்தப்படும் திட்டமாகும்.

இத்திட்டத்தில் தமது உழைப்பில் சிறுகச்சிறுக சேமித்து கொண்டு வரும் ஒருவருக்கே திடீர் என மரணத்தினை எதிர்கொள்ள வேண்டி வந்தால் இவரது சேமிப்பு திட்டம் குடும்பத்தவர்களுக்கு கை கொடுக்கின்றது. தொழில் எதுவும் செய்யாது இருந்து, இச்சேமிப்பு திட்டத்தில் சிறுக, சிறுக சேமிப்பினையும் மேற்கொள்ளாத ஒருவரின் மரணத்தின் பின்பு அவரது குடும்பத்தினர்கள் எதுவிதமான நிவாரணத்தினையும் பெறமுடியாது என்பது இங்கு முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயமாகும்)

தங்களின் இத்திட்டத்தில் மொத்தமாக எவ்வளவு பணதொகை ஒவ்வொரு முறையும் சேர்ந்துள்ளது என்பதனை (Up to date balance) விரும்பினால் அவரவரும் பரிசீலனை செய்து பார்த்து கொள்ளலாம்.

1. எவ்வளவு தொகை மொத்தமாக மரணமாகியவரின் தேசிய ஓய்வூதிய சேமிப்பு திட்டத்தில் சேர்ந்துள்ளது?

2. எவ்வளவு காலம் தொடர்ந்து மரணமாகியவர் தமது இச்சேமிப்பு திட்டத்தில் பணம் சிறுக சிறுக செலுத்தி கொண்டிருந்தார்.

என்ற இரு கேள்விக்கும் உள்ள விடையின் அடிப்படையிலேயே இங்கு மரணமாகிய பின்பு குடும்பத்தவர்களுக்கு வழங்கும் சிறு பணத்தொகை, மாதாந்த சிறு பண வருமானம் என்பது கணிக்கப்பட்டு தீர்மானிக்கப்படுகின்றது.

பின்வரும் நான்கு வகையான நிவாரணங்களை மரணமாகியவரின் குடும்பத்தவர்கள் இத்திட்டத்திலிருந்து பெறலாம்.

**கனடா தேசிய சேமிப்பு ஓய்வூதிய திட்டத்திலிருந்து மரணமாகியவரின் குடும்பத்திற்கு வழங்கும் ஒரு சிறு பணத்தொகை** (Canada Pension Plan Death Benefit)

தற்போது உள்ள சட்டப்படி ஆக கூடுதலான தொகையாக $2,500 டொலர் வரை ஒரு சிறு தொகையாக ஒருமுறை மட்டும் மரணமாகியவரின் குடும்பத்தவர்களுக்கு வழங்கப்படும்.
'Application for a Canada Pension Plan Death Benefit' என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் விண்ணப்ப படிவத்தினை அரச அலுவலுகத்தில் இருந்தோ, இணையதளத்தில் இருந்து பதிவு இறக்கம் செய்து எடுத்து நிரப்பி மரண அத்தாட்சி பத்திரத்துடன் (Death Certificate) சேர்த்து அனுப்புதல் வேண்டும். இவ்விண்ணப்பத்தில் (a) மரணமாகியவரின் விபரங்கள்: பெயர், விலாசம், பிறந்த இடம், காலம், சமூக காப்புறுதி இலக்கம், ஆணா? பெண்ணா? திருமணமாகியவரா? என்ற விபரம், மரணமாகிய தினம் ஏனைய நாடுகளில் வேலை செய்திருந்தால் அதுபற்றிய தகவல்கள், போன்ற விபரங்கள் வழங்கப்படல் வேண்டும்)

(b) பணம் பெற உரித்துடைய குடும்பத்தவரின் விபரங்கள் (Information about the Settlement of the Estate)

(c) விண்ணப்பம் சமர்பிப்பவர் பற்றிய விபரங்கள் (Information about the applicant)

(d) விண்ணப்பம் சமர்ப்பிப்பவரின் பிரகடனமும் கைச்சாத்திடலும் (Applicants Declaration)





சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


தொடர்ச்சி 12ஆம் பக்கம்


Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
**Cell: 613 850 9931**
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
**Buying or Selling**
**Relocation Service**
**Ottawa> > > < < < GTA**

நந்தா ஐயாத்துரை
**Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555**


Sell your home
faster
and more
money
Delaney & Westney
$299,000
6+1 Bedrooms, 3 W Rooms
Finished Bsmt With
3Pc Washroom
Maryham/Painted Post
$359,900
3 Bedrooms, 2 W Rooms
Finished
Basement
Kingston Road & Salem
$429,000
3 Bedrooms, 3 W Rooms
Walk-Out To A Large Wooden
Deck And Patio
Grand Ridge And Harmony
$439,990
4 Bedrooms, 3 W Rooms
Eating Area
With W/O To Yard
Bur Oak/Highway 48
$490,000
3 Bedrooms, 3 W Rooms
Interlock Drwy
Built-In Garage
Main St. / 9th Line
$513,800
4 Bedrooms, 3 W Rooms
2nd Floor Laundry
Service Entrance From
Garage
9th Line/South Of 16th
$529,000
3+1 Bedrooms, 3 W Rooms
Freshly Painted Through Out,
Double Car Garage
Mccowan/16th Ave
$529,800
3 Bedrooms, 3 W Rooms
Fantastic Location,
Interlock Walkway
Ravenshoe Rd /Hwy48
$579,000
Excellent Investment
Property Is 123 Acres,
14th &9th
$675,000
4 Bedrooms, 4 W Rooms
Open Concept Main Flr.
Eat-In-Kitch
W Of 9th Line / Bur Oak
$675,000
5 Bedrooms, 3 W Rooms
2860 Sq Ft. Main Floor
9'Ceiling & Office
Sheppard/Port Union
$699,000
4+1 Bedrooms, 4 W Rooms
Large Breakfast Area With
Walk Out To Large Deck
9th Line And 14th Avenue
$719,000
4 Bedrooms, 4 W Rooms
Upgraded Kitchen With
Walk-Out To Deck
Steeles & Markham 'Staines'
$850,000
6+1 Bedrooms, 5 W Rooms
Master Bedroom W/Gas
Fireplace And 5 Pc Ensuite
Kingston/Meadowvale
$914,000
5 Bedrooms, 4 W Rooms
Oak Staircase W/Iron Pickets,
Granite Counters In All Baths
When you list your home with Mike,you receive these Guarantees.
Your home advertised 24 hours a day until it is sold
Your home advertised in full color prints ads every week until it is sold
Our team of specialists for the same price as hiring a single agent
Your home sold in 30 days or we buy it
RE/MAX
#1
Elaguppillai Srinathan (Mike) B.Sc
Sales Representative/Builder
Direct 416 - 276-1225
Email: esrinathan@yahoo.com
KZG 647-200-5833
Ph1-7800 Woodbine Ave
Markham, ON L3R 2N7
Office: 905-470-9800
Fax: 905-470-7770
I can also assist you Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# என்றும் இளமை எப்போதும் ஆரோக்கியம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்


***FOREVER YOUNG ALWAYS HEALTH***

என்றும் இளமையுடன் இருப்பது என்பது நமது உடலானது வளர்ச்சியடைந்து வாலிபப் பருவத்தில் சுமார் 25-30 வயதில் இருந்தவாறு 70-80 வயதிலும் அதோ தோற்றப் பொலிவுடன் விளக்க வேண்டுமென்பதே பொருளாகும்.

1. முடி நரைக்காது கருமையாக இருக்க வேண்டும். தலையில் வழுக்கை விழக்கூடாது.
2. உடல் அங்கங்கள் அளவோடு இருக்க வேண்டும். தொப்பை உருவாகாதிருக்க வேண்டும்.
3. உடலின் தோலில் சுருக்கங்கள் விழக்கூடாது.
4. கண்ணாடி அணியாமலே 80-90 வயதிலும் கண்பார்வை பிரகாசமாக இருக்க வேண்டும். முகத்திற்கு இளம் வயதில் அழகு நடுவதைப் போலவே முதுமையிலும் கண்கள் பளிச்சென்று இருக்க வேண்டும். உள்ளே அமுங்கி விடக்கூடாது.
5. இளைமையின் சுறுசுறுப்பு முதுமையிலும் இருக்க வேண்டும்.
6. சிறுவயதில் இருந்த செரிமான சக்தி முதுமையிலும் தொடரவேண்டும்.
7. பற்கள் உறுதியாக இருக்க வேண்டும்.

மேலே சொன்னவாறு முதுமையிலும் நமது உடல் பொலிவுடன் விளங்கினால் என்றும் இளையுடன் இருக்கின்றோம் என கருதலாம்.

வயது கூடும்போது உழைக்கும் ஆற்றல்



குறைகிறது. உடல் பருமலடைகிறது. வேண்டாத கொழுப்புகள் உடலில் அதிகம் சேர்கிறது. உடலில் கொழுப்பு சேரும்போது செரிமான சக்தி குறைகிறது, மலச்சிக்கல் ஏற்படுகிறது. இதனால் நாம் உண்ணும் உணவே நஞ்சாகி நமது உடலைக் கெடுத்து முதுமையை சீக்கிரம் வரவழைத்து விடுகிறது. எனவே வயது ஏற ஏற மாவுச்சத்து, கொழுப்புச்சத்து உணவுகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும். தண்ணீர் நிறையக் குடிக்க வேண்டும். மாமிச உணவுகளை முடிந்தவரை குறைக்க வேண்டும்.

பொதுவாக 40 வயதைத் தாண்டிவிட்டால் உண்ணும் உணவின் அளவைக் குறைக்க வேண்டும். வசதி வந்த போதிலும் உடல் உழைப்பு இல்லாது உட்கார்ந்து விடலாகாது. ஏதாவது சிறு வேலைகளையாவது செய்து கொண்டிருக்க வேண்டும். உணவை நன்கு மென்று சாப்பிட வேண்டும். மிருகங்களின் கொழுப்பை (Animal fat) அதிகமாக உட்கொள்வதால் ஊனச்சதை வளர்ந்து இருதயம், சிறுநீரகம், கல்லீரல் போன்ற இராஜ உறுப்புகளைத் தாக்கும் நோய்களை உருவாக்குகிறது.

## பயிற்சிகள்

ஒவ்வொருவரும் தமது உடல் எடையினை தமது வயதிற்கும் உயரத்திற்கும் ஏற்றவாறு அளவாக வைத்துக் கொள்ள வேண்டும். இதற்கு நடைப்பயிற்சி பெருந்துணை புரிகிறது. காலையிலும், மாலையிலும் 20 நிமிடங்களாவது நடப்பதன் மூலம் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு, அழுத்தத்தின் அளவு (Pressure) என்பனவற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும். காலையில் சூரிய ஒளி சிறிது நேரமாவது உடலில் படும்படி செய்தால் அதிக பலனைத் தரும். குளிர்காலம் தொடங்கி முடியும்வரை வீட்டின் ஜன்னல்களை பூட்டிவைத்திருந்து அதனுள் பல மணிநேரங்களைக் களிப்பது உடல் ஆரோக்கியத்தை சீரழித்துவிடுகிறது. அதனால் படுக்கை அறைக்காவது பிராணவாயு கிடைக்ககூடியவாறு இடையிடையே ஜன்னல்களை இலேசாகத் திறந்து வைத்திருப்பது சிறந்தது.

## குறிக்கோள் நிறைவேற ஒரேவழி யோகா

இன்று உலகளாவியரீதியில் இளமைக்கும், அழகுக்கும், ஆரோக்கியத்திற்கும், யோகா தான் சிறந்ததென்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஏன் ஹொலிவூட் (Hollywood) மற்றும் பொலிவூட் (Bollywood) நடிகைகள் மற்றும் அழகிகள் கூட இந்த யோகா பயிற்சியைத்தான் மேற்கொண்டு தமது உடலையும் அழகையும் பராமரித்து வருவதாக அறிய முடிகிறது. எனவே இன்றைய உலகில் இதற்கு இணையாக வேறு எந்த பயிற்சிமுறையும் இல்லை என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இருப்பதாகத் தெரியவில்லை. இதிலுள்ள 5 கட்டங்கள் வருமாறு.

1. பொருத்தமான ஆசனங்கள் - Proper Excesses
2. முறையான மூச்சுப்பயிற்சி - Proper Breathing
3. தகுந்தபடி ஓய்வு - Proper Relaxation
4. ஒழுங்கான தியானப்பயிற்சி - Proper Meditation
5. சீரான உணவுத்திட்டம் - Proper Diet

இவற்றுள் முக்கியமான சில யோகாசனங்களைத் தேர்ந்தெடுத்து காலையிலும் மாலையிலும் முறைப்படி பயிற்சி செய்யும் போது உடலிலுள்ள நரம்புகள் அனைத்தும் தூண்டப்பெற்று எலும்புகள் அவற்றை இணைக்கும் மூட்டுக்கள் தசைகள் முற்றிலும் கசங்கி ஊனச்சதைகள் கரைந்து உடலுக்கு புத்துணர்ச்சியையும் புதுப்பொலிவையும் தந்து இளமையை மேலோங்கச் செய்கின்றன.

அடுத்து மூச்சுப்பயிற்சியை எடுத்துக் கொண்டால் மூச்சுக்காற்றுத்தான் உயிர் காற்று. அதுதான் ஆன்மா. அதுதான் பிராணசக்தி. அதன் தன்மைக்கேற்றவாறு ஒருவரது உடல் ஆரோக்கியமும், ஆயுட்காலமும் அமைகின்றன. எனவே இந்த உன்னதமான மூச்சுப்பயிற்சி என்னும் பிராணாயாமத்தை முறைப்படி பழகி வரும்போது உடலும் உள்ளமும் சீராகும். இதனை ஒரு யோகாசன ஆசிரியரின் துணையுடன் ஆரம்பத்தில் பயில வேண்டும். முறைதவறி செய்தால் தீமையும் விளையக்கூடும்.



தொடர்ந்து வேலை செய்பவர்கள் தமக்கான ஓய்வும் உறக்கமும் போதியளவு கிடைப்பதற்கு நேரம் ஒதுக்க வேண்டும். அத்துடன் தினமும் குறிப்பிட்ட நிமிடங்களாவது தியானம் (Meditation) செய்து வரவேண்டும். தியானம் என்பது கண்களை மூடி ஓரிடத்தில் அமர்ந்திருப்பதல்ல. மனத்தை ஒருமுகப்படுத்தி ஒன்றின்மீது நிலைநிறுத்தும் பயிற்சியாகும். இதனைத் தொடர்ந்து செய்து வந்தால் நினைத்த காரியம் எளிதில் கைகூடும். நமது தலைவிதியை மாற்றி அமைக்கும் அளவுக்கு அனைத்தும் வசமாகும்.


மேற்கூறப்பட்ட வழிமுறைகளை அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்தி வந்தால் வயதில் முதுமையடைபினும் உடல் தோற்றத்தில் என்றும் இளமையுடன் ஆரோக்கியமாக வாழ்வது உறுதி. சந்தேகங்கள் இருந்தால் என்னுடன் தொடர்பு கொள்ளவும்.






416.289.2033 after 7:00pm
416.617.5721

**LOTUS KID'S EARLY LEARNING**




*WE PREPARE AN EARLY EDUCATION FOR YOUR CHILDREN.*

**Ages From 3 - 6**

*We Help Prepare Your Children With an*
**EARLY EDUCATION**
*Allowing Them to Play and Learn Together*
*Focusing On Co-Operation and Team Work!*

***Starting On September 2013***

**உங்கள் மழலைகளின் கல்வி எதிர்காலத்துக்கு நாங்கள் வித்திடுகின்றோம்.**


***FOR EARLY ADMISSIONS CALL : 416.738.8824***
***3011 MARKHAM ROAD UNIT 58 M1X 1L9***

# காலத்தோடு வளரும் கணினிகள் - 28

அன்பான வாசகர்களே!

கடந்த இதழில் மைக்கிரோ சொவ்ற் வேட் என்ற சொற்பரிமாற்ற மென்பொருளினைப் பயன்படுத்துவதற்கான செயன்முறைக் குறிப்புக்களைக் கொடுத்திருந்தேன். இந்த இதழில் மேலும் இதுபற்றிப் பல விபரங்களைக் குறிப்பிட விரும்புகின்றேன். மைக்கிரோ சொவ்ற் வேட் மென்பொருளில் ஒரு Document இனைத் திறந்து தட்டச்சு செய்து கொண்டிருக்கும் பொழுது Home menu இன் கீழ் காணப்படும் மேலும் சில கட்டளைகளைப் பற்றிக் கவனிப்போம். இடது புற மூலையில் காணப்படும் Cut, Copy, Paste கட்டளைகளுக்கு அருகில் Fonts Tool bar காணப்படும். Arial, Tahoma போன்ற Fonts களில் ஏதோ ஒரு எழுத்துருவின் (Fonts) பெயர், Fonts Size என்பன காணப்படும். இவற்றிற்கு அருகில் உள்ள கீழ் திசை நோக்கிய அம்புக்குறிகளில் மவுஸின் பொயின்ரரை (Pointer) வைத்து கிளிக் செய்வதன் மூலம் பல்வேறு எழுத்துருக்களையும், அவற்றின் அளவுகளையும் தெரிவு செய்ய முடியும். விரும்பிய சொற்களை, வசனத்தை அல்லது பந்தியை ஹைலைற் செய்து விட்டு எழுத்துருக்களையும் அளவினையும் மாற்றிக் கொள்ளலாம். இவ்வாறே எழுத்துருவின் நிறம், Bold Letter, Italic, Underline போன்றவற்றையும் இதே இடத்தில் காணப்படும் Tool Bar இனைப் பயன்படுத்திச் செய்து கொள்ளலாம்.

நாங்கள் தட்டச்சு செய்த ஒரு வசனம் Document இல் Center Aligned ஆகக் காணப்பட வேண்டுமானால் Home menutpy; Font Settings Tool Bar க்கு அடுத்ததாக வலது பக்கமாகக் காணப்படும் Paragraph Alignment தெரிவுகளைப் பயன்படுத்தலாம். Paragraph Alignment க்கு மேலாக Bullets க்குரிய தெரிவுகள் காணப்படும். உதாரணத்திற்கு ஒரு சுயவிபரக்கோவை (Resume) செய்யப் போகின்றீர்கள் என்று வைத்துக் கொண்டால் இந்த Bullets மிகவும் பயனுள்ளதாக இருக்கும். சொற்களுக்கு அல்லது வசனங்களுக்கு முன்பு ஒரு குற்று, அம்புக்குறி, உரோமன் இலக்கம், இலக்கம் அல்லது எழுத்துக்கள் போன்ற குறியீடுகளைப் போடுவதையே Bullets என்று அழைப்போம். ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட பந்தியை ஹைலைற் செய்து விட்டு Paragraph Tool bar இனது வலது புறக்கீழ் மூலையில் உள்ள அம்புக்குறியை கிளிக் செய்ததும் Paragraph Dialog Box தோன்றும். இந்த Dialog Box இல் உள்ள Line Spacing தெரிவின் மூலம் பந்தியொன்றில் அல்லது முழு Document இல் வசனங்களிற்கிடையே உள்ள இடைவெளியை அமைத்துக் கொள்ளலாம். Double spacing, 1.5 line spacing போன்ற தெரிவுகள் மிகவும் முக்கியமானவை. ஒரு பந்தியின் முதலாவது வசனம் தொடங்கும் இடம் பந்தியில் உள்ள ஏனைய வசனங்களை விட வேறுபட்டு இருப்பதை Indent Level என்று மைக்கிரோ சொவ்ற் மென்பொருளில் குறிப்பிடப்படுகின்றது. View menu இனைத் தெரிவு செய்து விட்டு Ruler என்பதைத் தெரிவு செய்து கொண்டால் Document இனது தொடக்கத்திற்கும் Tool Bar இற்கும் இடையில் அளவுச் சட்டம் (Ruler Line) காணப்படும். இதில் கீழ் வரிசையில் காணப்படும் இரண்டு முக்கோணங்களும் வலது, இடது எல்லைகளைக் (Right, Left Margins) குறிக்கும். சட்டத்தின் மேல் வரிசையில் உள்ள இடது புறத்தில் மட்டும் உள்ள முக்கோணம் பந்தியில் உள்ள First Line Indent இனைக் குறிக்கும். இதனை நகர்த்துவதன் மூலம் அல்லது Paragraph Tool Bar மூலமாக First Line Indent இனை மாற்றிக் கொள்ளலாம். தட்டச்சு செய்யப்படும் சொற்கள், வசனம், அல்லது பந்தியொன்றை நிறத்தினால் பூச்சு (Shading) செய்வதற்குரிய தெரிவும் Paragraph Tool Bar இல் காணப்படும். ஆனால் ஹைலைற் பேனாவால் அடையாளம் செய்வதற்குரிய தெரிவு Font Tool Bar இல் உள்ளது. Home Menu இல் மேலும் சில வசதிகள் உள்ளன. இவற்றை காலப்போக்கில் நீங்களாகவே அறிந்து கொள்ளலாம்.






Home, Insert, Page Layout, References, Mailings, Review, View போன்ற Menu headings காணப்படும் சட்டத்தை Quick Access Tool Bar என்றும் அழைப்பதுண்டு. இப்பொழுது Insert menu இல் காணப்படும் சில வசதிகளைப் பற்றிக் கவனிப்போம். மைக்கிரோ சொவ்ற் வேட் கோப்பொன்றில் ஒரு படத்தைச் செருக (Insert) வேண்டுமாயின் Insert menu இல் உள்ள Picture button இனை கிளிக் செய்ய Insert Picture Dialog Box தோன்றும். அதில் தோன்றும் உங்கள் கணினியில் உள்ள My Picture என்ற கோவையில் (Folder) உள்ள படங்களுக்குரிய கோப்புக்களின் பட்டியலில் இருந்து விரும்பிய கோப்பினை ஹைலைற் செய்து விட்டு Picture Dialog Box இன் அடிப்பாகத்தில் காணப்படும் Insert Button இனை கிளிக் செய்ததும் குறிக்கப்பட்ட படம் மைக்கிரோ சொவ்ற் வேட் Document இல் செருகப்படும். செருகப்பட்ட படத்தில் சில மாற்றங்களைச் செய்ய விரும்பினால் படத்தை ஹைலைற் பண்ணி விட்டு Right கிளிக் செய்யத் தோன்றும் பட்டியலில் Format Picture இனைத் தெரிவு செய்யும் பொழுது தோன்றும் Format Picture Dialog Box மூலமாகச் செய்து கொள்ளலாம். படத்தின் அளவையும் மாற்றிக் கொள்ளலாம். படத்தை ஹைலைற் பண்ணி விட்டு Right கிளிக் செய்யத் தோன்றும் பட்டியலில் Borders and Shading என்ற தெரிவின் மூலமாக படத்தைச் சுற்றி Borders போட்டுக் கொள்ளலாம்.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக் கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப்படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.



- அகணி -
authorakani@yahoo.com

Homelife / Future. Realty Inc. Brokerage*
Have a Dream....
Let Me Help you!



HWY 7 & 9TH LINE
4 Bedrooms house for rent. Parking, laundry,
3 washrooms, double garage, granite countertop
Close to school, hospital, mall, etc.
Avail. immediately.

Rajkumar Rasiah
Sales Representative
Cell: 416.707.1674
*Independently Owned & Operated

LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்



SECOND CAREER
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள்
அரசாங்க நிதி உதவியில் கற்கலாம்
TUITION FEES, BOOKS, LIVING EXPENSES
DAY CARE & TRANSPORTATION UP TO $28000
அனைத்தும் இலவசம்
(திருப்பிச் செலுத்தத் தேவையில்லை)
Second Career மறுக்கப்பட்டவர்கள்,
New Immigrants are also Welcome

DIPLOMA PROGRAMS
Accounting & Payroll Admin.
DURATION: 35 WEEKS (CO-OP AVAILABLE)
Business Administration
DURATION: 26 WEEKS
Computerized Accounting
DURATION: 26 WEEKS
Medical Office Admin.(MOA)
DURATION: 32 WEEKS
Personal Support Worker(PSW)
(NACC DIPLOMA)
DURATION: 26 WEEKS
CERTIFICATE COURSES
MS OFFICE 2010, QUICK BOOKS 2011
SIMPLY ACCOUNTING 2011, ACCPAC 5.6
CANADIAN SECURITIES COURSE
BANK TELLER, FIRST AID & CPR
FOOD HANDLER CERTIFICATION
100% INSTRUCTOR LED SMALL CLASS SIZE
HIGH EMPLOYMENT RATE FREE PARKING
☎ 416-291-5155 ☎
4465 Sheppard Ave. East #208
(Sheppard & Brimley) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(REGISTERED AS A PRIVATE CAREER COLLEGE UNDER THE PRIVATE CAREER COLLEGES ACT 2005)

# மரணத்தின்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

(e) சாட்சி ஒருவரின் பிரகடனமும், கைச்சாத்திடலும் (Witness's Declaration)

**2. மரணமாகியவரின் மனைவி அல்லது கணவனுக்கு மாதா மாதம் வழங்கும் சிறு வருமானம்**
(Survivor Benefit)

இதனை விதவை பென்சன் என குறிப்பிடலாம். சராசரியாக தற்போதுள்ள நிலவரப்படி மாதம் மாதம் ஆக கூடுதலாக $280 - $545.25 வரை தேசிய சேமிப்பு திட்டத்திலிருந்து மரணமாகியவர் செலுத்திய தொகைகள், செலுத்திய காலங்களின் அடிப்படையில் கணக்கிட்டு வழங்கப்படும். இக்கணக்கீடு என்பது விதவையாக இருப்பவர் எந்த வயதில் இதற்கு விண்ணப்பம் செய்யும் போது இருக்கின்றார், என்ற அடிப்படையிலும் தீர்மானிக்கப்படும். விண்ணப்பம் கிடைத்து பன்னிரண்டு கிழமைகளுக்கு பின்னர் மாதா மாத கொடுப்பனவு ஆரம்பித்து விடும். மாதா மாதம் வழங்கும் இக்கொடுப்பனவு என்பது நேரடியாகவும், காசோலையாகவும் அனுப்புவார்கள். இதனை பெற்றுக்கொள்ள உரித்துடையவர் தமது வங்கிக் கணக்கு இலக்க விபரங்களை சமர்ப்பிக்கும் போது நேரடியாக வங்கி கணக்கிலும் வைப்பு செய்வார்கள் (Direct Deposit) விதவையாக உள்ள மனைவி அல்லது கணவன் சில நேரங்களில் இன்னொரு திருமணம் சட்ட ரீதியாக செய்தாலும் இக்கொடுப்பனவுகளை தொடர்ந்து பெற்றுக் கொண்டேயிருக்கலாம்.

***'APPLICATION FOR A CPP SURVIVORS PENSION & CHILDREN BENEFITS***
என ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்ட விண்ணப்ப படிவம் பெற்று நிரப்பி வழங்குதல் வேண்டும். இதே விண்ணப்பத்தில் (a) மரணமானவரின் மனைவி அல்லது கணவனுக்கு வழங்கும் சிறுவருமானம் (CPP Survivor Benefit) மற்றும் இங்கு நான்காவதாக குறிப்பிடப்படும்,

(b) மரணமாகியவரில் தங்கியிருக்கும் பிள்ளைகளுக்கு வழங்கும் சிறு வருமானம் (CPP Children Benefit) ஆகிய இரு தேவைகளுக்கும் ஒரே விண்ணப்பத்தில் மனு செய்யலாம். இவ் விண்ணப்பத்தில்

- மரணமாகியவர் பற்றிய விபரங்கள்
- நட்டஈடு கோருபவரின் விபரங்கள்
- மரணமாகியவரில் தங்கியிருக்கும் பிள்ளைகள் பற்றிய விபரங்கள்
- விண்ணப்பம் இவர்கள் சார்பில் வேறு ஒரு பிரதிநிதி சமர்ப்பிப்பவராக இருந்தால் அவர் பற்றிய விபரங்கள்
- உறுதிபடுத்தும் கையெழுத்துக்கள்

போன்ற தகவல்களுக்கு தெளிவாக பதில் வழங்குதல் வேண்டும்.

**3. மரணமாகியவரின் மனைவி அல்லது கணவனுக்கு வழங்கும் இன்னொரு சலுகை பணம்**
(Allowance for the Survivor)

கணவனை அல்லது மனைவியினை இழந்த விதவை ஒருவர் இக்குறிப்பிட்ட மேலதிக சலுகை பணத்தினை பெற வேண்டுமானால் பின்வரும் தகமைகளுக்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

- விதவை என்ற நிலையில் உள்ள கணவன் அல்லது மனைவி 60 - 64 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
- கனடாவின் பிரஜா உரிமை அல்லது நிரந்தர வதிவுரிமை உடையவராக இருத்தல் வேண்டும்.
- கனடாவில் 18 வயதின் பின்பு குறைந்தது பத்து வருடங்களேனும் வாழ்ந்து இருத்தல் வேண்டும்.
- வருமானம் ஒரு குறிப்பிட்ட எல்லையில் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

இக்குறிப்பிட்ட சலுகை கொடுப்பனவு என்பது தற்போதுள்ள நிலவரப்படி ஆக கூடுதலாக



மாதம் $587.79 வரை, சேமிப்பில் வழங்கப்பட்ட மொத்ததொகை, காலம் என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்டு வழங்கப்படும்.

அதாவது மரணமாகியவரின் குடும்பத்தில் உள்ள மனைவி அல்லது கணவன் வயதும் முதிர்ந்து ஒரு குறிப்பிட்ட இடைக்காலத்தில் வருமானமும் குறைந்த நிலையில் இருக்கும் சந்தர்ப்பம் உருவாகியிருந்தால் மட்டும் இச்சிறு சலுகையினை பெற மனு செய்து பார்க்கலாம். இதற்கு விண்ணப்பிக்கும் மனுவில்

- மனு செய்பவர் பற்றிய விபரங்கள்
- இறந்தவருக்கும் மனு செய்பவருக்கும் உள்ள திருமண பந்த உறவு
- சட்ட ரீதியான வதிவுரிமை
- கனடாவில் வாழும் காலம்
- ஏனைய நாடுகளில் இருந்து பெறும் பண வருமானம் இருந்தால் அது பற்றிய விபரங்கள்

போன்ற பல வினாக்களுக்கு விண்ணப்பத்தில் பதில் வழங்குதல் வேண்டும்.

**4. மரணமாகியவரில் தங்கியிருக்கும் பிள்ளைகளுக்கு வழங்கும் சிறு வருமானம்** (CANADA PENSION PLAN CHILDREN'S BENEFITS)

மரணமாகியவருக்கு பதினெட்டு வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் இருந்தால் அவர்கள் ஒரு சிறு மாத வருமானம் மரணமடைந்த தங்கள் தாய் அல்லது தகப்பன் செலுத்தி வந்த கனடா ஓய்வூதிய சேமிப்பு திட்டத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். 18 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகள் மட்டுமே இக்குறிப்பிட்ட நிவாரணம் பெறலாம். 18 வயதுக்கு மேற்பட்ட நிலைமையாக இருந்தால் 25 வயதுவரை முழுநேர மாணவனாக அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில் பயின்று கொண்டிருந்தால் தொடர்ந்து பெறலாம் 25 வயதினை கடந்தவுடன் இப்பண வருமானம் நிறுத்தப்பட்டு விடும்.

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# ஆரோக்கியமான மனிதன்

## ஓடும் நீர் உறைவதில்லை 172

ஆரோக்கியமான மனிதன் என்றவுடன் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சிறந்த உடல் நலம் கொண்ட ஒருவர் என்பதுதான் முதலில் எமது தெரிவாக இருக்கும். சில சந்தர்ப்பங்களில் உடல் ஆரோக்கியம் மட்டுமல்ல உடலுடன் சேர்ந்து மனமும் ஆரோக்கியமாக இருப்பது எனக் கருதுகிறோம். உண்மையான ஆரோக்கியம் என்பது என்ன என்பதை பகிர்ந்து கொள்வதே இக்கட்டுரையின் அடிப்படை நோக்கமாகும். முதலில், உடல் ஆரோக்கியம் பற்றிய பார்வையைச் செலுத்துவோம். உணவு, உடல் சார்ந்த ஒழுக்கம், உடற்பயிற்சி என்பனவற்றின் கூட்டு விளைவே உடல் ஆரோக்கியத்தின் அடிப்படையாகும். ஆரோக்கியமான உடலுக்கு உணவின் தன்மை, அதன் ஊட்டச்சத்தின் பங்கு, உணவின் அளவு, உடலின் ஒப்புதல் என்பன மிகவும் முக்கிய விடயங்களாக அமைகின்றன. உணவின் மிக முக்கியமான வெளிப்பாடு என்னவெனில் உண்ணும் வரை தாமாக இருந்தவை உண்டவுடன் அவை நாமாக மாற்றப்பட்டு விடுவதுதான். அதாவது தாமாக இருந்தவற்றை உண்பதன் மூலம் நாமாக மாற்றிவிடுகிறோம். எனவே எந்த வகையான உணவுகள் எம்மில் ஒரு பகுதியாக வேண்டும் என்பது எமது தெரிவு களால் தீர்மானிக்கப்படுகின்றன. உணவைப் போன்றே உடல் சார்ந்த ஒழுக்கங்களும் உடல் நலத்தின் பிரதான தேவைகளாகும். சூழல் சுத்தம், உடல் சுத்தம், ஓய்வு, உறக்கம், உடல் உழைப்பின் அளவு போன்றனவும் ஒழுங்கான தொடர்ச்சியான உடற்பயிற்சியும் அவசியமாகின்றன.

ஆரோக்கியத்தின் அடுத்த பகுதியாக மன நலம் அவசியமாகின்றது. மன நலம் என்பது மிகவும் ஆழமான பார்வைக்கு உட்படுத்தவேண்டியது. இருப்பினும் ஒருசில விடயங்களைப் பகிர்ந்து கொள்வோம். மனம் என்பது எண்ணங்களின் பண்டகசாலை. எமது எண்ணங்களே எமது தெரிவுகளையும் அதன் மூலம் வாழ்க்கையின் நிலையையும் தீர்மானிக்கின்றன. மனத்தின் பாவம் அல்லது மனத்தின் வெளிப்பாடு அல்லது மனோபாவம் என்பது ஒரு மனிதனின் வாழ்க்கை நிலையைத் தீர்மானிக்கும் அளவுகோலாக அமைகின்றது. மனோபாவம் என்பது பல்வேறு அடையாளங்களாக இனங்காணப்படுகின்றன. இதை அடிப்படையாக வைத்தே ஒருவர் பற்றிய மற்றவர்களது பார்வை அல்லது மதிப்பீடு வெளிப்படுத்தப்படுகின்றது. இந்த வகையான மதிப்பீடுகளோ எண்ணற்றவை. எண்ணற்றவை மட்டுமல்ல மிகப் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அர்த்தமற்றவையுமாகும். ஒருவர் பற்றிய இன்னொருவரது மதிப்பீடானது ஒப்பீட்டின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது. ஒருவரை நாம் அவரது கல்வி, பொருளாதாரம், சமூக நிலை என்பவற்றில் ஒப்பீடு செய்யலாம். இவை ஒப்பீட்டுக்கான அளவுகோல்களே.



இந்த அளவீடுகள் பலருக்கிடையில் பொருத்தமானதாக இருக்கும். ஆனால் ஒருவரது மனோபாவம் சார்ந்த அளவீடுகள் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக, ஒரே அளவானதாக அமைவதில்லை. அமையவும் முடியாது. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் தனித்துவமானவனாக இருப்பதும் தனித்துவம் என்பது ஒப்பீட்டுக்கு இடமளிப்பதில்லை என்பதுமாகும்.
அடுத்து நாம் கவனத்திற்கொள்ள வேண்டிய

**KG Master**
www.kgmaster.com
www.facebook.com
kgmaster.lifecoach

விடயம் ஒருவரது உண்மையான ஆரோக்கியத்தைத் தீர்மானிப்பது எது? என்பதுதான். முன்னர் குறிப்பிட்டதைப் போன்று உடல் நலம் சம்பந்தமாக எம்மால் மேற்கொள்ளக்கூடிய அத்தனை வழிமுறை களையும் நாம் கடைப்பிடித்தாலும் எமது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பல காரணிகள் எமது உடல் நலத்தில் செல்வாக்கைச் செலுத்துகின்றன என்பதை நாம் கருத்தில் கொள்ளல் வேண்டும். சில சந்தர்ப்பங்களில் சில நோய்கள் எம்மை அறியாமலேயே எம்மைக் கைப்பற்றி விடுகின்றன. "இந்த நோய் எனக்கு எப்படி வந்தது?" என்று நாமே அதிர்ச்சியடைந்து விடுகிறோம். அதுமட்டுமன்றி, உடலானது முதிர்ச்சியை நோக்கி நகர்வதால் அதன் செயற் திறனும் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவையாக அமைகி ன்றது. அடுத்து நாம் கருத்தில் கொள்ள வேண்டிய விடயம் மனம் சார்ந்தது. மனம் ஆரோக்கியமாக இருந்தால் உடலும் ஆரோக்கியமாக இருக்கும் என்பது நாம் எல்லோரும் அறிந்துள்ள விடயம். எவ்வளவு தான் செல்வங்களும், வசதி வாய்ப்புக்களும் இருந்தாலும் மனம் சந்தோசமாக இல்லா விட்டால் எல்லாமே பயனற்றுப் போய்விடும் என்பதும் நாம் அறிந்ததே. நலமான உடலைக்கூட நலமற்ற மனம் மோசமாகத் தாக்கிவிடுகிறது. எனவே ஆரோக்கியமான மனம் கொண்டவனே ஆரோக்கியமான மனிதன் என்பது உறுதியாகிவிடுகின்றது.

ஆரோக்கியமான மனிதன் என்பவன் ஆரோக்கியமான மனத்தைக் கொண்டவன் என்பதைப் பார்த்தோம். ஆரோக்கியமான மனம் கொண்டவன் யார்? திடமான, உறுதியான மனம் கொண்டவன் தான் ஆரோக்கியமானவன். இந்தத் திடமும் உறுதியும் உள்ள மனத்தைக் கொண்டவன் யார்? தாழ்வு மனப்பான்மை இல்லாத மனிதன் தான் அவன். அதாவது, தனக்குள்ளே தாழ்வு மனப்பான்மையைக் கொண்டிராதவன் தான் ஆரோக்கியமான மனிதன். தாழ்வு மனப்பான்மை என்பது மிகக் கொடிய நோய். ஆரோக்கியமான வாழ்க்கைக்கு மிகப் பெரிய தடை, மிக மோசமான எதிரி. தாழ்வு மனப்பான்மை வேண்டவே வேண்டாம். ஆரோக்கியமான மனிதனாக வாழ்வதற்குத் தப்பித் தவறிக்கூட தாழ்வு மனப்பான்மை உங்களைத் தொட்டு விட அனுமதிக்கக் கூடாது. ஏனெனில் தனக்குள்ளே தாழ்வு மனப்பான்மையைக் கொண்டிராத மனிதன் மட்டுமே ஆரோக்கியமான மனிதனாவான்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். - நன்றியுடன் KG Master

## கந்தன் துதிபாடு பேதைமனமே!



மயிலேறி வான மடமாதி னோடும்
மண்மீது வந்த எழிலின்
ஒயிலான கானக் குறமாதி னோடும்
ஒளிர்ஞான வேலும் மிளிர
மயல்கொண்ட வாழ்வு மருள்தீர உள்ளத்
தருள்பெய்து வேலன் வருவான்!
உயர்வான நல்லைப் பதிசென்று கந்தன்
துதிபாடு பேதை மனமே!

பகைகொண்ட சூரர் படைவென்று ஆறு
படைகொண்ட முருகன் மணியின்
நகைகொண்ட மாதின் நகைகண்டு காதல்
நலமுண்ட போதும் அருளின்
குகைகொண்ட நெஞ்சம் குடிகொண்டு வாழும்
குகனாகும் பக்தி நெறியின்
மிகைகண்ட நல்லைப் பதிசென்று கந்தன்
அருளுண்ண முந்து மனமே!

புவிவாழ்வி லேமெய்ப் பொருள்காண வேண்டின்
புகழ்நல்லை சென்று தொழுவாய்!
அவவாழ்வி லேமெய் அலையுண்டு ஆசை
வலைவீசு மாதர் உடலில்
குவியின்பம் கண்டும் தொழுநோய் உழன்றும்
அருள்கொண்ட அருண கிரியைக்
கவிபாட வைத்த தமிழ்த்தெய்வம் தன்னைக்
கனிவோடு பாடு மனமே!

- T. சிவயோகபதி

அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹராஜியின் உரைகள்



On DVD
இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

On TV
Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219

# தாய் மொழி தமிழையும் தமிழ் பண்பாட்டையும் தரணியெங்கும் தளிர்க்கச் செய்த தனிநாயகம் அடிகளார்!

அகிலமதில் ஆதி மொழி, அழகு தமிழ், பழந்தமிழ், தீந்தமிழ், சீரிழமை குன்றாத்தமிழ், இன்பத்தமிழ், செந்தமிழ் என பல்வேறு வர்ணனைகளைக் கொண்ட அற்புதமான மொழி எமது தாய் மொழியான தமிழ். அத்தகைய பெருமை மிகு எம் தாய் மொழியினை தமிழரல்லாத பிறமொழி அறிஞர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து பற்றினை ஏற்படுத்தியதோடு மாத்திரம் நின்று விடாது அவர்கள் நமது மொழியின் சிறப்பியல்புகள் குறித்து ஆராய்ச்சியினை மேற்கொள்ளவும் வித்திட்ட வித்தகர் நமது தனிநாயகம் அடிகளார். இதன் மூலம் தன்னிகரில்லா தமிழ் மொழியின் சிறப்பினை தரணி எங்கும் தளிர்க்கச் செய்தவர் தனிநாயகம் அடிகளார். "தமிழுக்கு தொண்டு செய்வோன் சாவதில்லை" என்ற கூற்றுக்கு உதாரண புருஷராகத் திகழ்பவர் வண. தனிநாயகம் அடிகளார். அதனால் தான் இன்று அகில உலகெங்கும் வாழும் தமிழர்கள் அவரது நூறாவது பிறந்த தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

அன்று முதல் அண்மைக் காலம் வரை அழகு குன்றாது, ஆரிய மொழியான சமஸ்கிருதம் போன்று வழக்கொழிந்து போகாது கன்னி மொழியாக, கன்னல் மொழியாக கனகமதில் காலூன்றி நிற்கும் அன்னை தமிழின் அந்தமிலா வாழ்விற்கு அயராது உழைத்த தமிழ் அறிஞர்கள் யாவரும் தமிழ் உள்ளளவும் போற்றிப் புகழப்பட வேண்டியவர்களாவர். அத்தகைய ஆற்றல் மிக்க அறிஞர்களான ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, சுவாமி விபுலானந்தர், வித்துவான் உ.வே.சாமிநாத ஐயர், சி.கணேசையர், வண. தனிநாயகம் அடிகள் ஆகியோர் தமிழ் மக்களினால் என்றென்றும் போற்றி மதிக்கப்பட வேண்டியோராவர்.



ஊர்காவற்றுறையை அண்மித்துள்ள எமது கிராமமான கரம்பொன் கிராமத்தில் வண. தனிநாயகம் அடிகளார் 1913ம் ஆண்டு ஆகஸ்ட் 2 ஆம் திகதி நாகநாதன் ஸ்ரனிஸ்லாஸ், சிசில் இராசம்மா ஆகியோரின் அருந்தவப் புதல்வராகப் பிறந்தார். அவரது சகோதரியின் கணவரான திரு.பிலிப்புப்பிள்ளை காவலூர் புனித அந்தோனியார் கல்லூரியில் எமக்கு ஆங்கிலம் போதித்தார். தற்போது கனடாவில் வசித்து வரும் அவரது மகனான திரு.ராஜன் பிலிப்புப்பிள்ளையும் எம்முடன் அதே கல்லூரியில் கல்வி பயின்றார். கரம்பனில் பிறந்து பின்னர் நெடுந்தீவில் வளர்ந்து உலகெலாம் நெடுந்தூரப் பயணம் செய்து தமிழ் மொழியையும், தமிழ் கலாச்சாரத்தினை யும் வேற்று மொழியினரிடையே பரப்பி தமிழ் மொழிக்கு மறுமலர்ச்சியினை ஏற்படுத்திய பெருமைக்குரியவர் வண. தனிநாயகம் அடிகள். உயிர் தமிழுக்கு என்ற உயர் பண்புடன் தொண்டாற்றிய அந்த உத்தமர் பிறந்து நூற்றாண்டு காலமாகியும் அன்னாரை தமிழ் மக்கள் மறந்து விடாது இன்று அகில உலகெலாம் விழா எடுத்து கௌரவித்துக் கொண்டிருக்கின்றனர்.

ஆரம்பக் கல்வியை காவலூர் புனித அந்தோனியார் கல்லூரியில் மேற்கொண்ட இவர் பின்னர் யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரியிலும், மறைக் கல்வியை கொழும்பு புனித பேர்னாட் மிசனரியிலும் மேற் கொண்டார். பின்னர் திருவனந்தபுரம் மறை மாவட்டத்திலும், றோம் நகரிலும் மறைக் கல்வியை கற்று இறையியலில் முனைவர் பட்டம் பெற்றார். யாழ்ப்பாணத்திலிருந்து றோமுக்கு சென்று மறைக் கல்வியை மேற் கொள்ள தெரிவு செய்யப்பட்ட முதலாவது தமிழ் மாணவன் இவரேயாவார். அங்கு கல்வி கற்று 1938 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் திகதி குருவாக திருநிலை படுத்தப்பட்டு வெளியேறினார். அதன் பின்னர் தமிழகத்தில் மத சேவையில் ஈடுபட்டு வந்த அடிகளார் தமிழ் நாடு வடக்கன் குளத்திலுள்ள புனித திரேசாள் உயர் பாடசாலையில் 1941 ஆம் ஆண்டு முதல் 1945 ஆம் ஆண்டு வரை ஆசிரியராகப் பணியாற்றினார். அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் தமிழ்த்துறை முதுகலை மாணவராக இணைந்து "பழந்தமிழ் கவிதையில் இயற்கை" என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரையினை எழுதி "எம்.ஏ.லிட்" பட்டத்தினைப் பெற்றார். தமிழ், ஆங்கில மொழியுடன் லத்தீன், ஸ்பனிஸ், பிரெஞ்சு, போத்துக்கீஸ் போன்ற பன்மொழிப் புலமை மிக்கவராகவும் இவர் திகழ்ந்தார். தாய் நாட்டுக்குத் திரும்பி பேராதனை பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியாற்றிய காலத்தில் லண்டன் பல்கலைக்கழக முனைவர் பட்டத்துக்காக "தமிழிலக்கியம் வழியாக கல்வியியல்" என்ற ஆய்வுக் கட்டுரையினை சமர்ப்பித்து பட்டம் பெற்றார்.

"இலக்கியப் படைப்புகளை வாசித்து அவற்றில் பொதிந்துள்ள நுட்பங்களை ரசித்து மகிழ்தலும், மேலை நாட்டு திறனாய்வுக் கோட்பாடுகளை வறட்டுத் தனமாகப் பிரயோகித்து திறனாய்வென சிலாகிப்பதும் வழக்கமாக இருந்த காலத்தில், தனிநாயகம் அடிகளாரின் திறனாய்வு அணுகுமுறை தனித்துவமானதாகத் திகழ்ந்தது. வ.வே.சு. ஐயர், டி.கே.சி. போன்றோரின் விமர்சனம் ரசனையை அடிப்படையாகக் கொண்டிருந்த போது அதனை பல்வேறு தளங்களுக்கு விரிவாக்கியவர் தனிநாயகம் அடிகள்" என தமிழறிஞர் ந. முருகேச பாண்டியன் வியந்து கூறியுள்ளமை அடிகளாரின் தமிழ்ப் புலமையினை எடுத்துக் காட்டுகின்றது.

அடிகளார் எழுதிய இலக்கியக் கட்டுரைகள் அடங்கிய "தமிழ் தூது" என்ற நூல் அவரது முதல் நூலாக 1952 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. பல்வேறு நாடுகளுக்கும் சென்று நேரில் கண்டறிந்த அனுபவ கட்டுரைகளைக் கொண்ட "ஒரே உலகம்" 1963 ஆம் ஆண்டிலும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் அடங்கிய "திருவள்ளுவர்" என்ற நூல் 1967 ஆம் ஆண்டிலும் வெளிவந்தன. "கட்டு மரத்திலிருந்து ஆகாய விமானம் வரை" என்ற தனது நூலில் அடிகளார் நெடுந்தீவிலிருந்து காவலூருக்கு



வீரகேசரி மூர்த்தி

தொடர்ச்சி 16ஆம் பக்கம்


mhc
MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM /NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

**HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING**

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4


INNSYS
CONNECT YOUR BUSINESS TO THE WORLD
SUMMER SPECIAL
HIGH SPEED INTERNET
Truly Unlimited
From
$24.99*
Absolutely NO CONTRACT!
416-8000-797
www.innsys.ca
4500 Sheppard Ave E. Suite 111,
Toronto, ON M1S 3R6

# தாய் மொழி...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

பயணம் செய்த அனுபவங்களையும், பின்னர் விமான மூலம் வெளிநாடுகளுக்குப் பறந்த தனது அனுபவங்களையும் அழகாக வர்ணித்திருந்தார். அதேபோன்று பல்வேறு ஆராய்ச்சி நூல்களையும் அவர் எழுதி வெளியிட்டுள்ளார்.

தூத்துக்குடியில் ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் அடிகளார் தமிழ் இலக்கிய கழகத்தை நிறுவி அதனூடாக "Tamil Culture" என்ற காலாண்டு சஞ்சிகையினை ஆங்கிலத்தில் வெளியிட்டு வந்தார். தமிழ் மொழியின் சிறப்பினையும், தொன்மையினையும் பிற மொழியாளர்கள் இடையே பரப்பி உலக மொழிகளின் மத்தியில் தமிழ் மொழியின் அந்தஸ்தினை உயர்த்துவதே அவரது குறிக்கோளாக இருந்தது. ஆங்கில மொழி வர்த்தகவியலுக்கு, ஜேர்மன் மொழி தத்துவவியலுக்கு, கிரீக் மொழி சங்கீதத்துக்கு, பிறெஞ் மொழி இராஜதந்திரத்துக்கும், லத்தீன் மொழி சட்டவியலுக்கும் என்பது போல் தமிழ் மொழி பக்திக்குரிய மொழி என இறைபக்தியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட வண. தனிநாயகம் அடிகளார் எடுத்துரைத்தார்.

தமிழ்மொழி மீது அறிவுத் தாகம் கொண்ட அடிகளார் தமிழ் மொழி மீது பற்றுக் கொண்ட தமிழரல்லாத வெளிநாட்டு அறிஞர்களை ஒன்றிணைத்து உலகத் தமிழ் ஆராய்ச்சி ஒன்றியத்தினை ஏற்படுத்தினார். ஒன்றியத்தின் செயலாளர் பொறுப்பினை ஏற்ற அவர் முதலாவது தமிழாராய்ச்சி மாநாட்டினை 1966 ஆம் ஆண்டு மலேசியா பல்கலைக் கழகத்தில் ஏற்பாடு செய்து திறம்பட நடத்தினார். இம்மாநாட்டில் இலங்கை, இந்திய, மலேசிய பேராசிரியர்களுடன் பிரித்தானியா, ஜேர்மனி, பிரான்ஸ், டென்மார்க், ஹொலன்ட், சுவீடன், சுவிற்சலான்ட், அமெரிக்கா, ஹொங்கொங், ஜப்பான், வியட்நாம், பிலிப்பைன்ஸ், போத்துக்கல், தென் கொரியா, தாய்லாந்து நாடுகளின் பேராசிரியர்களும் கலந்து கொண்டு ஆராய்ச்சிக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். அத்தனை நாடுகளையும் சேர்ந்த அறிஞர்களை தமிழ் மொழி பற்றி ஆராய்ச்சி செய்யத் தூண்டி தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு அடிகளார் ஆற்றிய பணி ஏனையோரின் பணிகளிலும் அதி உயர்ந்த பணி எனக் கூறுவது மிகையாகாது.

மலேசியா கோலாலம்பூர் பல்கலைக் கழகத்தில் 1961ம் ஆண்டு முதல் 1969ம் ஆண்டு வரை இந்திய மொழிகள் பற்றிய துறைக்கு தலைவராகப் பணியாற்றினார். தமிழ் மொழி மீது கொண்ட பற்றின் காரணமாக அதனை சர்வதேச ரீதியில் ஆராய்ச்சி செய்யும் முகமாக முதலாவது தமிழாராய்ச்சி மாநாட்டினை 1966 ஆம் ஆண்டு மலேசியாவின் கோலாலம்பூரில் சிறப்புற நடத்தினார். அதன் பின்னர் 1968 ஆம் ஆண்டு இரண்டாவது மாநாடு இந்தியாவில் சென்னை மாநகரிலும், மூன்றாவது மாநாடு 1977 இல் பிரான்ஸில் பாரிஸ் மாநகரிலும், நான்காவது மாநாடு 1974 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திலும், ஐந்தாவது மாநாடு 1981 ஆம் ஆண்டு இந்தியாவில் மதுரை மாநகரிலும், ஆறாவது மாநாடு 1987 இல் மீண்டும் கோலாலம்பூரிலும், ஏழாவது மாநாடு 1989 ஆம் ஆண்டு மொரீசியஸ் நாட்டிலும், எட்டாவது மாநாடு 1995 ஆம் ஆண்டு தஞ்சாவூரிலும், நடைபெற்றன.

யாழ்ப்பாணத்தில் வீரசிங்கம் மண்டபத்தில் நான்காவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு நடைபெற்ற போது யாழ்ப்பாணம் மலாயன் கபேயில் வைத்து உலகத் தமிழ் பண்பாட்டு கழகத்தினையும் வண. தனிநாயகம் அடிகளார் உருவாக்கினார். அதன் தலைவராக சாலை இளந்திரையனும், பொதுச் செயலாளராக குரும்பசிட்டியைச் சேர்ந்த இரா. கனகரெட்னமும் தெரிவு செய்யப்பட்டனர். அன்று முதல் உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடுகளும் பல்வேறு நாடுகளில் நடைபெற்று வந்தன. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டின் போது அரசியல் வேறுபாடு காரணமாக நிகழ்ந்த அசம்பாவிதங்களினாலும், உயிரிழப்புகளினாலும் அடிகளார் மிக வேதனை உற்றார்.

தொடர்ந்தும் தமிழ்ப் பணிகளில் ஈடுபட்டு வந்த அடிகளார் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதலாம் திகதி இறைபதம் எய்தினார். அவரது மறைவின் பின்னர் தற்போது மாநாடுகள் தொடராது மந்த நிலையை அடைந்திருப்பது மனவருத்தத்துக்கு உரியதாகும். வீரகேசரியில் நான் உதவி ஆசிரியராகப் பணியாற்றிய காலத்தில் 1979 ஆம் ஆண்டு வண. தனிநாகம் அடிகளாரை கொழும்பில் சந்தித்து பேட்டி காணும் அரிய வாய்ப்புக் கிடைத்தது. அப்போது வீரகேசரி பத்திரிகையின் நிர்வாக இயக்குநராகப் பணியாற்றிய பிரபல தொழில் அதிபரான திரு.வென்சஸ்லொஸ் வண. தனிநாயகம் அடிகளாருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தார். அதனால் அவரது ஏற்பாட்டிற்கிணங்க கொழும்பு -7 இல் இருந்த அவரது இல்லத்தில் வைத்தே அடிகளாரை பேட்டி கண்டேன். ஆரம்பத்தில் எவ்வாறு உங்களுக்கு தமிழ் மொழி மீது ஆர்வம் ஏற்பட்டது? என்ற எனது கேள்விக்கு திருக்குறளை படித்ததிலிருந்து தான் தமிழ் மொழி மீது ஆர்வம் ஏற்பட்டது எனக் கூறினார். அது நூற்றுக்கு நூறு வீதம் உண்மை. அத்தியாவசியமான வாழ்க்கை தத்துவங்களை மிக அழகாகவும், இரத்தின சுருக்கமாகவும் திருக்குறள் கூறியுள்ளதனால் தான் அது உருது, ஹிந்தி, மலையாளம், கன்னடம், ஆங்கிலம், பிரெஞ், அரபிக், ஹங்கேரியன், போலிஸ், இத்தாலியன், சீன மொழி, ஜப்பானிய மொழி, ரஷ்ய மொழி,



போன்ற பதின் மூன்று மொழிகளில் மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தான் மொரீசியஸ், ரினிடாட், கயானா போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்தபோது அங்குள்ள மக்கள் பெயரளவில் தமிழர்களாக இருந்த போதிலும் தமிழ் மொழியிலும், தமிழ்க் கலாச்சாரத்திலும் போதிய அனுபவமும், பற்றும் இல்லாதிருப்பதை அவதானித்த போது தனக்கு பெரும் வேதனை ஏற்பட்டதாகக் கூறிய அடிகளார் அதன் பின்னரே தமிழ் மொழியினையும், தமிழ்ப் பண்பாட்டினையும் அகில உலக ரீதியில் வளர்க்க வேண்டும் என்ற ஆவல் எழுந்ததாகவும் தனது பேட்டியில் குறிப்பிட்டார்.

அடிகளார் 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் முதலாம் திகதி தனது பூதவுடலை நீத்து புகழுடம்பு எய்தினார். அன்றிரவு வீரகேசரியில் இரவுக் கடமையில் நான் ஈடுபட்டிருந்த போது அந்த சோகமான செய்தி கிடைத்தது. அதனை முற்பக்க செய்தியாகப் பிரசுரித்தேன். கொழும்பிலிருந்து வெளி வந்து கொண்டிருந்த ஏனைய தமிழ் பத்திரிகைகள் அச்செய்தியினை பிரசுரிக்காது விட்டிருந்தன. வண. தனிநாயகம் அடிகளாருக்கும் அடியேனுக்கும் இடையே ஒருவித மானசீகமான தொடர்பு இருந்து வந்ததை நான் உணர்ந்து கொண்டேன்.

உலகில் இன்றும் வழக்கில் இருந்து வரும் புராதன மொழி எது? என்ற கேள்விக்கு சமஸ்கிருதத்துக்கு மாத்திரமன்றி ஐரோப்பிய மொழிகளுக்கும் மூலகாரணமாக இருந்த புராதன மொழியான தமிழ் மொழியே இன்றும் வழக்கிலிருந்து வருகின்றது என்ற பதிலை லண்டனில் 1903 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் "மிரர்" என்ற ஆங்கிலப் பத்திரிகை அண்மையில் வெளியிட்டிருந்தது. தமிழ் மொழி கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் பேசப்பட்டு வந்த ஆதி மொழி. பண்டைக் காலம் முதலே முறையான இலக்கண விதிமுறைகளையும் கொண்ட அற்புதமான மொழியுமாகும். ஆரம்ப காலத்தில் அது "பிரமி" எழுத்துக்களை கொண்டிருந்ததாக தமிழ் நாட்டிலுள்ள ஆதிச்ச நல்லூரில் கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களின் மூலம் தெரியவந்தது. பிற்காலத்தில் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்ட அநேக தமிழ் படைப்புக்கள் அழிந்தொழிந்து போயின. அவற்றுள் தொல்காப்பியனார் எழுதி வைத்திருந்த இலக்கணப் படைப்பு தெய்வாதீனமாக மீட்கப்பட்டு மொழி ஆர்வலர்களினால் அச்சேற்றப்பட்டு நூலுருவாக்கப்பட்டது. தமிழகத் தமிழறிஞர் உ.வே.சாமிநாதையர் போன்றோர் இத்தகைய அரும்பெரும் பணிகளில் ஈடுபட்டு வந்தனர். அதே போன்று தமிழ் மொழியின் வளர்ச்சியில் ஈழத்து கல்விமான்களான ஆறுமுக நாவலர், சுவாமி விபுலானந்தர், சி.வை.தாமோதரம் பிள்ளை, சி.கணேசையர், வண. தனிநாயக அடிகள் ஆகியோருட்பட மற்றும் பலரும் பெரும் பங்காற்றி உள்ளனர். ஈழத்தில் கடந்த முப்பதாண்டுகளுக்கு மேலாக நிலவி வரும் சாதகமற்ற சூழலில் தமிழ் மொழியின் வளர்ச்சியில் அக்கறை செலுத்தும் அறிஞர்களின் எண்ணிக்கை வெகுவாக அருகி விட்டது. இந்நிலை யில் பாரம்பரிய, தொன்மையான புகழ்மிக்க எமது தாய் மொழியினை தொடர்ந்து பேணி வளர்க்கும் பணியில் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழ் அறிஞர்களே அக்கறையுடன் ஈடுபட வேண்டும்.

கன்னடமும் களி தெலுங்கும்
கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதரத் துதித் தெழுந்தே
ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போல் உலகவழக்கு
அழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே.

பேராசிரியர் சுந்தரம்பிள்ளையின் மேற்படி தமிழ் வாழ்த்தினை நாம் பேணிக் காத்திடுவோம் வாரீர்!

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்".
"திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்"

என்ற பாரதியாரின் கூற்றினை இன்று பிற நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்ந்து பிற மொழிகளையும் பேசி வரும் ஈழத் தமிழர்கள் அர்த்த புஷ்டியுடன் உணர்ந்து கொண்டுள்ளனர். வெளிநாடுகளில் தமிழ் மொழி, கலை, கலாச்சாரம் ஆகியவற்றினை தொடர்ந்து பேணி வளர்ப்பதிலும் ஈழத் தமிழர்கள் ஆர்வத்துடன் செயற்பட்டு வருகின்றனர். தாம் வாழும் நாடுகளில் சிறுகதை, நாவல், கட்டுரை நூல்களை எழுதி வெளியிட்டு தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு தமது பங்களிப்பினை செய்து வருகின்றனர். தமது பிள்ளைகளுக்கு தமிழ் மொழியினையும் சங்கீதம், பரதநாட்டியம் போன்ற கலைகளையும் பயிற்றுவித்து வருகின்றனர். அனைத்து மொழிகளுக்கெல்லாம் மூலகாரணமான ஆதி மொழி தமிழ் மொழியே என்பதனை உணர்ந்து இன்று பிற மொழி ஆய்வாளர்கள் தமிழுக்கு வணக்கம் செலுத்தி வருகின்றனர்.


**YOGA - MEDITATION CLASSESS**

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.



நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்

**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**

தொடர்புகளுக்கு: *Scarborough - Markham* - செல்வ சோதி - *416.289.2033*

# மரணத்தின்...

12ஆம் பக்கத்தொடர்ச்சி

இத்தொகை என்பது மாதா மாதம் ஆக கூடுதலாக தற்போதுள்ள நிலவரப்படி $213.99 வரை, சேமிப்பில் இடப்பட்ட தொகை, காலம் என்ற அடிப்படையில் கணக்கிடப்பட்டு வழங்கப்படும்.

சரி, இறுதியாக இப்பண உதவிகளை பெறுவதற்குரிய விண்ணபங்களை எங்கு பெறுவது?

- மரண சேவையினை நடத்தும் நிறுவனத்தினர் (Funeral Service Home), அரசின் சார்பில் சில இடங்களில் விண்ணப்பங்களை குடும்பத்தினருக்கு வழங்கி அதனை எப்படி முன் எடுப்பது என ஆலோசனைகள் வழங்குவது வழமையாகும்.
- 'Service Canada' என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் அலுவலகங்கள் பல இடங்களிலும் குறிப்பாக பல் தொடர் அங்காடி கடைகள் உள்ள கட்டிடங்களில் (Shopping Mall) இயங்கி கொண்டே உள்ளது. நேரடியாக அங்கு பெறலாம். எப்படி முன் எடுப்பது என வழியும் காட்ட உத்தியோகத்தர்கள் தயாராக உள்ளனர்.
- www.service canada.gc.ca என்றும் இணைய தளத்தினுள் சென்று தகவல்களை அறிவதுடன் விண்ணப்பங்களை பதிவு இறக்கம் செய்து கொள்ளலாம்.



- 1.800.277.9914 என்னும் தொலைபேசிக்கு அழைத்து தபால் மூலமும் விண்ணப்பங்களையும், தகவல்களையும் பெற்றுக்கொள்ளவும்.

NDP NPD Communiqué

23 ஆகஸ்ட் 2013


### கொன்சவேட்டிவ் கட்சியினர் அனைத்துலக மாணவர்களை அவமதிப்பது கோடிகளை விரயமாக்கும்

ஒட்டாவா: புதியதொரு கல்வியாண்டு ஆரம்பமாகவுள்ள இத்தருணத்தில், கொன்சவேட்டிவ் கட்சியினர் விதேச சேவைகள் துறையினரின் வேலைமறுப்புப் போராட்டத்தை முடிவுக்குக்கொண்டுவர வேண்டும். இல்லையெனில் வெளிநாட்டு மாணவர்களால் பெறப்படும் கோடிகள் பெறுமதியான பொருளாதார நலன்களை இழக்க நேரிடுமென புதிய ஜனநாயகக் கட்சி எச்சரித்துள்ளது.

"தீர்வை நோக்கி உழைக்காத கொன்சவேட்டிவ் கட்சியினரின் பிடிவாதகுணம், பலநூற்றுக்கணக்கான கனேடியர்களை வேலையிழக்கச்செய்து, பலகோடிகள் பெறுமதியான பொருளாதார நட்டத்தை ஏற்படுத்தி, எமது மேற்படிப்புத்துறையின்மீதும் பாதிப்பை உண்டுபண்ணலாம்" என என்.டி.பி. தேசிய அவையின் துணைத்தலைவர் ராதிகா சிற்சபைஈசன் (ஸ்காபரோ-ரூஜ்ரிவர்) கூறினார். "கொன்சவேட்டிவ் கட்சியினர்தான் இந்த சிக்கலை தோற்றுவித்தார்கள். இப்பொழுது, சீக்கிரமாக பேச்சுவார்த்தைகளை நடத்தி சிக்கலை முடிவுக்குக்கொண்டுவரவேண்டும்" என அவர் மேலும் கூறினார்.

கனேடிய விதேச சேவைகள் அதிகாரிகள் ஜூன் 2011 முதல் வேலை ஒப்பந்தம் ஒன்று இல்லாத நிலையில் இருந்துவருவதால், அரசு தம்முடன் வேலை ஒப்பந்தப் பேச்சுவார்த்தைகளை நல்லெண்ணத்துடன் நடத்தாத வரையில், புதிய விசாக்களை வெளியிட மறுத்துவருகிறார்கள். வெளிநாட்டு மாணவர்களைக் கவர்வதற்கு ஐக்கிய அமெரிக்கா, ஒஸ்திரேலியா போன்ற நாடுகளுடன் கனடா போட்டியிட வேண்டியுள்ளது. வெளிநாட்டு மாணவர்கள் வருடாந்தம் 800 கோடிக்கும் அதிகமான பொருளாதார நலன்களை கனடாவிற்கு ஈட்டித்தருகிறார்களென 2012இல் கொன்சவேட்டிவ் அரசால் நடத்தப்பட்ட கணிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

மேலதிக விபரங்களுக்கு:
Jess Searson, 613-996-9681 or Rathika.Sitsabaiesan.A1@parl.gc.ca



# யாரிந்த எம்.ஜி.ஆர்? - சுட்ட படங்கள்

கடந்த வாரம் GTA Squareக்குச் சென்ற போது அங்குள்ள முருகன் புத்தகசாலையில் தற்செயலாக கிடைத்த புத்தகம் "சுட்ட படங்கள்". இதனை எழுதியிருப்பவர் பெரு. துளசி பழனிவேல். பெரும்பாலும் தமிழ்ப் படங்கள் ஏதாவதொரு ஆங்கிலப் படங்களின் பிரதியாக விருக்கும். இந்நூல் தமிழ் படங்களையே தமிழ்ப் படங்கள் பிரதி பண்ணுவதை பதிவு செய்துள்ளது. இவ்வாறான ஒரு ஆய்வு தேவைதானா? என்ற கேள்வி எழலாம். ஆனாலும் பார்வையாளர்களை கூர்மைப்படுத்துவதன் அவசியம் ஒன்றுள்ளது. புத்தகத்தை பிரட்டிய போது கிடைத்த தகவல்கள் இவை



1. உத்தமபுத்திரன் - அபூர்வசகோதரர்கள் - நீரும் நெருப்பும் - இம்சை அரசன் 23 ஆம் புலிகேசி
2. குமரிப்பெண் - கணவன் - தெற்கத்திக் கள்ளன் - பிஸ்தா
3. மலைக்கள்ளன் - நீல மலைத் திருடன் - மலையூர் மம்பட்டியான் - சீவலப்பேரி பாண்டி – கரிமேடுகருவாயன் - கழுகுமலைக்கள்ளன் - ஜென்டில்மேன்
4. புதிய காற்று - இந்தியன் - முதல்வன் - சாமுராய் - ரமணா
5. பெரிய இடத்துப் பெண் - பட்டிக்காடா பட்டணமா – கல்யாணமாம் கல்யாணமாம் - சகலாக வல்லவன்
6. பூமாலை – மனதை திருடிவிட்டாய்
7. சபாஷ் மீனா- உள்ளத்தை அள்ளித்தா

**- வானரன் -**

8. கர்ணன் - தளபதி
9. தில்லானா மோகம்பாள் - கரகாட்டக்காரன்
10. சாந்தி – வசந்தராகம்
11. கவரிமான் - நந்தா
12. சர்வர் சுந்தரம் - பாட்டுப்பாடவா
13. நிறைகுடம்- துள்ளாத மனமும் துள்ளும்
14. இரு மலர்கள் - அந்த ஏழு நாட்களும்
15. கூண்டுக்கிளி - கன்னிப் பருவத்திலே - பூமணி – வாலி
16. ஒரு தலை ராகம் - இதயம்
17. நீதி – தவசி
18. கற்பகம் - நான் புடிச்ச மாப்பிள்ளை
19. முள்ளும் மலரும் - காதல் சடுகுடு
20. கண்ணாடி- நெற்றிக் கண்
21. டீச்சரம்மா- புன்னகைப் பூவே
22. எதிர்பாரதது - மூன்று முடிச்சு
23. அழியாத கோலங்கள் - துள்ளுவதோ இளமை – பாய்ஸ்

மேற்கூறப்பட்டவற்றை விட மேலும் பல படங்களைப் பற்றி இந்நூல் குறிப்பிட்டுள்ளது. கே.பாலச்சந்தர், செல்வராகவன், சங்கர் போன்ற பிரபல இயக்குனர்களும் தமிழ்ப் படங்களேயே பிரதிபண்ணியுள்ளதை ஆசிரியர் சுட்டிக்காட்டியுள்ளார். மூலப் படங்கள் சில ஆங்கிலப்படங்களினதும் ஹிந்திப்படங்களினதும் பிரதி என்பதும் உண்மையே.

## யாரிந்த எம்.ஜி.ஆர்?

கேள்வி இது தான்? எம்.ஜி.ஆர் ஒரு மலையாளி என்ற கருத்து பரவலாக உள்ளது. உண்மையா? இக்கேள்விக்கு விடை கூறுவது போல் ஒரு நாவல் வெளியாகியுள்ளது. தமிழ்மகன் எழுதிய "ஆண்பால், பெண்பால்" என்ற நாவலில் எம்.ஜி.ஆர் ஒரு பாத்திரமாகவே வெளிப்பட்டுள்ளார். அந்நாவலில் உள்ள எம்.ஜி.ஆரின் பூர்வீகம் பற்றிய பதிவு இது கொங்கு நாட்டிலிருந்து பாலக்காட்டிற்கு குடிபெயர்ந்த வேளாளர் பரம்பரையில் வந்தவர் தான் எம்.ஜி.ஆர். 18ம் நூற்றாண்டில் வள்ளுவ நாட்டை ஆண்ட ஸ்ரீவல்லபன் ராமவர்ம வலிய ராஜா, அங்காடிப்புரம் என்ற இடத்தில் மாளிகை அமைத்து அரசு பணிபுரிந்து வந்தார். இவர்கள் சேரமான் பெருமாளின் அழைப்பின் பேரில் மானீச்சன், விக்கிரமன் முதலியோர் சேர நாட்டிற்கு கள்ளிக்கோட்டை சென்றபோது உடன் சென்றனர். அவர்கள் எல்லோரும் வேளாளர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கொங்கு வேளாளரில் பெரிய குலத்தைச் சேர்ந்தவர்கள். அதனால் வலிய ராசா என்ற பட்டத்தைப் பெற்றனர்....ஹைதர் திப்புக் கலவரத்தின் பின்னர் கிழக்கிந்தியக் கம்பனியின் கொடுமை காரணமாக வள்ளுவ நாட்டு இராம வர்ம வலிய ராஜாவின் குடும்பம் ஆட்சிப் பொறுப்பை சரியாக நடத்த முடியாமல் சிதறியது. அவருடைய மனைவி இலக்குமி அம்மாள் தன் மகன்கள் கிருஸ்ணமேனன், இராமன் மேனனுடன் பாலக்காடு பறளியை அடுத்த நரிக்கோடு என்னும் இடத்திற்கு குடிபெயர்ந்தார். கிருஸ்ணமேனனுக்கு ஐந்து மகன்கள், ஐந்து மகள்கள். மகள்கள் லக்குமி நேத்தியார், பாரு நேத்தியார், நாணி நேத்தியார், இக்கு நேத்தியார், அம்மணி நேத்தியார்.

மகன்கள் ராவுண்ணி வலிய மன்னாடியார், கோவிந்தன் உண்ணி மன்னாடியார், கிட்டுண்ணி மன்னாடியார், சங்குண்ணி வலிய மன்னாடியார். நாராயணன் உண்ணி மன்னாடியார். மன்றாடியார் மன்னாடியராக திரிபு பட்டுள்ளது. நாச்சியார் நேத்தியாராக திரிபுபட்டுள்ளது.

கிருஸ்ணமேனனின் நான்காவது மகன் சங்குண்ணி வலிய மன்னாடியார். இவர் 1832ல் பிறந்து 1915ல் மறைந்தார். கொச்சி சமஸ்தானத்தில் நீதிபதிக்கு சமமான சிரஸ்தார் என்ற பதவி வகித்தார். சங்குண்ணியின் மூத்த பையன் கோபால மேனன். இவர் ஒரு தாசில்தாரர். சிவில் வழக்குகளையும் அப்போது அவர்கள் விசாரிப்பார்கள். இவர் குடும்ப வழக்கு ஒன்றில் நேர்மையாக கூறிய தீர்ப்பால் ஏற்பட்ட மனக்குரோதத்தால் கோபால மேனன் குடும்பம் இலங்கைக்கு புலம் பெயர்ந்தது. கோபால மேனனின் புதல்வன் எம்.ஜி.ஆர். இவரது தமக்கைகளும் தந்தையும் இலங்கையில் இறந்து விடுகின்றனர். இதன் பின்னர் தாய் சத்தியபாமா சக்கர பாணியையும் (எம்.ஜி.ஆர். இன் அண்ணன்) அழைத்துக் கொண்டு எம்.ஜி.ஆருடன் கும்பகோணத்துக்கு குடிபெயர்கின்றனர்.

மேனன் என்பது மேலானவன் என்றதிலிருந்து திரிபு பட்டது. மேல் கூட்டல் அவன் என்பது மேலானவன் என திரிபு பட்டது.

இந்நூலில் எம்.ஜி.ஆர் பற்றி மேலதிக பதிவுகள் கீழே. "நான் ஒரு கை பார்க்கின்றேன். நேரம் வரும் கேட்கின்றேன்" என்றார். நேரம் வந்தது. ஆட்சியை பிடித்து உட்கார்ந்து அநீதிகளை தட்டிக் கேட்டார். "ஆறிலும் சாவு நூறிலும் சாவு தாயகம் காப்பது கடமையடா" என்றார். தமிழீழத்தை ஆதரித்தார். "ஆண்டவனே உன் பாதங்களை கண்ணீரில் நீராட்டினேன்.. இன்று ஒருயிரை நீ வாழவைக்க இங்கு உன்னிடம்

தொடர்ச்சி 20ஆம் பக்கம்

**Sitham Sam Shanmugam** (Sales Rep)
**HomeLife/GTA Realty Inc.**
Cell - 647.525.7820
Office Scarborough - 416.321.6969
24 hrs.
•Independently owned and operated

**DAISY MART**
Family Business in New Plaza At Tim Horton's North of New Market With 6/49 Loto

**COUNTRY HOME**
HWY 404 / EXTENSION
At Mccowan Brick Bungalow. 10 Acre. Senior Home. Invesment.

**New Brick Bungalow with bsmt apartment. 5 Acre. HWY 48 For Retirement**

**Scarborough Big lot's Investment**
உங்கள் 2 ஆது வீட்டை முதல் வீட்டில் இருந்து முதலீடு செய்யுங்கள்.
Rent will pay the mortgage.
Buy your 2nd home with your sleeping equity. We can handle your mortgage.

10 Acres in Holland lundry property with income. Good for seniors. Home, hobby, Farm.

**MERVIS & HWY 401**
2 Story detached home for sale. Very demand area.

# புள்ளி மயில் ஏறும் திருநல்லை வள்ளிதெய்வானை மணவாளன் உள்ளம் கவரும் கொள்ளை அழகுக்குமரன்

**சேந்தனை கந்தனை செங்கோட்டு வெற்பனை செஞ்சுடர்வேள்**
**வேந்தனை செந்தமிழ் நூல் விரித்தோனை விளங்குவள்ளி**
**காந்தனை கந்தக் கடம்பனை கார்மயில் வாகனனை**
**சார்ந்துணைப் போதும் மறவாதவர்க் கொரு தாழ்வில்லையே!**

"உலகம் உய்ய உருப்பெற்றவன் உமைபாலன்" என்பது கச்சியப்பர் கருத்து. "ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய" என்றே கூறியுள்ளார். உயிர்கள் எல்லாவற்றையும் காக்கும் பொருட்டு எழுந்தருளிய மூர்த்தமே முருக மூர்த்தம். அநுக்கிரகத்திற்கென்றே வந்த மூர்த்தம் அழகன் முருகனுடையது. துணைதேடும் அடியவரை அரவணைத்து வினையகற்றி பெருந்துணையாகும் பெம்மான் அவன். தொழுது வழிபடும் அடியவன் காவற்காரப் பெருமான் என்று திருப்புகழ் செப்புகின்றது. இதற்கு மேலாக வைதாரையும் வாழவைப்பவன் வடிவோங்க மால் மருகன், மன்றாடி மைந்தன், வானவர்க்கு மேலான தேவன், மெய்ஞ்ஞான தெய்வம் என்ற சிறப்புகளும் அவனுடையது. முருகு என்ற சொல்லிற்கு அழகு, இளமை, இனிமை, மணம், மகிழ்ச்சி, கடவுள் தன்மை என்று பல பொருள் உளது. முருகன் அழகன், குழகன், குமரன் (இளைஞன்), கடம்பன், கார்த்திகேயன். அழியா அழகுரு அவனுடைய இளமை. நலம் மாறாத ஏந்தல், பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாலன். குறிஞ்சி நிலக்கிழவன். அழகுக் கடவுளாக, அருட்கடவுளாக, குழந்தைக்




கடவுளாக, குமரக் கடவுளாக, ஆண்டியாக, ஞான பண்டிதனாக, சாமிநாதனாக, சற்குருவாக விளங்குகின்றான்.

அருளார் முகமும் அடியார்க் கபயம்
தரு பொற்கரமும் தணலார் விழியும்
கருணை பொழியக் கனிவாய் நகையும்
திருமார் பழகும் திகழும் முருகா!

அவனது எழிலினை அழகினை வசிகரத்தை அனுபவிக்க நாலாயிரம் கண்கள் வேண்டும் என்று கழிவிரக்கம் கொண்டது சாலப் பொருந்தும்.

முருகனது அழகுத்திருக்கோலம், அருள் வடிவம் எம்மை ஆட்கொள்ளவல்லது. வடிவேலுடன் வள்ளி தெய்வயானை சகிதம் புள்ளிமயில் மீதமர்ந்து சேவற்கொடி அசைந்தாட காட்சிதரும் கோலம் மாட்சியுடையது. அதனை நம் மனத்தில் நிறுத்துகின்றார் இராமலிங்க அடிகளார்.

சீர்கொண்ட தெய்வ வதனங்கள்
ஆறும் திகழ் கடப்பந்தோள்களும்
தாமரைத் தாள்களும் ஓர்
கூர் கொண்ட வேலும் மயிலும் நற்
கோழிக் கொடியும் அருள்
கார் கொண்ட வண்மைத் தணிகா
சலமும் என் கண்ணுற்றதே.



நா. க. சிவராமலிங்கம்

தொடர்ச்சி 30ஆம் பக்கம்


Seeking freedom from DEBT?
We offer Total Debt Free Solutions

Instant relief with one easy monthly payment. SAVE thousands of dollars.

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
- We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
- We shield you from your creditors and offer you a guaranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
- We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பதிற்கு உரிய வழிமுறை செய்தல்
- We arrange a sensible Repayment Plan minimizing potential losses and avoiding bankruptcy

K.T. Keeran
Credit consultant
Debt Free Credit Solution Inc.
PHONE: 416.434.1522
MOBILE: 416.834.7227
FAX: 1.877.800.7899
Web: http://www.paycontrolled.ca
Email: keeran@paycontrolled.ca
ADDRESS:
SUITE #303, MILNER BUSINESS COURT,
TORONTO ONTARIO M1B 3C6






SOLVE YOUR DEBT WORRIES WITH DIGNITY.
CONTACT DEBT FREE CREDIT SOLUTION FOR A FREE INITIAL CONSULTATION

# பாச்செண்டு வெளியீட்டு விழா

வெளியீட்டு விழா சிறப்புற அமைய உதவிய அனைத்து உறவுகளுக்கும் நன்றி. பாச்செண்டுப் பாடல்களில் மழலைமொழி என்னும் போட்டி நடைபெற உள்ளது. விபரம் பின்னர் விளம்பரப்படுத்தப்படும். பாச்செண்டு இறுவட்டுகளை ஆசிரியர்களூடாகப் பெற்றுக்கொள்ளலம்.

தொடர்புகட்கு: **905.479.5375 / 647.378.3006**







# நல்லூரான் திருவடி



நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி கிளியே இரவு பகல் காணேனெடி

ஆன்மா அழியாதென்று அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி -கிளியே நல்லூரான் தஞ்சமடி

தேவர் சிறை மீட்ட செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி கிளியே கவலையெல்லாம் போகுமெடி

எத்தொழிலைச் செய்தாலென் ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் - கிளியே காவல் அறிந்திடெடி

பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி--கிளியே ஆறுமுகன் தஞ்சமெடி

சுவாமி யோகநாதன் சொன்ன திருப்பாட்டைந்தும்
பூமியிற் சொன்னாலெடி - கிளியே பொல்லாங்கு தீருமெடி

- "நற்சிந்தனை", சிவயோக சுவாமிகள்

ஈழத்தின் புகழ்பெற்ற நல்லூர் கந்தசாமி கோயிலின் ஆண்டுத் திருவிழா இப்பொழுது நடைபெறுகிறது. அதன் நினைவாக இப்பாடல் தரப்படுகின்றன.

# யாரிந்த...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

கையேந்தினேன்" என்றார். அவர் உயிர் பிழைக்க தமிழ் நாடே பாடும்படி ஆனது. இலங்கையில் இந்திய அமைதிப்படை குடிகொண்டிருந்த போது விடுதலைப் புலிகளுக்கு எதிராக சென்னை வானொ-லி எம்.ஜி.ஆரின் பாடலையே பாவித்தது. "குறும்புக்கார வெள்ளாடே குள்ளநரியை நம்பாதே கூடி வாழ தெரிஞ்சுக்கோ, குணத்தை புரிஞ்சு நடந்துக்கோ" என்ற பாடலை பாவித்தனர். இதில் குள்ள நரி – புலி, வெள்ளாடு – யாழ். இளைஞர்கள். இந்நூல் பற்றிய ஆய்வொன்று பிறிதொரு இதழில் வெளியாகும். இந்நூலை இங்குள்ள தமிழ் புத்தக விற்பனையாளர்களிடமும் ரொரண்ரோ பொதுநூலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.





# HOMELIFE/GTA REALTY INC.,

BROKERAGE, INDEPENDENTLY OWNED AND OPERATED

Tel: 416 321 6969 | Email: gtarealty@gmail.com

## Dream is Yours Obligation is ours

### One of the Successful Real Estate Brokerage in GTA


- Over 100% Commission*
- Income for Life *
- Free Real Estate Class Starts every week
- Office in a Busy mall, Ample Underground parking
- 2 Brokers and 1 Manager with over 50 years combined experience always available for your assistance
- Working closely with reputable builders, Developers and Management Companies
- 24 Hours Accessibility
- Office Open Everyday
- In House free CEU Courses

* Subject to in-house Conditions



CALL US AT
416 321 6969

To join our Successful team - call us at 416 321 6969 or mail us at gtarealty@gmail.com



**Raja Mahendran**
Broker/Owner



**Justin William**
Broker/ Manager



**Eddie woo**
Broker of Record/ Owner

# ‘கிளிமஞ்சாரோ’ அனுபவங்கள் - 3

கடந்த வாரத் தொடர்

காலை கனவு கண்டு திடுக்கிட்டு விழித்த நான் அன்று பயணத்தைத் தொடங்க வேண்டுமே, பொதிகள் இன்னும் வரவில்லையே என்று எண்ணியபடி ஓட்டல் காரியாலயத்திற்குச் சென்றேன். ஏமாற்றமே என்னை வரவேற்றது. “நீங்கள் ஒன்றுக்கும்




- குமார் புனிதவேல் -

யோசிக்க வேண்டாம். எங்களிடம் நிறையப் பாவித்த உடைகள் உண்டு. இலவசமாகப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பொதிகள் வந்தவுடன் அனுப்பி வைப்போம்” என்று திரு. டெஸ்மன் கூறினார். நான்கூட அங்கிருந்து திரும்பி வரும்போது, கொண்டு சென்ற பல ஆடைகளை அந்த விடுதியில் விட்டு வந்தேன். ஆனால் எனக்கிருந்த பெரும் அருவருப்பு அவை பாவித்த ஆடைகள் என்பதுடன் யாரோ அணிந்த உள்ளாடை-களை எப்படி அணிவது? (Thermal Underwear) என்ற உண்மையை வாசகர்கள் மறக்க வேண்டாம்.

மேலும் நான் வழமையாக இரத்த அழுத்தத்திற்கு எடுக்கும் மருந்து முதற் கொண்டு வயிற்றோட்டத்திற்குப் பிரயோசனப் படும் இமோடியம் (Imodium) மற்றும் அலர்ஜிக்கு மருந்து எனப் பல மருந்துகளும் பயணப்பொதியுடன் தங்கி விட்டது. இவை அனைத்துக்கும் மேலாக மலை உயரத்திற்குச் செல்லச் செல்ல வளி மண்டலத்தின் அமுக்கம் குறைவதுடன் ஒட்சிசனின் செறிவும் குறையத் தொடங்கும்

இந்தநிலையில் Acute mountain sickness (AMS) என்னும் வருத்தம் தோன்றும். AMS உள்ளவர்கள் மதுபோதையில் உள்ளவர் போல் தடுமாறி விழவும் கூடும். இவர்களுக்கு மிக வேதனையான தலையிடி தோன்றுவதுடன் மாறாட்டமும் வாந்தியும் உடன்வரும். இதற்குக் காரணம் மூளையில் திரவம் சேருவது அல்லது சுவாசப்பையில் திரவம் சேருவது. இரண்டுமே உயிராபத்து விளைவிக்கக்கூடியது. இந்நிலையில் பயணத்தைத் தொடர்வதா? இல்லையா? என்ற பெரும் கேள்வி எனது மனதில் எழுந்தது. அப்போதுதான் நம்பிக்கை எனக்குக் கை கொடுத்தது எனலாம். நான் எடுத்த முயற்சி சுயலாபத்திற்காக அல்ல என்பதால் நிச்சயமாக நன்மை பயக்கும் என நம்பினேன்.

மேலும் என்னை வாழ்த்தி வழியனுப்பியவர்களும் உண்மையாகவே வாழ்த்தியதாக நான் நம்பினேன். எனவே “எண்ணித் துணிந்த முயற்சியில் எண்ணுவதற்கு ஒன்றுமில்லை” என்று பழைய ஆடைப் பொதிகளைப் பெற்றுக் கொண்டு பயணத்திற்குத் தயாரானேன். என்னுடைய பயணத்திற்கு உடன் வரவிருந்த மூன்று இளைஞர்களும் கடைசி நேரத்தில் வரவில்லை என அறிவித் தார்கள். அது சற்றுக் கவலையைத்



தந்தாலும் பின்புதான் அதனால் எனக்கு ஏற்பட்ட நன்மை புரிந்தது. அந்த நன்மை என்னவென்று பின்னர் வரும் சந்தர்ப்பம் ஒன்றில் அதனை விளக்குவேன். இம்

தொடர்ச்சி 30ஆம் பக்கம்


Sales Reps. Welcome

For All your Real Estate & Investments Needs!

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED



HomeLife/GTA Realty Inc. Brokerage *

5215 Finch Ave E, #203 Toronto, ON

Tel.: 416.321.6969


# ஆதலால் காதல் செய்வீர்

## திரை விமர்சனம்

தர்மபுரி இளவரசன் - திவ்யா காதல், இயக்குநர் சேரன் மகள் தாமினி காதல், பா.ம.க. தலைவர் ராமதாஸின் நாடகக் காதல்… என எங்கும் காதலே பேச்சாக இருக்கும் நிலையில், காதலை களமாகக் கொண்டு வெளிவந்திருக்கும் படம். காதல் இல்லாமல் தமிழ் சினிமாவே கிடையாதே, இதிலென்ன ஆச்சரியம் என்கிறீர்களா? இப்படம், கல்லூரி காதலினால் ஏற்படும் அவலத்தைப் பற்றி பேசுகிறது!

கதாநாயகனும் கதாநாயகியும் நண்பர்களாக இருக்கிறார்கள். தமிழ் சினிமா வழக்கப்படி, நாயகன், நாயகி தன்னைக் காதலிக்க வில்லை என்றால் ‘செத்துருவேன்’ என்று மிரட்டுவதுடன் அதைச் செய்பவன் போல் பாவலாவும் செய்கிறான். நாயகியும் அவன் ‘வீரத்தில்’ ஈர்க்கப்பட்டு ‘ஐ லவ் யூ’ சொல்கிறாள். இப்படித் தொடங்கும் காதல், மிக வேகமாக வளர்ந்து, மகாபலிபுரம் விடுதியில் தனியாக அறை எடுத்து தங்குவது வரை செல்கிறது. விளைவு, நாயகி கர்ப்பமாகிறாள். கருவைக் கலைக்க அல்லலோப்படுகிறார்கள் இருவரும். விஷயம் இருவர் வீட்டுக்கும் தெரிந்து பிரச்சினை பெரிதாகிறது. நாயகன் அப்பா, கல்யாணத்துக்கு சம்மதிப்பதுபோல் நடித்து ஏமாற்றிவிடப் பார்க்கிறார். நாயகியின் அப்பாவோ, கல்யாணத்திற்காக எதிர்த் தரப்பினர் காலில் விழுந்து எழவும் தயாராக இருக்கிறார். இதற்கிடையில் காதலர் களுக்குள் ஏற்படும் ஈகோ பிரச்சினை பெரிதாகி அவர்களைப் பிரித்தேவிடுகிறது. குழந்தை, எங்கோ ஒரு அனாதை இல்லத்தில் வளர, காதலர்கள் அவரவர் போக்கில் தங்களது புதிய வாழ்க்கையைத் தொடர்கிறார்கள்.

முதல் பாதி முழுவதும் கலகலப்பாக செல்கிறது படம். பிற்பாதியில் மருத்துவ மனை, கருக்கலைப்பு, பெற்றோர்களின் சுமை என்று ஏகத்துக்கும் சோகத்துடன் நகர்கிறது. கதாநாயகனாய் புது முகம் சந்தோஷ் நடித்திருக்கிறார். இயல்பாய் இருக்கிறார். பாத்திரத்துக்கு ஏற்ற தேர்வு. முதற்பாதியில் காதல்வயப்பட்ட கல்லூரி மாணவர்களுக்கேயுரிய துள்ளலுடல் வருகிறார். இரண்டாம் பாதியில், பதற்றத்துடன் அலையும் காட்சிகளில் பெரிய பிரச்சினைகளை எதிர்கொள்ளும் அனுபவம் இல்லாத அப்பாவியாக மாறிவிடுகிறார். அப்பாவை எதிர்த்து தீர்க்கமாக பேசும் காட்சிகளில் இன்றைய இளைய தலை முறையையும் பார்க்க வைத்திருக்கிறார். கதாநாயகி, மனிஷா யாதவ். ‘வழக்கு எண் 18’ போலவே சொல்லிக்கொள்கிறார்ப் போல பாத்திரமாகவே வாழ்ந்திருக்கிறார். காதல் வயப்படும் காட்சிகளைவிட கர்ப்பத்துடன் இருக்கும் காட்சிகளிலும், அம்மாவிடம் மாட்டிக் கொண்டு அழும் காட்சியிலும் மனதில் நிற்கிறார்.

கதாநாயகன் நண்பராக வரும் அர்ஜுனனும், கதாநாயகி தோழியாக வரும் அர்ச்சனாவும் கவனிக்க வைத்திருக்கிறார்கள். அர்ஜுனனுக்கு அவருடைய இயல்பே கதாபாத்திரமாக அமைந்துவிட்டது போல அனாயசமாக அசத்தியிருக்கிறார். ‘தம்பி உங்கக்காவுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கு நீ மாமாவாயிட்டே’ என்பவரிடம், ‘அப்படியா அவன் அப்பாவே ஆயிருவான்’ என்று சொல்லுமிடம் ஓர் உதாரணம்.



- ஃபிலிம் நியூஸ் கிருஸ்ணன் -

இவர்தான் ஆங்காங்கே முதல் பாதியை சுவாரஸ்யமாக்குகிறார். ஒருவனின் காதலுக்கு உதவி செய்யப் போய், அது திசை மாறி, உடன் இருக்கும் வேறொருவனை காதலிப்பதாக அந்தப் பெண் சொல்வதும், அதனை அவர்கள் சமாளிப்பதும் கலகலப்பு. கதாநாயகி அப்பாவாக வரும் ஜெயப்பிரகாஷும் அம்மாவாக வரும் துளசியும் படு இயல்பு. முக்கியமாய் மகளைப் பற்றி கேவலமாய் நான்கு பேர் பேசுமிடத்தில், விதியே என்று தலைகுனிந்து அழ ஆரம்பிக்கும் காட்சியில், ஜெயப்பிரகாஷ் நம்மையும் அழ வைக்கிறார். மகளின் நட்பு, அவளைக் காதலிப்பதாய் அலையும் மாணவர்களைப் பற்றி பேசுமிடம்… என ஆரம்பித்து, மகள் வாழ்க்கையை பணையம் வைத்துவிட்டாள் என்று தெரியும் காட்சிகள் வரை துளசி முகத்தில் காட்டும் வலி ரணமானது. துளசிக்கு இது முக்கியமான படமாக இருக்கும். கதாநாயகன் அப்பாவாக வரும் ஒளிப்பதிவாளர், அம்மா பூர்ணிமா பாக்யராஜ் ஆகியோரின் நடிப்பும்கூட கச்சிதம்.

இவர்கள் எல்லோரைவிடவும் கடைசிக் காட்சியில் தோன்றிய அந்த குழந்தை கச்சிதம். நடிக்க வைக்காமல், குழந்தையின் இயல்பான செயல்களை படம் பிடித்திருக்கக்கூடும், அவ்வளவு இயல்பு.

தொடர்ச்சி 31ஆம் பக்கம்

# 20வது ஆண்டில் காலடி பதிக்கும் உங்கள் சாமி அன் சன்ஸ்

# SAMY & SONS

## Wholesalers & Retailers

☑ வரவேற்பு
☑ விலை
☑ தரம்

*Textiles, Jewellery, Gift Items & Fancy Goods, Express Money Transfer, Pawn Broker, Party Item Rental Etc.*

☑ தெரிவு
☑ நம்பிக்கை
☑ நாணயம்

இதோ நீங்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த
மலிவு விலையில் மாபெரும் சாதனை படைத்த
உங்கள் சாமி அன் சன்ஸின் அதிரடி மலிவு விற்பனை

**OPEN**
7 Days
a week
10:00 am to 9:00 pm

எமது வாடிக்கையாளர்கட்கு! இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!!!

**ஆகஸ்ட் 29ம் திகதி தொடக்கம் செப்ரம்பர் 29ம் திகதி வரை**

Senorita & Vinolia (Bra)
3 For $10

Lungies, Arm Cut Benyan Under Wear (Apple, Kibs & Crocodile
3 for $10

(Indoneshian)
நைட்டீஸ்
சாறி பாவாடை
சாறி பிளவுஸ்
3 for $10



Rotti Maker
$36.00

Preethy Mixer
(2 yrs. warranty)
$150.00

10 Cups
Rice Cooker
$ 20.00

**பெண்களுக்கான உடைகள்**

குர்தி பிளவுஸ் ...from ............ $ 5.00
சுரிதார் ...............from............. $5.00
சாறி ..................from..............$10.00
சாறி குஞ்சம் .................................$1.00
கனகாம்பர மாலை
(கழுவக்கூடியது) $3.00
Hair Bun ....................................$3.00
முடிமயிர் .....................................$3.00

**ஆண்களுக்கான உடைகள்**

Shirts ........................................$5.00
T Shirt .......................................$5.00
Singapore Denim Pants ..........$10.00
Singapore Dress Pants .......... $10.00

**சிறுவர்களுக்கான உடைகள்**

குருத்தா பியாமா ............................$5.00
பஞ்சாபி ..........................................$10.00
Pants & Shirts ..........................$15.00
Party Frock ................................$15.00
பட்டுப்பாவாடை சட்டை ........$15.00

**பாத்திரங்கள்**

சாப்பாட்டுத்தட்டு ..............................$2.00
றே தட்டு ...............................................$2.00
Warming Box ............................$8.00
பால் குக்கர்....................................$ 10.00
புட்டுக்குடம்...................................$10.00
ஐஸ்கிறீம் கப் செற்........................ $10.00
குண்டுத்தோசைச் சட்டி......... $10.00
Steamer from ............................ $15.00
அடுக்குச்சட்டி 12 pcs. ........... $23.00
BajahMixer (2 yrs.warranty).........$150.00

**ஏனையவை**

Auto Divine Songs Box ..............$.6.00
Jasmin Perfume .........................$ 7.00
Charlie Perfume .........................$ 8.00
பாய் Double ...............................$10.00
Citizen Watch ............................$50.00

தரமான. விலை உயர்ந்த நெற் சாறிகள்.
சிக்குயின்ஸ். பீற்ட்ஸ், லங்கா சூட்,
அனைத்தும் மிகக் குறைந்த மலிவுவிலையில்
பெற்றுக்கொள்ள வாருங்கள் வந்து பாருங்கள்

இன்னும் பல எண்ணிலடங்காத பல பொருட்கள்
மிக மிக மலிவு விலைகளில் பெற்றுக்கொள்ள ஒருமுறை வந்து பாருங்கள்.
உங்கள் சாமி அன்ட் சன்ஸ் உங்களை அன்போடு வரவேற்கிறது.

குறைந்த விலையில் நிறைந்த சேவை

**Tel: 416-298-1598**

**Cell: 647-239-SAMY (7269)**

**1884 B Kennedy Road (at Ellesmere)**
**Scarborough, Ontario M1P 2L8**

**அன்றும், இன்றும் என்றும் ஒரே குடையின் கீழ் சாமி அன்ட் சன்ஸ்**

SALE!! SALE!!! SALE!! SALE!

# கடன்

என் வாழ்க்கையில் நான் பட்ட கடன்களை வரிசைப் படுத்தும்போது பல கடன்களை நான் தீர்க்கவில்லை என்பது இப்போது தெரிகிறது. சிறுவயதில் பக்கத்து மேசை நண்பனிடம் பென்சில் கடன் வாங்கி அதை திருப்பிக் கொடுக்கவில்லை. கோயிலுக்கு நேர்ந்து கடவுளுக்கு இது செய்வதாக, அது செய்வதாகச் சொல்லி செய்யாமல் விட்டது. புத்தகங்கள் கடன் வாங்கிப் படித்தால் தவறாமல் திருப்பிவிடுவது என் வழக்கம். ஒரு முறை என் புத்தகத் தட்டை ஆராய்ந்தபோது யாரோ ஒருவரிடம் கடன் வாங்கிய புத்தகம் ஒன்று இன்னும் திருப்பிக் கொடுக்காமலே இருப்பது தெரிந்தது. ஆனால் யாரிடம் புத்தகத்தை இரவல் வாங்கினேன் என்பது மறந்துவிட்டது.

உரிய நேரத்தில் கடனை அடைக்காவிட்டால் அதை திருப்பிக் கொடுக்கும் வாய்ப்பே சமயத்தில் நழுவி விடக்கூடும். சில நாட்களுக்கு முன்பு ஒரு சிறுகதை படித்தேன். காதலித்து கல்யாணம் செய்துகொண்ட தம்பதிகள் மத்தியில் சிறு விரிசல் விழுகிறது. ஆற்றிலே தண்ணீர் வற்றுவதுபோல அவளுக்கு கணவனிடத்தில் காரணமில்லாமல் அன்பு குறைந்துகொண்டே வருகிறது. திடீரென்று ஒருநாள் அவன் நெஞ்சு வலியில் அவதிப்படுகிறான். அவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும்போது அதுவரை பாதி படித்த நாவலையும் தன்னுடன் எடுத்துப் போகிறான். அவசர சிகிச்சையளித்தும் அவன் இறந்துவிடுகிறான். ஒருநாள், பல வருடங்கள் கழித்து புத்தகத்தட்டில் அவன் படித்த நாவலை மனைவி தற்செயலாக காண்கிறாள். அவன் கடைசியாகப் படித்த பக்கத்தை மடித்துவிட்டிருக்கிறான். தான் அவனிடம் உதாசீனமாக நடந்துகொண்டதை நினைத்து வருந்துகிறாள். அவளுக்கு அவன் மீது கனிவு மேலிட்டு அவனுக்காக ஏதாவது செய்யவேண்டும் என்று தோன்றுகிறது. அவன் முடிக்காமல் விட்ட பக்கங்களை அவனுக்காக படித்து முடிக்கிறாள்.

நான் யாழ்ப்பாணத்தில் 175 வருட பாரம்பரியம் கொண்ட அமெரிக்க மிஷன் பள்ளிக்கூடத்தில் படித்தேன். இங்கேதான் சி.வை. தாமோதரம்பிள்ளையும் ஒருகாலத்தில் படித்தவர். இது புகழ்பெற்ற பாடசாலை என்றபடியால் மலேயா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் இருந்தெல்லாம் மாணவர்கள் வந்து படித்தார்கள். கொழும்பில் இருந்துகூட மாணவர்கள் படிக்க வருவதுண்டு. இது ஒரு கலவன் பாடசாலையானபடியால் ஆண்களும் பெண்களும் வித்தியாசமில்லாமல் பழகினார்கள். வழக்கமாக பள்ளிக்கூடத்து மாணவர்கள் ஒரு வகுப்பில் உட்கார்ந்து படிப்பார்கள். ஆசிரியர்கள் மாறிமாறி வருவார்கள். இங்கே அப்படியில்லை. ஒரு வகுப்பு முடிந்ததும் நாங்கள் நடந்து இன்னொரு வகுப்புக்கு செல்வோம். அங்கே ஆசிரியர் இருப்பார். அது முடிந்ததும் இன்னொரு வகுப்புக்கு செல்வோம். அங்கு இன்னொரு ஆசிரியர் வருவார். இப்படி எடுக்கும் பாடத்துக்கு தக்கமாதிரி வகுப்பர்களும், ஆசிரியர்களும், வகுப்பறைகளும் மாறிக்கொண்டே இருக்கும்.

முதலாம் தவணை முடிந்து இரண்டாவது தவணை தொடங்கியபோது ஒருமுறை கொழும்பில் இருந்து புதிய மாணவி ஒருத்தி வந்து சேர்ந்தாள். அவளுடைய பிரதானமான பாடம் உயிரியல் என்பதால் அவள் எங்களுடன் இயற்பியல், வேதியியல் போன்ற பாடங்களுக்கு மட்டுமே வந்து சேர்ந்துகொண்டாள். இந்தப் பெண்ணின் பெயர் அங்கயற்கண்ணி. சில நாட்களிலேயே அவளுடன் படித்த மாணவிகள் அவளை "அங்கி" என்று அழைக்கத் துவங்கிவிட்டனர். இந்தப் பெண் சேர்ந்த அன்றே முழுப்பள்ளிக்கூடமும் மாறிவிட்டதுபோல ஒரு தோற்றம் உண்டானது. நெற்றியிலே கறுப்பு பொட்டு வைத்திருப்பாள். அது அநேகமாக கண்ணுக்கு தெரியாது. ஏனென்றால் அந்தப் பொட்டைப் போலவே அந்தப் பெண்ணும் கறுப்பாக இருந்தாள். கொடிபோன்ற உயரம். வசீகரமான முகம். பெரிய கண்கள். ஒரு பல்லின் நுனி கொஞ்சம் தள்ளிக்கொண்டு இருந்ததால் எப்பவும் சிரிப்பதுபோன்ற தோற்றம்.

அவள் வகுப்பிலே சேர்ந்த அடுத்த நாளே சிலர் பொத்துபொத்தென்று இயற்பியல், கணிதம் போன்ற பாடங்களை போட்டுவிட்டு உயிரியல் வகுப்பில் சேர்ந்துகொண்டார்கள். இந்தப் பெண் நடக்கும்போது மற்றப் பெண்களைப்போல கால் பெருவிரலைப் பார்த்து நடக்கவில்லை. தடிபோல நிமிர்ந்துகொண்டு நேராகப் பார்த்து நடந்தாள். தண்ணீர் பூச்சிபோல சட்சட்டென்று திரும்பினாள். புத்தகங்களை அள்ளி மடித்த வலது கையில் அடுக்கி மார்புகளை மறைத்தபடி வகுப்புக்குள் நுழைவதில்லை. வலது தோள்மூட்டில் ஒரு துணிப்பையை மாட்டி அதற்குள் புத்தகங்களை நிரப்பி கைகளை கவர்ச்சியாக ஆட்டிக்கொண்டு வந்தாள். யாராவது மாணவன் பார்த்து சிரித்தால் அவளும் திருப்பி சிரித்தாள். பேசினாலும் பேசுவதற்கு தயாராக இருந்தாள். ஆனால் மாணவர்கள்தான் கிலிபிடித்து தூர ஓடினார்கள்.

வகுப்பில் ஆசிரியர் கேட்கும் எந்தக் கேள்விக்கும் முதலில் கையை தூக்குவது அந்தப் பெண்தான். படிப்பில் மட்டும்தான் முதலிடம் என்றில்லை. நூறு யார் ஓட்டப்பந்தயத்திலும் அவள்தான் முதலாவதாக வந்தாள். நீளப்பாய்ச்சலிலும் அவள்தான் முதல். கூடைப் பந்து குழுவில் சேர்ந்த சில மாதங்களிலேயே அவள் காப்டனாகத் தெரிவுசெய்யப்பட்டாள். பந்து கையிலே கிடைத்ததும் நுனிச் சப்பாத்தில் நின்று சுழன்று லாவகமாக கூடைக்குள் பந்தை எறிந்து வெற்றியீட்டிவிடுவாள்.

ராஜகுமாரன் என்று ஒரு மாணவன் இன்னொரு வகுப்பில் படித்தான். அவனுக்கு தான் ராஜவம்சம் என்றுதான் நினைப்பு. கொழுத்த பணக்காரன். ஒவ்வொருநாளும் காரில் வருபவன். ஒரு நாள் பார்த்தால் வெள்ளைக் குதிரை ஒன்றில் ஆரோகணித்து வந்து இறங்கினான். பள்ளிக்கூடத்தில் குதிரை கட்ட இடம் இல்லை என்பதால் பின்னாலே தலைதெறிக்க ஓடிவந்த குதிரைக்காரன் குதிரையை பிடித்து திரும்பவும் வீட்டுக்கு கொண்டுபோனான். இதுவெல்லாம் அவன் செய்தது அங்கி என்ற அங்கயற்கண்ணிக்காகத்தான். ஒரு நண்பனிடம் எப்படி அவளுடன் பேசலாம் என்று கேட்டிருக்கிறான். அதற்கு அவன் "கொய்யாப் பழத்தில் முதல் கடிதான் கஷ்டம். அதற்குப் பிறகு இலகுவாக உண்டுவிடலாம்'' என்று கூறியிருக்கிறான். அவன் திடுக்கிட்டு "என்னைக் கடிக்கச் சொல்கிறாயா?" என்று கேட்க அவன் "இல்லை இல்லை, பேசச்சொல்கிறேன்'' என்றான். அடுத்த நாள் நடு மைதானத்தில் நின்று ராஜகுமாரன் அவளுடன் தனியப் பேசினான். கதை முடிந்தது என்று எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் மறுநாள் அங்கி அதே மைதானத்தில் புல்லு வெட்டும் அந்தோனியுடன் பத்து நிமிட நேரம் சிரித்தபடி பேசினாள். அவள் மட்டில் ஒரு வித்தியாசமும் தெரியவில்லை. அவளுக்கு இருவரும் ஒன்றுதான். பள்ளிக்கூடம் மறுபடியும் சீராக மூச்சு விடத் தொடங்கியது.

ராஜகுமாரனைத் தொடர்ந்து இன்னும் சில மாணவர்கள் அவளுடன் துணிச்சலாகப் பேசினார்கள். அவள் பதில் சொல்லும்போது பிரார்த்தனை செய்வதுபோல தலையை குனிந்து கேட்டார்கள். ஆனால் ஒன்றுமே நடக்கவில்லை. இந்தப் பெண்ணுடன் நான் இரண்டு வருடங்கள் ஒரே வகுப்பில் ஒரே ஆசிரியரிடம் படித்தேன். ஒரே புத்தகத்தை படித்தேன். ஒரே காற்றை சுவாசித்தேன். மற்ற மாணவர்களைப்போல எனக்கும் இந்தப் பெண்ணிடம் இரண்டு வார்த்தை பேசவேண்டும் என்ற ஆர்வம் இருந்தது உண்மைதான். ஆனால் என் இரண்டு முழங்கால்களும் அடிக்கும் சத்தம் அவளுக்கு கேட்டுவிடுமோ என்ற பயத்தில் அது தள்ளிப்போய்க்கொண்டே இருந்தது.

பல்கலைக்கழகத்துக்கு நாங்கள் எல்லோரும் ஒன்றாகவே எடுபட்டோம். அங்கயற்கண்ணி மருத்துவக் குழுவிலும், நாங்கள் எங்கள் பாடங்களுக்கு தக்கமாதிரி வெவ்வேறு குழுக்களிலும் இருந்தோம். அதன் பிறகு அவளைப் பார்ப்பது அரிதாகி விட்டது. ஒரு கட்டத்தில் மறந்தும் போனேன்.

இருபது வருடங்களுக்கு பிறகு நான் கனடாவுக்கு ஒரு வேலையாக மொன்றியல் நகரத்துக்கு போனபோது உச்சமான பனிக்காலம். ஒரு நண்பர் பகலில் பிரதானமான காட்சிகளை காட்டிவிட்டு இரவு வேறு ஒன்றுக்கு கூட்டிச் சென்றார். பனிப்புயல் அடித்த இரவு என்றபடியால் குளிர் என் சருமத்தை தாண்டி, தசையை தாண்டி எலும்பை தொட்டது. மொன்றியலின் பழைய பகுதியிலும் எலும்பை தொடுகிறமாதிரி ஒரு கதை இருந்தது. 250 வருடங்களுக்கு முன்னர் மேரி ஜோசெப் என்ற கறுப்பு அடிமை இருந்தாள். காதலனிடம் போவதற்காக வீட்டுக்கு தீ வைத்துவிட்டு அவள் தப்பி ஓடியபோது அவளை வெள்ளை எசமானர்கள் பிடித்துவிட்டார்கள். சிறையில் அவளை சித்திரவதை செய்து தூக்கிலிட்டு எரித்து சாம்பலை தெரு வீதிகளில் எறிந்தார்கள். அவளுடைய ஆவி இப்பவும் அதே வீதிகளில் உலாவுவதாக நண்பன் சொன்னான். நான் பார்த்தபோது பனி தூவிய இடங்களிலெல்லாம் அந்த அடிமையின் ஆவியும் மிதந்ததுபோலவே எனக்கு தோன்றியது.

அடுத்த நாள் காலை மொன்றியலில் விமானம் ஏறியபோது எனக்கு மெல்லிய காய்ச்சல் காய்ந்தது. மொன்றியலின் குளிரோ அடிமையின் ஆவியோ என்னைப் பிடித்துவிட்டது. ஆப்பிரிக்காவின் லைபீரியா தேசத்தில் விமானம் இறங்கியபோது எனக்கு காய்ச்சல் 103 - 104 டிகிரியை தாண்டியிருக்கும். அங்கே ஏற்கனவே பதிவு செய்த ஒரு ஹொட்டல் வரவேற்பறையில் என் லைபீரிய நண்பருடைய தொலைபேசி எண்ணை கொடுத்தது ஞாபகம் இருக்கிறது. அறைக்கு வந்து படுத்ததும் தூங்கிப்போனேன். நடுச்சாமம் போல குளிர் என்னைத் தூக்கி தூக்கி அடித்தது. அங்கே இருந்த அத்தனை போர்வைகளை போர்த்தியும் போதவில்லை. அப்போது பார்த்தால் ஏசி முழுவேகத்தில் வேலைசெய்து கொண்டிருந்தது. கட்டிலில் இருந்து இறங்கி மெல்ல மெல்லத் தவழ்ந்து நகர்ந்து ஏசி சுவிட்சை நிறுத்தியது கடைசியாக நினைவிருக்கிறது. நான் மயக்கம்போட்டு விழுந்தேன்.


**- அ. முத்துலிங்கம் -**

காலையில் நான் கண் விழித்தபோது முற்றிலும் பரிச்சயமில்லாத ஒரு வீட்டு அறையில் படுத்திருந்தேன். சுவரில் மாட்டியிருந்த படங்கள் யாருடையவை என்பது தெரியவில்லை. கணவர், மனைவி குழந்தை படம் ஒன்றும் தொங்கியது. புத்தகத் தட்டில் நான் முன்பின் பார்த்திராத பெரிய பெரிய மருத்துவ புத்தகங்கள். பிரம்பில் செய்த கூடைபோன்ற கதிரை ஒன்று கூரையிலிருந்து கயிற்றில் தொங்கியது. ஆங்கிலப் படங்களில் வருவதுபோல அந்தக் கூடையில் உட்கார்ந்து ஊஞ்சல்போல ஆடுவார்கள் போலும். மூலையில் இருந்த நிலைக்கண்ணாடியில் சற்று தாடி வளர்த்த மெல்லிய முகம் ஒன்றைக் கண்டு நான் திடுக்கிட்டேன். அது நான்தான். இன்னும் நான் எங்கேயிருக்கிறேன் என்ற கேள்விக்கு விடை தெரியாமல் குழம்பியிருந்த நிலையில் ஒரு பெண் வந்தார். சிரித்த முகம். மருந்து தந்தார், குடித்தேன். குடிப்பதற்கு கஞ்சி தந்தார், ஒரு கதை பேசாமல் அதையும் குடித்தேன். மறுபடியும் தூங்கிவிட்டேன்.

முதல் நாள் இரவு என்னுடைய லைபீரிய நண்பர் என் நிலைமையை பார்த்துவிட்டு என்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லவே நினைத்தார். ஆனால் அந்த ஆஸ்பத்திரியில் தலைமை மருத்துவராக வேலை பார்த்தவர் ஓர் இலங்கைப் பெண், பெயர் அங்கயற்கண்ணி. அவர் தான் என்னை தன் வீட்டிற்கு கொண்டுவரச் சொல்லியிருக்கிறார். வீட்டிலே தன்னால் இன்னும் கவனமாகப் பார்க்கமுடியும் என்று அவர் நினைத்ததுதான் காரணம்.

அந்தப் பெண்ணைப் பார்த்தபோது அமெரிக்க கவி எமிலி டிக்கின்ஸன் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. "ஒவ்வொரு புது நாளும் உன் வயதைக் கூட்டுவதில்லை. மாறாக உன்னைப் புதுப்பிக்கிறது.'' இருபது வருடமாகியும் அங்கயற்கண்ணி வயது

தொடர்ச்சி 25ஆம் பக்கம்

அனைத்துலக தமிழ் வானொலி
GLOBAL TAMIL RADIO
* செய்திகள் 24 மணி நேர தமிழ் ஒலிபரப்பு
* போட்டிகள் 416-264-4283 / 416-264-3666
* பாடல்கள் "மண்ணையும் மனங்களையும்
* தகவல்கள் நேசிக்கலாம்"
www.gtr24.com


# கடன்

முதிர்ந்து தோற்றமளிக்கவில்லை. புதிப்பிக்கப்பட்டிருந்தார். ஒரு பல் சற்று வெளியே தள்ள சிரித்தபடி என்னை கவனித்தார். காலை உணவை அவரே சமைத்து எடுத்துக் கொண்டுவந்து தந்தார். மருந்தையும் கையிலே கொடுத்து நான் அதை சாப்பிடும் வரைக்கும் பொறுமையோடு காத்திருந்தார். மத்தியான வேளை ஆஸ்பத்திரியிலிருந்து இதற்காகவே வந்து என்னைக் கவனித்தார். மாலையிலும் அப்படியே. முதல் நாள் அவர் ஆஸ்பத்திரிக்கு போகவில்லை என்பதை பின்னால் அறிந்தேன். வேலைக்கு போவதற்காக வெளிக்கிட்டு பின்னர் என் நிலைமையை யோசித்து மனதை மாற்றி நின்றுவிட்டார் என்று சொன்னார்கள். சங்கப்பாடலில் "செலவழுங்குதல்" என்று சொல்வார்கள். அப்படி இருந்தது அவர் செய்கை.

அந்த வீட்டில் என்னைக் கவனித்தது அங்கயற்கண்ணி மட்டுமே. வேலைக்காரர்கள் இருந்தார்கள் ஆனால் அவர்கள் என் அறைக்குள் வரக்கூடாது என்ற கட்டளை இருந்திருக்கலாம். பத்திரிகைகளில் "பல் திருத்துவதற்கு முன்" "பல் திருத்தத்திற்கு பின்" என்று இரண்டு படங்கள் வரும். அதில் "பல் திருத்துவதற்கு முன்" என்ற படத்தில் வருவதுபோல முகத் தோற்றம் கொண்ட ஒரு வேலைக்காரனுக்கு நான் அங்கே தங்கியது புதிராக இருக்கவேண்டும். எப்பொழுது பார்த்தாலும் ஓடிய நாய் இளைப்பதுபோல இளைத்துக்கொண்டே இருந்தான். காலையிலும் மாலையிலும் சாப்பாட்டு மேசையில் பிளேட்டுகளை முறையாக வைப்பது அவன் பொறுப்பு. இரண்டு கைகளிலும் கோப்பைகளை அடுக்கி கிளாசை வாயிலே கவ்விப் பிடித்து கொண்டுவந்து வைப்பான். விளம்பர இடைவேளைபோல சரியாக பதினைந்து நிமிடத்துக்கு ஒருதடவை அறை வாசலில் வந்து தலையை மட்டும் நீட்டி என்னை எட்டிப் பார்ப்பான். நான் இன்னும் இருக்கிறேனா என்று கண்காணித்தான் என்று நினைக்கிறேன்.

பேசுவதற்கு தெம்பு வந்ததும் ஒருநாள் மாலை அங்கயற்கண்ணி வழக்கம்போல மருந்து தந்தபோது "நான் உங்களுடன் படித்திருக்கிறேன், ஞாபகமிருக்கிறதா?" என்றேன். அவர் "அப்படியா?" என்றார். "கூடைப்பந்து விளையாடும்போது சப்பாத்து நுனியில் நின்று சுழன்று பந்தை கையில் எடுத்தால் நிச்சயம் அதை கூடைக்குள் போட்டுவிடுவீர்கள்" என்றேன். "அப்படியா?" "தோளிலே துணிப்பையை மாட்டி புத்தகம் காவிவரும் பழக்கத்தை பள்ளிக்கூடத்தில் ஆரம்பித்ததே நீங்கள்தான்" என்றேன். அவர் அதற்கும் "அப்படியா?" என்றார். முன்பல் கொஞ்சம் தெரிய அவர் தேன் வடிவதுபோல மெள்ள மெள்ள இதழ் விரித்தது அழகாக இருந்தது.

இரண்டு வருடம் இவருடன் ஒரே வகுப்பில் படித்த என்னை இவருக்கு அடையாளம் தெரியவில்லையே என்று நினைத்தபோது கொஞ்சம் அதிர்ச்சியாக இருந்தது. அந்த வகுப்பில் அப்பொழுதெல்லாம் என்னுடைய இருப்பு ஓர் இலையானுக்கும் கீழானதுதான் என்று கண்டபோது சிறிது வருத்தமாகவும் இருந்தது. என்னை இவ்வளவு கரிசனையாகப் பார்த்தாரே என்பது நினைவுக்கு வந்து யோசித்தபோது நடுத்தெருவில் ஒரு வழிப்போக்கர் விழுந்து கிடந்திருந்தால் அவரையும் இப்படியே கவனித்திருப்பார் என்று தோன்றியது. அவர் இயல்பு அப்படி.

ஒருநாள் காலை நண்பரும் அங்கயற்கண்ணியும் என்னை விமான நிலையத்துக்கு கூட்டிச் சென்றார்கள். லைபீரியாவில் சமிக்ஞை விளக்குகள் வீதியில் ஒரு அழகுக்காகத்தான். நண்பர் ஒரு சிவப்பு விளக்கிலும் நிற்காமல் காரை ஓட்டினார். விமான நிலையத்தில் அங்கயற்கண்ணியிடம் அவருடைய தொலைபேசி நம்பரைக் கேட்டேன். அவர் பரிசு விழுந்த பரிசு சீட்டு இலக்கத்தை சொல்வதுபோல நிதானமாக ஒவ்வொரு எண்ணாகச் சொல்ல நான் குறித்துக்கொண்டேன். அன்று நான் எப்படியோ விமானத்தை பிடித்து வீடுபோய்ச் சேர்ந்தேன். வீட்டிலே மேலும் இரண்டுநாள் ஓய்வெடுத்து என்னைத் தேற்றிக்கொண்டேன். எங்கேயோ இருக்கும் ஆப்பிரிக்க கண்டத்தில் இந்தப் பெண் மருத்துவராகப் பணியாற்றியிருக்காவிட்டால் என் கதி என்னவாகியிருக்கும் என்று யோசித்தபோது துணுக்கென்றது.

முதலில் ஒரு நன்றி மடல் வாங்கி அனுப்பலாம் என்று நினைத்தேன். அனுப்பவில்லை. தொலைபேசியில் அவரை அழைத்து நன்றி கூறுவோம் என்று நினைத்தேன், ஆனால் கூறவில்லை. நீண்ட கடிதம் ஒன்று எழுதுவோம் என்று நினைத்தேன். எழுதவில்லை. புதுவருடம் வருகிறது அப்பொழுது ஒரு வாழ்த்து அட்டை வாங்கி அதில் "நன்றி" என்று ஒரு வார்த்தையை கூட்டி எழுதி அனுப்புவோம் என்று திட்டமிட்டேன். அதுவும் நடக்கவில்லை. நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாகி பல வருடங்கள் ஓடிவிட்டன.

சமீபத்தில் அங்கயற்கண்ணி என்ற அங்கி இறந்து போய்விட்டதாக செய்தி கிடைத்தது. கொடிய ஒரு வியாதியால் பீடிக்கப்பட்டு பலநாள் வேதனை அனுபவித்து இறந்தார் என்று அறிந்தேன். "அப்படியா, அப்படியா" என்று நான் சொன்னதற்கெல்லாம் அவர் பதிலாக சொன்னது நினைவுக்கு வந்தது. என் மனம் நோகும் என்றோ என்னவோ நேரடியாக என்னைத் தெரியவில்லை என்று அவர் கூறவே இல்லை. இனிமேல் நான் அவருக்கு என் நன்றியை சொல்லமுடியாது. என்றென்றைக்குமாக.

END




# BASEMENT RENT

**PHARMACY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately.
416.759.3597 / 416.562.1252

**STEELES & MIDLAND**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.470.2859

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen. Close to TTC, mall, temple. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.754.4917

**MCCOWAN & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.972.7620

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to school, mall, costco,no frills. Avail. October 01, 13
தொடர்புகளுக்கு: 905.294.1018

**MCCOWAN & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to bus 2 mints., shopping, school, etc. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 905.472.6866

**MCCOWAN & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.826.4453

**GORE ROAD & CASTLEMORE**
Brand new 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.816.1500

**14 TH AVE. & 9TH LINE**
Brand new 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.823.0084

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.292.3900

**WARDEN & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Internet free. Close to TTC, school, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.859.6000

**MORNINGSIDE & FINCH**
Newly renovated1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC, tamil store.
647.891.4484 / 416.910.1166

**MCCOWAN & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. September 01, 2013.
தொடர்புகளுக்கு: 905.294.4690

**VICTORIAPARK & FINCH**
2 Bedroom walk - out bsmt for rent. Parking. Close to TTC (2 min. Walk), 5 min. walk to Finch. All amenities close-by. Avail. October 01, 2013. சிறுகுடும்பம் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.875.3553

**VICTORIAPARK & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Utilities included. Close to TTC, school. Avail. October 01, 2013. Week days after 5:00pm / Weekends Anytime.
தொடர்புகளுக்கு: 416.499.6893

**NEILSON & MCELVEEN**
1 Bedroom Bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.724.4818

**GOLDEN & MIDDLEFIELD**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. Parking. Close to TTC, school, mall. Working people or Family preferred.
தொடர்புகளுக்கு: 416.613.2970

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall, school. Avail. Anytime. Family preferred.
416.332.3624 / 416.898.1242

**MCCOWAN & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.271.6652 / 416.836.5284

**WARDEN & FINCH**
2 Bedroom for rent in a main floor. Parking, laundry. Close to all facilities. Bsmt also avail. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.493.6540

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.564.4200

**MARKHAM & PAINTED POST**
1 Bedroom walk-out bsmt for rent in a bsmt. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.431.4730 / 647.7713801

**NEILSON & SILVER BELL**
1 Bedroom bsmt for rent. 3 bedrooms also avail. in mainfloor. Parking, laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.848.7121

**BRIMLEY & STEELES**
3 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school, doctor office. Avail. October 01, 13
தொடர்புகளுக்கு: 905.947.1356

**SCAR. GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. October 01, 2013.
647.966.3786 / 647.621.3694

**FINCH & BIRCHMOUNT**
1 Bedroom for rent in a bsmt. All inclusive. Close to all facilities. Rent $350. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.890.5267

**MCCOWAN & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.267.7178 / 647.203.1073

**LAWRENCE & PHARMACY**
Newly renovated 2 bedrooms raised bsmt for rent. Ample sunlight & ventilation throw large windows. Sep. entrance. Big living room, full kitchen & washroom. Close to TTC, school, mall, temples, etc. Affordable rent. Cable with TVI, Tamil one TV free.
தொடர்புகளுக்கு: 416.285.0428

**MIDDLEFIELD & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.849.4467 / 647.680.7505

**9TH LINE & STEELES - MARKHAM**
Fully renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகள்: 416.858.0388

**MIDDLEFIELD & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகள்: 416.732.1810

**MORNINGVIEW & SEWELLS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
613.699.5559 / 416.625.1891

**MCCOWAN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகள்: 416.899.9351

**MIDDLEFIELD & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. September 01, 2013.
905.201.6040 / 647.228.6040

**NEILSON & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, cable, laundry. Close to TTC, HWY, shops, school. Small family or students preferred.
தொடர்புகளுக்கு: 647.702.9264

**FINCH & MIDDLEFIELD**
1 Bedroom bsmt for rent. Laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.332.9991

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep.entrance, parking, laundry. Close to TTC, Era super market. Avail. September 01, 2013.
416.292.5871 / 647.868.5871

**MIDDLEFIELD & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. September 01, 2013
தொடர்புகளுக்கு: 647.393.2081

**MCCOWAN & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.330.1420

**MORNINGSIDE & SHEPPARD (ROUGH RIVER)**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.300.7595

**BELLAMY & LAWRENCE**
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close TTC, mall. Small family preferred. Avail. immediately.
416.464.4207 / 416.431.6349

**MCLEVIN & MORNINGSIDE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.289.1680 / 416.616.0233

**BOVAIRD & WORTHINGTON**
Brand new 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.894.6617 / 647.701.6617

**MCCOWAN & ELSON**
Newly renovated 2 bedroom bsmt apt. for rent. Sep. entrance, parking, laundry. Step to school, TTC. Quiet place. Park near-by. Avail. immediately.
647.991.4437 / 905.205.0595

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.438.2904

**KENNEDY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.200.0478

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, internet, parking, cable. Single ladies or young couple preferred.
தொடர்புகளுக்கு: 416.286.1755

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to all facilities.
**KEELE & FINCH**
Furnished rooms for rent. Close to all facilities. Avail. immediately.
***905.209.9212 / 416.562.5113***

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, University. Avail. September 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.520.5883

**16TH AVE. & MCCOWAN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. September 01, 2013. No pets & No smoking.
தொடர்புகளுக்கு: 416.471.0094

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.804.5002

மேலும் பக்கங்கள் 27, 28

# BSMT FOR RENT

**MORNINGSIDE & NEILSON**
2 Bedroom bsmt for rent. sep. entrance, parking, laundry, Wi-fi included. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.414.6094

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to school, bank, Walmart, TTC. Avail. immediately.
Couple preferred.
தொடர்புகளுக்கு: 647.854.3578

**MORNINGSIDE & SEWELLS**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. 2 washrooms. அத்துடன் 4 அறைகள் கொண்ட வீடும் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately. Close to ttc, school, mall, stores, etc.
தொடர்புகளுக்கு: **416.551.8379**

**PHARMACY & FINCH**
1 bedroom avail. on main floor. 3 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to TTC, schools. Ladies preferred இரண்டு நேரச் சாப்பாடும் கொடுக்கப்படும். Avail. immediately.
416.201.1222 / 416.299.4895

**BASEMENT & ROOMS FOR RENT ETOBICOKE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. 2 Bedroom also rent in a main floor. Close to Humber College & all facilities. Avail. immediately. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 647.720.0898

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. New appliances, laminated floor. No pets.
தொடர்புகளுக்கு: 416.917.0557

## APARTMENT FOR RENT

**SHEPPARD & MEADOWVALE**
2 Bedroom apartment in main floor for rent. Rent $1400 + utilities. 2 Bedroom apartment in second floor rent. Rent $1300 + utilities.
416.409.6067 / 416.884.7020

## CONDO. FOR SALE

**BURNHAMTHORPE & HWY 10**
2 Bedroom + den condo. for sale. Parking, laundry. Close to all facilities.
Avail. September 15, 2013
தொடர்புகளுக்கு: 647.920.9335

## CONDO FOR RENT OR SALE

**NEILSON & SHEPPARD**
2 Bedroom + 2 washroom condo for rent or sale. Close to TTC, mall, HWY.
Avail. September 15, 2013.
905.554.3040 / 416.721.1349

## CAR FOR SALE

Toyota echo car for sale. 270 km. 2000 Model. Silver colour. 4 doors. Price $950.
தொடர்புகளுக்கு: 647.966.3786

# ROOM FOR RENT

**GORDON & CLAIR ROA - GUELPH**
2 Rooms for rent. Laundry. Close to Guelph University, mall. Avail. Anytime.
Students preferred.
தொடர்புகளுக்கு: 519.826.0162
Email: rajah28@hotmail.com

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom for rent in a bsmt. Sep. entrance, parking, laundry. Close to all facilities.
Avail. immediately
தொடர்புகளுக்கு: 647.330.9542

**MARKHAM & ELLESMERE**
1 Bedroom for rent. laundry, parking. Ladies preferred. இரண்டு நேரச்சாப்பாடும் கொடுக்கப்படும்.
416.431.2816 / 647.769.2816

**BRIMORTON & MARKHAM**
1 Bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகள்: 416.871.4761

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent. Sep. washroom, laundry. Close to TTC, mall, temple.
Avail. immediately.
தொடர்புகள்: 647.404.3004

**MORNINGSIDE & SEWELLS**
1 Bedroom for rent in a bsmt. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.446.7731 / 647.500.8709 / 647.893.5898

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom for rent in a bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.347.1685 / 647.299.1685

**HARDWOOD AVE & KINGSTONE**
1 Bedroom for rent. Washroom, laundry. Close to all facilities. வயதானவர்கள் விரும்பத்தக்கது. Avail. immediately.
416.835.0748 / 289.660.0983

**MARKHAM & STEELES**
1 Bedroom for rent. Laundry. Close to all facilities. Avail. September 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.558.8562

**DANFORTH & EGLINTON**
Room for rent in an apartment. Fully furnished with bed, cable tv, internet, phone, laundry. Close to TTC, mall. Sharing kitchen, washroom. Rent $400. Male only.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.637.1303

**MARKHAM & STEELES**
2 bedroom for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.735.5623

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom for rent. Parking. Close to TTC, mall. Avail. immediately.
647.346.0930 / 647.862.6590

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities.
Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.906.5013

# ROOM FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD (Rough river)**
மேல்தளத்தில் 1 அறை வாடகைக்கு உண்டு. Washroom, parking, laundry. Close to all facilities. Working people, ladies or old people preferred. Avail. Anytime. Rent $400.
தொடர்புகளுக்கு: 416.899.1123

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt சகல வசதிகளுடன் உண்டு. மற்றும் மேல் தளத்தில் 1 அறை வாடகைக்கு உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும். ஆண்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:
647.388.1481 /416. 759.7016

**MARKHAM & SHEPPARD**
Sept. apartment 1 bedroom rent on main floor. Laundry. Close to all facilities.
Avail. immediately.
416.919.9964 / 905.683.5105

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
தொடர்புகளுக்கு: 416.335.5242

**FINCH & MIDDLEFIELD**
1 Bedroom for rent in a condo. Parking, laundry, kitchen. Close to all facilities.
Small family preferred.
தொடர்புகளுக்கு: 647.835.5244

**FINCH /MORNINGSIDE**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.825.9717

## HOUSE FOR LEASE OR RENT

**TAPSCOTT & MCLEVIN**
2 Bedroom town house for rent or lease. Close to Malvern mall, TTC, school, etc.
Avail. immediately.
416.754.2002 / 416.688.8364

## வீடு விற்பனைக்கு

சாவகச்சேரியில் Driberg College அருகாமையில் 5 அறைகள் கொண்ட வீட்டுடன் 20 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. பகுதிபகுதியாகவும் கொடுக்கப்படும்.
416.269.2390 / 0776.913.148
ieslanka@hotmail.com

## TUITION CLASSES

Gr. 3 - Gr.12, College & University Math, Science, English, Functions Calculus & Vectors, Data, physics, Chemistry 7 Biology.
University Preparation Class.
Calculus I & II, Linear Algebra, Linear Statics, Dynamics, Mechanics, Physics & Chemistry.
***Ruban Master: 416.817.8226***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# HOUSE FOR RENT

**CASTLEMORE & QUEET ST. - Brampton**
4 Bedroom house for rent. Parking, laundry.
Avail. October 01, 2013.
416.587.0408 / 416.305.0264

**KENNEDY & ELLESMERE**
3 Bedroom House for rent. 2 Washrooms, parking, laundry. Close to TTC, school, subway, Highland farm. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.568.4906

**TAPSCOTT & FINCH**
Newly renovated Bungalow 4 bedrooms house for rent. 2 bedrooms bsmt with sept. entrance, Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
bsmt, வீடும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
தொடர்புகள்: 647.849.0759

**NEILSON & FINCH**
3 Bedroom + bsmt house for rent. Parking, laundry. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும். Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.495.9775

**KENNEDY & EGLINTON**
3 Bedroom bungalow house for rent.
Parking, laundry.
Avail. September 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.858.9633

**BRIMLEY & EGLINTON**
3 Bedroom house for rent. 2 Parking, laundry. Close to all facilities. Avail.immediately.
Credit history important.
தொடர்புகளுக்கு: 416.662.7984

## TAMIL INTERPRETATION SERVICE

Ontario works, ODSP, Doctors appointments போன்ற இடங்களில் மொழிபெயர்ப்பு தேவைகளுக்கு பலவருட அனுபவமுள்ள விஜய குலாவை அழையுங்கள்
Vijaya Kula: 416.315.7210

## FOR RENT

**KENNEDY & FINCH**
Truck, Tractor Trailer, parking spaces & storage for rent.
Parking spaces avail. for rent at Kennedy Rd.
தொடர்புகளுக்கு: 416.568.0686

## TUITION

An experienced Graduate tutor for Grade 5 to Grade 10. Math & Science. Tuition Center இலும், வீட்டிற்கு வந்தும் குறைந்த கட்டணத்தில் கற்பிக்கப்படும்.
Guna Master: 647.834.7358
atgunam@yahoo.ca

## தையல் வகுப்புக்கள் தையல் *Orders*

**MARKHAM & LAWRENCE**
Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse மற்றும் Ladies Items தைப்பதற்கு கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். மணப்பெண்ணுக்கும் Saree blouse தைத்துக் கொடுக்கப்படும். Saree Blouse Block எடுத்து தைப்பதற்கு கற்பிக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

மேலும் பக்கங்கள் 26, 29



SAVE NOW!
GRAND OPENING
SAVE NOW!
NEW
8 PC
QUEEN BEDROOM SET
$799.99
NEW
QUEEN BONDED LEATHER BED
$199.99
NEW
SINGLE BEDS STARTING FROM
$99.99
NEW
8 PC
QUEEN BEDROOM SET
$2199.99
NEW
8 PC
QUEEN BEDROOM SET
$1699.99
10 PC PUB TABLE
$599.99
NEW
5PC DINETTE
$299.99
NEW
7PC DINING
$449.99
NEW
3 PC SET
$799.99
NEW
POWER RECLINER + 4 MASSAGER
$2199.99
NEW
SECTIONAL
$899.99
AREA RUGS
AREA RUGS STARTING FROM $16.99 (ALL SIZES)
DECORATIVE PIECES & LAMPS
STARTING FROM $29.99
COFFEE TABLES
STARTING FROM $39.99
MATTRESS
Gel | Latex | Memory Foam | Pocket Coil | Posturepedic | Orthopedic
STARTING FROM ONLY
$39.99
FREE DELIVERY
*conditions apply
WE ALSO DO LAMINATE, GRANITE COUNTERS & AREA RUGS
MF
MODERN FURNITURE & FLOORING
803B Brimley Raod | Scarborough, ON | M1J 1C9 | 647 748 4443
Mon - Fri: 11am-9pm | Sat: 11am-8pm | Sun: 11am-7pm
AAA MOVING SERVICES | CALL FOR FREE ESTIMATES | 416-732-6931
HWY 401
KENNEDY
BRIMLEY
MCCOWAN
LAWRENCE
WE ARE HERE
EGLINTON

## திருமண சேவை

உங்கள் அன்புக்குரியவர்களின் மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.
647.556.4114 / 416.992.8782

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும், 32 வயதுடைய கனேடிய பல்கலைக்கழக (University) பட்டப்படிப்பு முடித்து வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். கனடா, அமெரிக்காவில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.299.1463

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கனடாவில் பிரஜா உரிமை பெற்று, Diploma படித்து முடித்து அலுவலகத்தில் தொழில் புரியும் இந்து வேளாள மணமகளுக்கு பெற்றோர் படித்து அலுவலகத்தில் தொழில் புரியும் கனடாவில் உள்ள வரனை தேடுகின்றனர். மணமகள் 1975 இல் பிறந்தவர். நிரந்தர தொழில் நிறுவனம் உள்ளோரும் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.208.6222

## மணமகள் தேவை

அவுஸ்ரேலியாவை வதிவிடமாக் கொண்ட 28 வயதையுடைய Telecommunication & Internet Engineering முடித்த மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
647.896.8687 / 011-94.11.236.2023

## மணமகள் தேவை

கனடாவில் அரசாங்கத் தாபனம் ஒன்றில் நிரந்தர பணியாற்றும், பிராமண மணமகனுக்கு கனடாவிலோ, அமெரிக்காவிலோ பொருத்தமான மணப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு: Sarmathil@gmail.com

### TUTORING
***By Experienced Graduates.***

- Math
- Adv. Function, Calculus & Vectors
- Physics, Data managt, Java
- Computer Training
- CCNA / CCNP Preparation Help

***Contact: 416.706.1654***

## TUITION
## KEY BOARD CLASSES
***MARKHAM & LAWRENCE***

ஆரம்ப, நடுத்தர மற்றும் உயர்தர சகல வகுப்பினர்களுக்குமான key board வகுப்புக்கள் Weekdays & Week ends இல் 3 மாத காலத்தில் தமிழ் மற்றும் ஆங்கில பாடல்கள் வாசிப்பதற்கு கற்றுக்கொடுக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

## SPACE AVAILABLE FREE*

***KENNEDY & EGLINTON*** பகுதியில் சிறப்பாக இயங்கி வரும் புதிதாக அமைக்கப்பெற்ற Coin Laundry யினுள் Tailoring (free*) செய்வதற்கான இடம் உண்டு. அனுபவமிக்கவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:416.856.0408

உடனடி வாடகைக்கு
வீடுகள், கொண்டோக்கள், பேஸ்மெண்ட்கள்
உடனடி விற்பனைக்கு

Markham/Mclevin
3+3 BR & 4WR Detached பங்களா வீடு
Middlefield / Denison
4 BR & 4 WR Double Garage வீடு
Markham / Highglen
2 BR & 2WR கொண்டோ
Rossland / Audley (Ajex)
4 BR & 4 WR Detached புதிய வீடு
Open House விபரங்களுக்கும், மேலதிக தகவல்களுக்கும் :
Jey 416-816-9011

# JOB JOB JOB

## JOB JOB JOB
***FINCH & MIDDLEFIELD***

GTA Square இல் அமைந்துள்ள உணவகம் ஒன்றிற்கு Cashier, cleaner வேலைகளுக்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.318.9866

## அழையுங்கள்

Renovation, Repairs, Painting போன்ற வேலைகள் செய்வதற்கு அழையுங்கள்:
647.998.3535

## குழந்தைகள் பராமரிப்பு
***10TH LINE & MAIN STREET***

உங்கள் குழந்தைகளை வேலைக்கு போகும் நேரத்தில் அன்பாகவும் கவனமாகவும் பராமரிக்க வேண்டுமா? வீட்டிற்கு அருகாமையில் பாடசாலை இருந்தால் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வருவதற்கும் அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: 905.591.1668

## JOB JOB JOB
***KENNEDY & EGLINTON***

***Metro Appliance*** இல் பகுதி நேர வேலைக்கு பெண் ஒருவர் தேவை. ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும்.
தொடர்புகளுக்கு: 416.298.4800

## JOB JOB JOB

Stairs நிறுவனம் ஒன்றிற்கு helper ஒருவர் தேவை. ஆசாரி வேலை தெரிந்தவராக இருக்க வேண்டும். Monday - Saturday 8:00am to 5:00pm.
தொடர்புகளுக்கு: 416.830.3932

## SAREE BLOUSE
**தையல் தேவைகளுக்கு**

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு:905.492.0259

மேலும் பக்கங்கள் 26, 27

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
***www.vlambaram.com***
***www.tamilvanakkam.com***

# JOB JOB JOB

## TAMIL DAYCARE SERVICES
***MIDDLEFIELD & FINCH***

அனுபவமிக்க குழந்தை பராமரிப்பாளர்களால் உங்கள் குழந்தைகள் அன்பாகவும் பாதுகாப்பாகவும் பராமரிக்கப்படுவர். Age limit: 2 Years - 6 Years
தொடர்புகளுக்கு: 416.648.9114

## JOB JOB JOB
***MARKHAM & 16TH AVE.***

Granite countertops experience worker தேவை. தொடர்புகளுக்கு: 416.878.6452

## குழந்தைகள் பராமரிப்பு
***10TH LINE & MAIN STREET***

உங்கள் குழந்தைகளை வேலைக்கு போகும் நேரத்தில் அன்பாகவும் கவனமாகவும் பராமரிக்க வேண்டுமா? வீட்டிற்கு அருகாமையில் பாட-சாலை இருந்தால் பிள்ளைகளை அழைத்துக்கொண்டு வருவதற்கும் அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: 905.591.1668

## JOB JOB JOB
***KENNEDY & EGLINTON***

***Metro Appliance*** இல் பகுதி நேர வேலைக்கு பெண் ஒருவர் தேவை. ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டும்.
தொடர்புகளுக்கு: 416.298.4800

## JOB JOB JOB

Stairs நிறுவனம் ஒன்றிற்கு helper ஒருவர் தேவை. ஆசாரி வேலை தெரிந்தவராக இருக்க வேண்டும். Monday - Saturday 8:00am to 5:00pm.
தொடர்புகளுக்கு: 416.830.3932

## JOB JOB JOB

***Scarborough*** வில் அமைந்துள்ள உணவகத்திற்கு பலகாரம் செய்யத் தெரிந்தவர்களும் இலங்கை, இந்திய உணவு தயாரிக்கத்தெரிந்த Cook உம் தேவை.
தொடர்புகளுக்கு: 416.788.5265

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## யோகா சோதிடம்

- கிரகப்பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

## COMMERCIAL UNIT FOR SALE

Main floor corner unit commercial space for sale. 1 Parking included. Available for any retail business or professional office. Very demand location. High traffic area. Easy access. one of the best location in Scarborough.

***Pl. Call: 416.451.0271 / 416.315.9397***

## GRACE HOPPERS DINNING & TAKEOUT

***• Breakfast • Lunch • Dinner Enjoy our Tasty***

***Hoppers, Dosa, Rotti, Kulal pittu with sambol, sambar, Curries, Seafood, Meat, Vegi, Biriyani, Noodles, Salad, Fries, Chicken.***
**We do Catering for your parties too.**



வேலைக்கு ஆட்கள் தேவை

And also enjoy: Coffee, Tea, Icecream, Fresh fruit Juice, Cake, Vadai, Rolls, sandwich.

***We can come and make hoppers for your home parties.***
***Contact: 647.522.7599*** ***3850 Finch Ave. W., Scarborough, ON (Kennedy & Finch)***

## CARS, VANS & TRUCKS WANTED

Any make, Any condition.
Pay top dollars.
Contact: 416.835.3475



## CAR WANTED

***Toyota Camry - Sienna***
***1997 - 2002. Any KM / Condition***
***Contact: 647.448.2569***

# புள்ளி மயில்...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

அழகான முருகனது அடியினைகளை அடையும் மார்க்கம் நான்கினை அருணைப் பெருமான் பின்வருமாறு அருளியுள்ளார். மனத்தை தடுத்தல், அதாவது மனம் புலன் வழிச் செல்லாமல் தடுத்தல், வெகுளியை விடுதல் அதாவது கோபத்தை அறவே விட்டுவிடுதல், தானம் இடுதல் அதாவது ஏழைகளுக்கு தானம் செய்தல், இருந்தபடி இருத்தல். அதாவது இருந்த வண்ணமே அசைவற்று இருத்தல் ஆகியவற்றை மேற்கொண்டால் முருகன் திருவடிப்பேறு தப்பாமல் கிடைக்கும். குரங்காய் அலையும் மனத்தால் பல துன்பங்கள் ஏற்படுகின்றன. அது ஓய்வின்றி சலித்து கொண்டே யிருக்கும். இறைவனின் திருவடி தியானத்தினால் அதனை ஒருமுகப்படுத்த

ஆடுவர் பாடுவர் அந்தியும் சந்தியும்
கூடுவர் குணம்பல பேசிக் கும்பிடுவர்
தேடுவர் செய்வ தொன்றறிகிலர் திடமுடன்
நாடுவர் வாடுவர் நம்பர் தம் அடியமே.

நல்ல மருந்தொன்றை நமக்குச் சிபார்சு செய்கின்றார் யோக சுவாமிகள். அது உளநோய்க்கும் உடல் நோய்க்கும் பரிகாரமாக அமைவது வாருங்கள் சென்று பெறுவோம்.

எல்லையில்லாப் பிணி தீர்க்கும் மருந்து
இம்மை மறுமைக்கும் ஏற்ற மருந்து
இல்லை என்னாது கொடுக்கும் மருந்து
ஏழையடியார்க்கு இரங்கும் மருந்து
நல்ல மருந்தொரு குருமருந்து
நல்லூரில் இருக்கின்றததை நாடிடுவீரே!



வேண்டும். மனம் அலைந்தால் ஒரு பயனுமில்லை. இது தாயுமானார் கூற்று.

அவனது திருவுருவும், ஆபரணங்களும், வாகனங்களும், திருத்தேரும் மிகமிக பெறுமதியுடையன. திருவிழாக் காலத்தில் நல்லூர் இந்திரலோகம் போலவே காட்சியளிக்கும். வேலவனின் கோல எழில் சாலச் சிறந்ததாய் ஞாலம் வியக்கு பக்தர்களின் பக்திப் பரவசமும் தூய்மையும் அன்பு எத்திக்கும் துலங்கிடக்காணலாம். நல்லூர் ஒரு தெய்வீக பூமி. அது உண்மையில் நல்ல ஊரேயாம். அந்த மண்ணில் கால் பட்டவுடன் ஒரு தெய்வீக உணர்வு ஏற்படும். அது அடியார்களின் மெய்ப்பாடுகள் காரணமாகும்.

தேர்த்திருவிழாவன்று சனத்திரள் வீதி எல்லாம் நிறைந்திருக்கும். ஊர்மக்கள் நல்லூரை நாடி வந்து கூடி நின்று ஆடிப்பாடி தேர்வடம் பிடிக்க முந்துவர். அவர்களது வேண்டுதல் இதுவாகவே இருக்கும்.

தேரேறி வருகின்றான் திருமுருகன்.
ஊரெல்லாம் கூடி நாம் வடமிழுப்போம்
சீரெல்லாம் நிறைந்திடும்மத் தேவதேவனை
பாரெல்லாம் வியந்து புகழ் பாடிடுமே
வேரில்லாமரம் போல வீழ்ந்து விட்டோம்
யாரெம்மைக் காத்திடுவார் கந்தவேளே
நேரில்லா வுந்தன் வல்லமையால்
சீருடனே வாழ்வதற்கு வழி சமைப்பாய்.


## திவ்ய ஆற்றுக்கால் தேவி ஜோதிடம்




திருமணப்பொருத்தம் முறையாகப் பார்க்கப்படும்,
திருமணத்தடை, குழந்தைபாக்கியம் இன்மை,
படிப்புத்தடை, குடும்பக்கலகம் போன்ற
தோஷங்களுக்கான பரிகாரங்கள் செய்வதற்கும் பத்து
வயதிற்குட்பட்ட குழந்தைகளின் எதிர்கால கல்வித்தடை
நிவர்த்திக்கும் ஆலோசனை வழங்கப்படும்.

**Call: Meenakshisundram Ramasamy 416.439.2002**


# கிளிமஞ்சாரோ...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

மலையை ஏறுவதற்குப் பல பாதைகள் உண்டு. அதில் நான் தேர்ந்தெடுத்த பாதை மரங்கு கிராமத்தில் இருந்து புறப்படுவது. அதனைத் தேர்ந்தெடுத்தமைக்குக் காரணம் இதுவே மிகப் பழமையான பாதையும் இதன் வழியில் இரவு தங்குவதற்குக் கொட்டில்கள் உண்டு என்பதுமாகும். மற்றைய பாதைகளில் கூடாரம் அமைத்துத் தங்க வேண்டும். மழை பெய்தால் பெரும் அசௌகரியமாக இருக்கும். படத்தில் என்னோடு நிற்பவர் என்னுடைய வழிகாட்டி. மலை ஏறும் வாசலில் ஒரு படிவத்தில் என்னைப் பற்றிய விபரங்களை எழுதி (Passport Number) என்னிடம் தந்தார்கள். ஒவ்வொரு தினமும் இரவு தங்கும் வேளையில் அந்தப் படிவத்தில் நான் ஏறியதை அத்தாட்சிப் படுத்தினார்கள். இதில் இன்னுமொரு மறைமுகமான நன்மையுண்டு. தனித்து நடக்கும் மலைப் பாதையில் ஏதும் அனர்த்தம் ஏற்பட்டு இருந்தால் அவர்கள் உடனே தேடுதல் செய்வார்கள். முதல் நாளில் மன்டாரா (Mandara Hut) குடிலை அடைய வேண்டும். எட்டு கிலோ மீட்டர் தூரத்தை நடந்து 2395 அடி உயரம் ஏறினோம். நாலு மணித்தியாலங்களில், வழியில் ஒரு மணியளவில் மதிய உணவை வழியில் சாப்பிட்டுவிட்டுத் தொடர்ந்தோம். முதல் நாள் நல்ல அடர்ந்த காடுகளுக்கூடாகப் பயணம் தொடர்ந்தது. சாப்பாட்டுக்குப்பின் தொடர் கையில் ஒரு அழகிய நீர் வீழ்ச்சியையும் கண்டேன். இவை பற்றிய விபரங்கள் Map 1 இலும்




காணலாம். மன்டாரா குடிலை அடைந்தவுடன் தேனீரும் Muffin உம் என்னை வரவேற்றது. மூன்று மணிக்கு இவ்விடத்தை அடைந்தோம்.

இங்கு தங்குவதற்கு சிறு 'A' Frame குடில்கள் நால்வருக்கு ஒன்றாக அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் மின்சார வசதி கிடையாது. சூரிய கலன்கள் மூலம் ஒளி பெறப்படுகிறது. தண்ணீர் மிக அருமை. காலையிலும் மாலையிலும் பிளாஸ்டிக் பாத்திரத்தில் சுடுநீர் தருவார்கள். ஆறு தினங்களும் குளிப்பு கிடையாது. உணவுகள் பொதுவான போசன அறையில் பரிமாறப்படும். மாலை 3 மணி 30 நிமிடம் இருக்கும் சைமன், (எனது வழிகாட்டி) "வாருங்கள் மவுன்டி கிரேட்டரைப் பார்ப்போம்" என்றார். அது ஒரு அணைந்த எரிமலை உச்சி. அதன் உச்சியில் சுற்றி நடக்கலாம். நடுவில் மழைக் காலத்தில் குளம்போல நீர் நிறைந்துநிற்கும். அதிலிருந்து மீண்டும் மன்டாரா குடிலுக்கு மாலை ஆறு மணிபோல் திரும்பி விட்டோம். அடுத்த நாள் காலை உணவுக்குப்பின் எமது மலை யாத்திரையை ஓரம்போ குடிலை (Horombo Hut) நோக்கி துவங்கினோம். இரண்டாம் நாள் ஏறத்தாள ஐந்து மணித்தியாலங்களில் 11.6 கி.மீட்டர் நடந்து மேலும் 3346அடி உயரம் ஏறி ஓரம்போ



குடிலை அடைந்தோம். வழியில் கம்பியா டாபு (Kambi Ya Taabu) என்னும் இடத்தில் மதிய உணவு உண்டோம் ஆரம்பத்தில் அடர்ந்த காடாக இருந்த பாதை இப்போ புதர் காடுகளாக மாறிவிட்டது. உச்சி வெய்யிலில் குச்சி ஐஸ்போல் வேர்த்துக் கொட்டியபடி நடந்து கொண்டிருந்தோம். ஒரு கனேடியக் கொடி ஒட்டிய தொப்பி அணிந்திருந்த என்னைக் கவனித்த வேறு மூன்று கனேடியர்கள் தம்மை அறிமுகப்படுத்தி வாழ்த்திச் சென்றார்கள். கடைசியில் ஓரம்போ குடிலை அடைந்தோம். மூன்றாவது தினம் எமது யாத்திரை மலை உச்சியை நோக்கிச் சென்றாலும் வித்தியாசமான பாதையில் சென்று மீண்டும் திரும்பி ஓரம்போ குடிலுக்கே வந்து விட்டோம். இப்படிச் செய்வது எமது உடம்பு உயரத்திற்கு பழக்கப்படுவதற்கு உதவும் என்பதற்காகவே அத்தினம் சீபிரா ரொக் (Zebra Rock) என்ற பாறைவரை சென்று மீண்டும் திரும்பினோம்.

இந்தப் பாறையின் பக்கங்கள் வரிக்குதிரை போல் உள்ளதால் அப்பெயர் வந்தது. அந்தப் பாறையுள்ள மலையை ஏறி மறுபக்கம் வந்தபோது அடுத்த நாள் நான் நடக்கவிருக்கும் பாதை தெரிந்தது. மீண்டும் சில மணித்தியால நடைக்குப்பின் முதல் நாள் தங்கிய ஓரம்போ குடிலை அடைந்தோம். அன்று மாலை ஒரு மகிழ்ச்சியான செய்தி வந்தது. எனது பொதிகள் எனக்குக் கிடைத்தமையே அச்செய்தி. இது பெரும் ஆறுதலாக இருந்தது. முதல் வேலையாக இரத்த அழுத்த மருந்தைக் குடித்துவிட்டு கடனாகப் பெற்ற ஆடைகளைத் திருப்பி அனுப்பினேன். பெய் எனப் பெய்யும் மழைபோல் தேவையான வேளையில் பொதி கிடைத்தமை பிரபஞ்ச சக்தியில் எனக்கிருந்த நம்பிக்கையை மேலும் வலுவடையச் செய்தது என்று தான் சொல்ல வேண்டும். நாலாவது தினம் எனது யாத்திரை ஆறு மணித்தியாலங்களில் 9.6 கி.மீட்டர் தூரத்தைக் கடந்து 3362 அடி உயரமும் ஏறி கீபோ குடிலை அடைந்தோம். நடக்கத் துவங்கி சிறிது நேரத்தில் மாவுவா றிவர் (Maua River) குறுக்கிட்டது. இது ஒரு சிற்றாறு. இதற்குப் பின் ஒரு இடத்திலும் நீர் கிடையாது. தரையும் பாலை நிலமாக மாறிவிடும்.

- மிகுதி அடுத்த வாரம் தொடரும்...

# "எல்லாவற்றுக்கும் ஆஸ்தான குரு சினிமாதான்"

## நேர்காணல்: இயக்குனர் சசி

'சொல்லாமலே', 'ரோஜா கூட்டம்', 'டிஸ்சிம்', 'பூ' ஆகிய நான்கு வெற்றிப் படங்களின் இயக்குநர் சசி, எழுத்தாளர் தமிழ்செல்வனின் ஒரு சிறுகதையை 'பூ' திரைப்படமாக எடுத்து அனைவரையும் திரும்பிப் பார்க்கச் செய்தவர். திரைப்படங்களுக்கான இந்திய தேசிய விருதுக்குச் சொந்தக்காரர். தற்போது ஐந்தாவது படமாக 'ஐந்து ஐந்து ஐந்து' என்று அழுத்தமான மூன்று ஐந்துகளுடன் வந்துள்ளார். இதுவும் வெற்றிப்படம்! அதிரடி, ஆக்ஷன் படமும்கூட. மென்மையான உணர்வுகள் கொண்டவர் எப்படி அதிரடி, ஆக்ஷன் படத்தை இயக்கினார்? 'விளம்பரம்' இதழுக்காக சசியைச் சந்தித்து உரையாடினோம்.

இயக்குனர் சசி என்றால் மென்மையான உணர்வுகளை திரையில் பதிவு செய்பவர் என்று பெயரெடுத்த நீங்கள் எப்படி 555 ஆக்ஷன் படம் எடுத்தீர்கள்?

நான் 'சொல்லாமலே', 'ரோஜா கூட்டம்', 'டிஸ்சிம்', 'பூ' படங்களில் மென்மையான உணர்வுகளை பதிவு செய்தேன்தான். 'பூ' படத்துக்காக பாராட்டுகளும் விருதுகளும் பெற்றேன். ஆனால், 'பூ' வெளிவந்த பிறகு என்னை எல்லோரும் ஆர்ட் பட இயக்குனர் என்ற முத்திரை குத்திவிட்டார்கள். எனவே, இந்த திரைத்துறையில் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்றால் 'வியாபார ரீதியான' ஒரு ஆக்ஷன் படம் செய்துகாண்பிக்க வேண்டும் என்று தோன்றியது. இப்போது என்னாலும் 'கமர்சியல் ஆக்ஷன் படம்' பண்ணமுடியும் என்று நிரூபித்துவிட்டேன்.

இந்த படத்தில் நாயகனுக்கு ஒரு அமானுச சக்தி (ஜோடனைதான்) இருப்பதாக காட்டியிருப்பீர்கள். அப்படியொரு சக்தியிருப்பதாக நீங்கள் நம்புகிறீர்களா?

'555' படத்தில் நீங்கள் பார்த்த அந்த அமானுச சக்தி உண்மையிலே எனக்குத் தெரிந்த ஒரு பையனோட வாழ்க்கையில் நடந்தது. அதை அப்படியே வைத்தேன். படம் பார்த்தவர்கள் அனைவரும்கூட, அதைக் கற்பனை என்று எண்ணாமல், உண்மை என்றே நம்பினார்கள்.

இந்தப் படத்தில் கதாநாயகன் கனடா செல்வதாக காட்டியிருப்பீர்கள். உலகில் எத்தனையோ நாடுகள் இருக்க கனடாவை தேர்ந்தெடுத்ததின் காரணம்?

எல்லா படங்களிலும் யு.எஸ்.ஏ. போறதா காட்சி அமைப்பார்கள். நான் இந்த வழக்கத்தில் இருந்து ஒரு மாறுதலைச் செய்ய வேண்டும் என நினைத்தேன். தற்போது உலகில் அனேகமாக எல்லா நாடுகளிலும் தமிழர்கள் இருக்கிறார்கள். அதில், பெரும்பங்கு தமிழர்கள் கனடாவில் வாழ்கிறார்கள். எனவேதான் கதாநாயகன் கனடா போறதாக சொன்னேன்.

ஆகஸ்டு 15 ஆம் தேதி படம் வெளிவருவதாக விளம்பரம் வந்தது. ஆனால், திடீரென்று ஆக்ஸ்டு 10ஆம் தேதியே படத்தை வெளியிட்டுவிட்டீர்கள். என்ன காரணம்?

தற்போதைய தமிழ் சினிமாவில் சின்ன பட்ஜெட் படமாக இருந்தாலும்கூட சுமார் 100 தியேட்டர்களுக்கு மேல் வெளியிட்டால்தான், வியாபாரத்தில் வெற்றிபெற முடியும் என்பதுதான் யதார்த்தம். ஆனால், சிறு படங்களுக்கு அவ்வளவு தியேட்டர்கள் கிடைப்பதும் கஷ்டமாக உள்ளது. இந்தப் படம் வெளிவர நல்ல சந்தர்ப்பம் எதிர்பார்த்து சுமார் மூன்று மாதங்கள் காத்திருந்தோம். ஆகஸ்ட் 15 ஆம் தேதி வெளிவருவதாக இருந்த 'தலைவா' படம் வெளிவர தாமதமானதால், அப்படத்துக்காக தயாராக இருந்த தியேட்டர்களுக்கு புதிய படம் தேவைப்பட்டது. இதனைப் பயன்படுத்திக் கொண்டோம். '555' படம் தமிழகம் முழுவதும் சுமார் 240 திரையரங்குகளில் வெளியானது. இதனால், நாங்கள் எதிர் பார்த்ததைவிட அதிகம் வசூலாகியிருந்தது.

உங்களுடைய அடுத்தப் படமும் ஆக்ஷன் படமாகத்தான் இருக்குமா?

இந்த நிமிடம் வரை எதுவும் முடிவு செய்யவில்லை. ஆனால், அந்தப் படம் என் முந்தைய படம் போல் அதிக காலம் தாமதமாகாது.

இந்த படத்தின் மூலமாக பரத்துக்கு இந்தி, ஆங்கில படம் வாய்ப்பு கிடைத்திருப்பது பற்றி?

'555' படத்தின் டிரைலர் பார்த்து இந்தி, ஆங்கிலம் பட வாய்ப்பு பரத்துக்கு கிடைத்திருக்கிறது. எனக்கு மிக்க சந்தோஷமே.

தொடர்ந்து உங்கள் படங்களில் ஒளிப்பதிவு, இசையமைப்பாளர் போன்ற தொழில்நுட்பக் கலைஞர்களை புதுசு, புதுசாக அறிமுகப்படுத்துகிறீர்கள். '555' படத்தில் கூட ஒளிப்பதிவாளர், எடிட்டர், இசைப்பாளர் மூவரும் புதுமுகங்கள். ஏன்?

என்னுடைய முதல் படமான 'சொல்லாமலே' ஒரு காதல் படம். இந்தப் படத்தின் நாயகன் லிவிங்ஸ்டன். அப்பொழுது அவர் முன்னணி நடிகர் கிடையாது. ஆனாலும், எனக்கு



- சந்திப்பு: சிவதாணு -

கதையின் மேல் அதீத நம்பிக்கை இருந்ததால் நாயகனைப் பற்றி கவலைப்படவில்லை. அதே போன்ற நம்பிக்கை எனக்கு இருக்கும்போது, ஸ்டார் மதிப்புகளைப் பற்றி கவலைப்படாமல், என்னால் புதுசா பல பேர்களை அறிமுகப்படுத்த முடிகிறது.

யாரிடமும் உதவி இயக்குனராக வேலைப் பார்க்காமலே கலைஞர் டிவி நாளைய இயக்குனர் மூலமாக இயக்குனராகும் போக்கு தற்போது தமிழில் உருவாகியுள்ளது. 'சூது கவ்வும்' போல் அவர்கள் படங்களும் சக்கைப்போடு போடுகிறது. இந்த மாற்றத்தை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?

எல்லாவற்றுக்கும் ஆஸ்தான குரு சினி-மாதான்.

# ஆதலால்...

22ஆம் பக்கத்தொடர்ச்சி

இசை: யுவன் சங்கர்ராஜா. 'ஆராரிரோ' பாடல் நெகிழ்ச்சி, நெஞ்சையடைக்கிறது. பின்னணியில் ஆங்காங்கே ராஜாவின் மெட்டுக்களை ரீமிக்ஸ் செய்திருக்கிறார். நன்றாக இருக்கிறது. ஒளிப்பதிவு: சூர்யா. அவ்வளவு இயல்பாயிருக்கிறது காட்சிகள். கண்ணில் ஒற்றிக்கொள்ளலாம். எடிட்டிங்: ஆண்டனி. படத்தை சுவாரஸ்யமாக்குவதில் இவர் பங்கு நிறைய என்பது தெரிகிறது. கதை, திரைக்கதை, இயக்கம்: சுசீந்திரன். திரைக்கதைதான் இப்படத்தின் வெற்றிக்கு முதல் காரணம். அவ்வளவு நேர்த்தி. கல்லூரி மாணவர்களின் காதல், அதில் இனி சொல்வதற்கு ஒன்றுமில்லை என்னும் அளவு தமிழ் சினிமா இந்தக் களத்தில் மேய்ந்துவிட்டது. என்ன புதுசாய் இருந்துவிடப் போகிறது என்று உட்கார்ந்தால், கதாநாயகி – கதாநாயகன் குடும்பங்களை அறிமுகம் செய்யும் முதல் காட்சியிலேயே நம் புருவத்தை உயர்த்துகிறார். அம்மாவுக்கும் பெண்ணுக்கும் இடையேயான உணர்ச்சிப் போராட்ட காட்சியை படமாக்கிய விதம் ஆச்சரியப்பட வைக்கிறது. உச்சக்கட்ட காட்சியில் குழந்தையை காட்டும்போது மனம் பதறுகிறது. ஏதாவது கருத்து சொன்னால்தான் நம் தமிழ் சினிமா ரசிகர்களுக்குப் பிடிக்கும். சுசீந்திரன் இந்தப் படத்தில் நிறையவே சொல்கிறார். பெற்றோர்கள், பிள்ளைகள் வளர்ப்பில் எந்த அளவுக்கு கண்காணிப்போடு இருத்தல் வேண்டும், காதலர்களுக்கு இடையேயான உறவு எந்த நிலையிலும் ஒரு எல்லையைத் தாண்டக்கூடாது... என அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஆதலால் படம் பார்க்கலாம்!




AMBIHA SILK (Fancy Jewellery)

FINCH & MIDDLEFIELD



இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட உயர்தர Gold கவரிங் தலிக்கொடி, Gold Bangle, செயின், பதக்கம், மணப்பெண் அலங்கார நகைகள், Fancy Necklaces வித்தியசமான Designகளில் மற்றும் Saree, Shalwar, Top இவை எல்லாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

அழையுங்கள்: 416.297.5261



# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

### இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

சாத்திரியார் வெற்றிலையைப் பக்குவமாப் பிடித்தபடியே, அதன் கூரான நுனியைப் பிடித்துக் கொள்ளுமாறு சிவாவைக் கேட்க, சிவாவும் கவனமாக, குமிழ் சிதறுண்டு போகாமல், வெற்றிலையின் நுனியை வலது கையால் பிடித்துக் கொண்டான். வெற்றிலையின் அகன்ற அடிப்பாகத்தை சாத்திரியாரின் வலதுகை பிடித்திருக்க, வெற்றிலையைக் கிடையாக இருவரும் வைத்திருந்தார்கள்.

"சார், இப்ப நான் சில மந்திரங்கள் ஜெபித்து என் அப்பன் கருப்பண்ணா சாமியை வரவழைப்பேன். அவர் வந்து இந்த மையில் எங்களுக்கு காட்சி தந்து உங்களைப்பற்றிய பிரச்சனைகளைக் கூறுவார். அதனை நான் உங்களுக்கு சொல்லுவேன். இடையிலை ஏதாச்சும் சொல்லிக் குழப்பிப் போடாதீங்க. அம்மா எல்லாவற்றையும் ரேப் பண்ணித் தருவாங்க. வீட்டிலையும் நீங்கள் கொண்டு போய் வசதியாய்க் கேட்கலாம்" என்றவர், கண்களை மூடிச் சில மந்திரங்களை மெதுவாக முணுமுணுத்தார். ஏதோ சத்தம் வருவது போல இருந்ததே தவிர என்ன மந்திரம் கூறுகின்றார் எனச் சிவாவிற்கு விளங்கவில்லை.

சாத்திரியார் மந்திரங்களை உச்சரிக்கத் தொடங்கியதும் அவரின் மனைவி தனது கதிரையை இன்னமும் இரண்டடி பின்னாக நகர்த்திக் கொண்டாள்.

இரண்டு நிமிடங்கள் கழிந்திருக்கும்,

சாத்திரியார் கண்களைத் திறந்தார். வெற்றிலையைப் பக்குவமாக, சிவாவின் வலது கையை விரித்து உள்ளங்கையில் கிடையாக வெகு லாவகமாக வைத்து விட்டார். மைக் குமிழ் சிதறுண்டு போகாது பத்திரமாக அப்படியே ஒளிர்ந்து கொண்டு இருந்தது.

இருகரங்களையும் கூப்பிய வண்ணம். மையை உற்றுப் பார்க்கத் தொடங்கினார். இன்னமும் அவரது வாய் ஏதோ முணுமுணுத்துக் கொண்டுதான் இருந்தது.

சிவாவும் குமிழின் மேற் கண்போட்டான். ஏதோ தெரிகிறதே! ஒருவேளை மின்குமிழின் உருவம்தான் குமிழிற் தெரிகிறதோ?

முணுமுணுப்பை நிறுத்தியவர் மேலும் கொஞ்சநேரம் உற்றுப் பார்த்து விட்டு, சிவாவை நிமிர்ந்து பார்த்தார்.

சார் நீங்க கிறிஸ்தவரா? உங்க பேரை. சிவராசா ரபார்ட்டு என்று சாமி சொல்லுறாங்களே?"

சிவா சரி என்பது போலத் தலையை ஆட்டினான். சிவாவிற்கு ஆச்சரியமாக இருந்தது. இன்னமும் தான் தனது பெயரை சாத்திரியாருக்குக் கூறாதது ஞாபகத்திற்கு வந்தது. இது எப்படி? சிவா ஒருவித பரபரப்புக்குள்ளாகினான்.

சாத்திரியார் மீண்டும் மையினைப் பார்த்துக் கூறத் தொடங்கினார்.

"சார் இப்ப சாமி உங்க வீட்டுக்குப் போகிறார். கென்னடி றோட்டாலை வடக்காகப் போகிறார். ஹைவே 401 தாண்டி பிஞ்சையும் தாண்டுகிறார். விநாயகர் ஆலயம் வருகிறது. சாமி விநாயகரை வணங்கிட்டு மீண்டும் கென்னடி றோட்டில் வடக்காகப் போகிறார். ஸ்ரீல் சந்தி. தாண்டிப் போக விரும்புகிறார். வடக்காகப் போக முடியேல்லை. ஸ்ரீலுக்கு வடக்காக, கென்னடியில் ஒரு அக்சிடென்ற். காரும் வானும் மோதுப்பட்டு நிக்குதுகள். ஆம்புலன்ஸ் வண்டிகளிலை ஆக்களை ஏற்றுனம். ஒருவர் இறந்து விட்டார். பெண்பிள்ளை போல இருக்குது. ரணம் தாண்டிச் சாமி போக விரும்பவில்லை. கிழக்காகப் பார்க்கிறார். ஸ்ரீலிலை கிழக்காகப் போகிறார் மக்கோவன் சந்தியிலை வடக்காகப் போகிறார். 16 அவனியுவிலை மேற்காகத் திரும்புகிறார்"

சிவா பரபரப்பாகின்றான். தனது வீட்டுக்குக் கிட்டவாக இடத்தினைச் சாத்திரியார் குறிப்பிடுவது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"வலது புறமாகத் திரும்புகிறார். றோட்டின் பெயர் தெளிவாக இல்லை." சிவா திகைத்துவிட்டான் இது எப்படி?

அந்த வீதியின் பெயர்ப்பலகை விழுந்து, பின்னர் காணாமல் போய் இரண்டு நாட்கள்தான் ஆகிறது.

**◊ கனி ◊**

"கனக்கப் புது வீடுகள் தெரியுது. இன்னமும் வீடுகள் கட்டிக் கொண்டு இருக்கினம். இடது பக்கமாக, டேவிட்சன் அவனியுவில் திரும்பி வலதுபக்கமாக இருக்கும் மூன்றாவது வீட்டினுள் நுழைகிறார். வீட்டு இரக்கம் 72 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது." சிவாவுக்கு ஆச்சரியத்தை அடக்கமுடியாமல் இருந்தது. ஆனாலும் அடக்கிக் கொண்டான். குழப்பக் கூடாது எனச் சாத்திரியார் கூறியிருந்தாரல்லவா!

"சாமி வீட்டுக்குள் போறார். வீட்டிலை ஒரு அம்மா இருக்காங்க, சோபாவில் இருந்து ஏதோ புஸ்தகம் வாசிட்டு இருக்காங்க. சமையல் அறைக்குள் ஒரு சின்னப் பெண்ணு சாப்பிட்டுக்கிட்டு இருக்காங்க. அப்புறம் ஒரு அறைக்குள் போறார் சாமி."

சாத்திரியார் நிறுத்தினார். அவரது புருவங்கள் மேலெழுவதை சிவாவினால் பார்க்கக் கூடியதாக இருந்தது.

"அது சாரோடை ஒவ்பீஸ் றூம் போலை. அங்கிருக்கும் கதிரையில் அது இருக்குது"

அது என்பதைக் கொஞ்சம் அழுத்திக் கூறினார் சாத்திரியார்.

எது என்ற கேள்வி மனசுக்குள் எழ, சிவா உசாரானான். ஆனாலும் கையை அசைக்கவில்லை.

வெற்றிலையில் நின்றும் கண்களை எடுத்தவர் சிவாவை நிமிர்ந்து பார்த்தார். அவரது முகம் பயத்தினால் பெரியதாக, அவரது கண்கள் விரிந்தன. அருகில் வந்த அவரது மனைவியும் மையை எட்டிப் பார்த்து விட்டு, கண்களில் பயம் தொனிக்க பின்னால் நகர்ந்து கொண்டாள்.

(மை விவகாரம் இன்னமும் இருக்கிறது.)

# சங்க இலக்கியத்தில் காதல் கோலங்கள்

## என் நெஞ்சம் அவளையே நாடுதே! அருகிருந்து அணைக்கத்துடிக்குதே! தலைவன் தனது தேர்ப்பாகனுக்கு தனது உள்ளத்துணர்வினை வெளிப்படுத்துகின்றான்.

அருளூர் நன்முல்லையார் என்னும் புலவர் பாலைநிலத்துத் தலைவனின் காமக் கிளர்வை எடுத்தியம்பும் பாடல் இதோ! தேர்ப்பாகனிடம் தனது மனதின் கடுகதியை எடுத்தியம்பி தேரை விரைவாக ஓட்டும்படி ஆலோசனை நல்கின்றானா? அவ்வளவிற்கு விரகதாகம் அவனை ஆட்டிப் படைக்கின்றதா? கற்பனையில் மிதக்கின்றானா? அவனது ஊரின் அழகை வர்ணித்து அதன் இயல்பைக்காட்டுகின்றாரே நல்முல்லையார்.

அஞ்சுவது அறியாது, அமர் துணை தழீஇ
நெஞ்சு நப்பிரிந்தன்று ஆயினும் எஞ்சிய,
கை பிணி நெகிழின் அஃ்து எவனோ நன்றும்
சேய அம்ம, இருவாம் இடையே
முக் கடல் திரையின் முழங்கி, வலன் ஏர்பு
கோட் புலி வழங்கும் சோலை
ஏனைத்து என்று எண்ணுகோ முயக்கிடை

அருளூர் நல்முல்லையார் பாலை 237

தேர்ப் பாகனே! பயத்தை அறியாது வெட்கத்தை அல்லது நாணத்தைத் தரத்தக்க தன்மையுடைய காம வேட்கையால் என் நெஞ்சம் தடுமாறுகின்றது. நான் மனதால் முழுமையாக காதலிக்கும் எனது தலைவியை தழுவி அணைத்தல் பொருட்டு எனது நெஞ்சமோ எம்மை விட்டுப் பிரிந்து அங்கே சென்றுவிட்டது. அவளிடம் எனது உள்ளம் சென்று காதல் மொழி மௌனமாகத்தானே பேசும். ஆனால் என்னிடம் எஞ்சியுள்ள கைகளோ அவளை ஆரத்தழுவமாட்டாமல்



ஏக்கம் கொள்கின்றன. கைகளால் தழுவும்போது அவளது உடல் நெகிழும் தன்மையைப் பெறவில்லையே! நெஞ்சம் மட்டும் சென்று அங்கு தழுவுவதில் என்ன பயன். நான் அவ்விதம் வழுவிக்கொள்ள முடியாமைக்கு அவளுக்கும் எனக்கும் இடையே உள்ள தூரம் மிகவும் நெடியது. இந்த இடையே நாம் செல்லவேண்டிய வழிகளில் உள்ள தடை-களை எவ்விதம் கடப்பேன். கடல் அலை ஆர்ப்பரிப்பதுபோன்று உறுமும் காட்டுப் புலிகளைத் தாண்டி எவ்விதம் சென்று அவளை அடைவேனோ என தனது பாகனிடம் தனது உள்ளக்கிடக்கையை எடுத்துரைக்கின்றான்

**- த. சிவபாலு -**
B.Ed (Hons), M.A

தலைவன். அவ்விதம் இடையூறு தரவல்ல புலிகள் தான் இந்தக் காட்டிடை எத்தனை என எண்ணுவேன்? என்று தனது விரகதாகத்தை பாகனுக்கு எடுத்துரைக்கின்றான் தலைவன். இது காதல் படுத்தும் பாடா காமக்கிறுக்கா? பேண்வளிச் சேறல் என வள்ளுவர் குறிப்பிடும் காம இச்சை யாரைத்தான் விட்டுவைக்கின்றது. காமத்தாலானது உலகம்.

தொடர்ச்சி 34ஆம் பக்கம்

# தலைவா

மும்பாயில் கலவரம் என்பதால் தந்தை, கதாநாயகனான தன் மகனை அவுஸ்திரேலியாவிற்கு அவரது நண்பர், நண்பரின் மகனுடனும் அனுப்புகிறார். அங்கு இரு பிள்ளைகளும் வளர்ந்து, தண்ணீர் போத்தல் வியாபாரத்துடன் கதையின் கதா-நாயகன் ஒரு நடன குழு ஒன்றையும் நடத்துகிறார். இதுதான் கிட்டடியில் வெளிவந்த இளையதளபதி விஜய் நடிக்கும் தலைவா படத்தின் தொடக்கம்.

இப்படி போகிற கதை கதாநாயகியை சந்தித்தவுடன் மாறுகிறது. அவுஸ்திரேலியாவில் சில காலம் காதல் காட்சிகளுடன் கதை செல்கிறது. பின்னர் கதாநாயகியின் தந்தை அவர்களுக்கு கல்யாணம் செய்விக்க விரும்புவதால் மூவரும் கதாநாயகனின் தந்தையை சந்திக்க மும்பாயிற்கு செல்கிறார்கள்.

அங்கு மும்பாய் தமிழர்களுக்கு தலைவராக கதாநாயகனின் தந்தை விளங்குகிறார் என்று காணுகிறார்கள். அது கதாநாயகனுக்கு அதிசயமாக இருந்தாலும், அவருக்கு இன்னும் ஒரு அதிசயம் காத்திருந்தது. கதாநாயகியும் அவரது தந்தையும் உண்மையில் போலீஸ் உத்தியோகத்தர்கள். அதற்கு மேல் கதாநாயகனின் தந்தையை கைது செய்வதற்காக இவ்வாறு வேடம் போட்டார்கள் என்றும் காண்கிறார்.

இத்துடன் கதையை நிறுத்திவிட்டு கருத்து ஒன்றை பார்ப்போம். அதாவது இப்படத்தில் யாராவது முழுமையாக நல்லவர்கள் இருக்கிறார்களா? இல்லையா? எனப் பார்ப்போம்.

இப்படத்தில் கதாநாயகனின் தந்தை மக்களுக்கு தலைவனாக விளங்கினாலும், அவர் செய்யும் பல விடயங்கள் சட்டத்திற்கு எதிரானது. இதை செய்யும் அவரே ஒத்துக் கொண்டதால் தான் அவர் மகனை அவுஸ்திரேலியாவிற்கு அனுப்பினார்.

தந்தையின் பதவியை மகனும் ஏற்க வேண்டி வந்தபோது அவரும் மக்களின் நன்மைக்காகவே தவறுகள் பல செய்கிறார். ஆனால் இவை சட்டத்திற்கு எதிரானாவை என்பதால் அவரும் முழுமையாக நல்லவர்



என்று கூற முடியாது. அவருடன் உதவி செய்பவர்களையும் முழுமையாக நல்லவர்கள் என்றும் கூற முடியாது.

கடைசியில் கதாநாயகியைப் பார்ப்போம். கதாநாயகனின் குற்றவாளியான தந்தையை பிடிப்பதற்காகவே அவள் கதாநாயகனை காதலிப்பது மாதிரி நடிக்கிறார் என்று சொல்லலாம். ஆனால் அந்த நடிப்பு ஒரு கட்டத்தை தாண்டிய பிறகு இப்படி நடிப்பது தவறு என்று சொல்லலாம். அவர் கதாநாயகனை ஏமாற்றுகிறார்.

ஆனால் படத்தின் முடிவில் என்ன நடக்கிறது என்று வைத்து அவர் செய்தது சரியா தவறா என்று முடிவு எடுக்கலாம். கடைசியில் கதாநாயகி வேலையை விட்டு விட்டு கதாநாயனுடன் சேர்ந்ததால் கதாநாயகி பொய் சொல்லவில்லை என்றும், அதனால் முழு படத்திலும் கதாநாயகி தான் முழு நல்லவர் என்றும் சொல்லலாம்.

இப்படத்தில் "ஒருவர் ஆயுதத்தை எடுத்தால், அது அவரை காக்கும் அல்லது அழிக்கும்" என்று அடிக்கடி கூறப்படுகிறது.

இங்கு ஆயுதம் கதாநாயகனின் தந்தையை அழித்ததாகவும் கதாநாயகியை காத்ததாகவும் சொல்லலாம்.



**ஞா. ஆரணி**
அகவை 15

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.




# Education

## Review Tutorials 13-16

➤ **PHYSICS 12**

A pitched 160 g baseball in a horizontal flight with a speed of 40m/s is struck by a batter. After leaving the bat, the ball travels in the opposite direction ( horizontally) with the speed of 52m/s.


(i) What is the impulse acts on the ball while it is contact with the bat?

(ii) If the impact time for the base ball-bat collision is 1.3m.s, calculate the average force acts on the base ball.

➤ **BIOLOGY 12** Explain when and how mRNA is modified in the nucleus and the purpose.


➤ **CHEMISTRY 12 & IB**

(i) Predict the major product/s of the following with $HNO_3/ H_2SO_4$.



(a) (b) (c)

(ii) Write the major products of the when react with $AlCl_3/CH_3Cl$



(a) (b)

(ii) Balance the equation in acidic solution

$FeS + NO_3^- \rightarrow Fe^{3+} + NO + SO_4^-$

➤ **CHEMISTRY 11**

(i) A 17.2 g of impure $NaHCO_3$ contains 3g of $KNO_3$. Solubility of $KNO_3$ and $NaHCO_3$ are 32g and 8g. What is the smallest volume of water at 20°C that could be used to remove the impurity and leave pure $NaHCO_3$

(ii) A 20.0 g sample that is 95% $K_2Cr_2O_7$ is allowed to react with 50.0 g of gaseous hydrogen chloride. How much $Cl_2$ is produced in grams?

$K_2Cr_2O_7 (aq) + 14HCl(g) \rightarrow 7H_2O(l) + 2KCl (aq) + 2 CrCl_3(aq) + 3 Cl_2(g)$

➤ **Math 11& 12**

(i) Factor $x^5$-16x

(ii) If a bus travelled 10km/h faster, it would take 2 h less time to make a 400km trip. Determine its speed?

(12 – A) Write the expression $27x^3 - 1$ in factored form

(12 – B) The polynomila function $24x^3 - mx^2 - 16x - 6$ has factors (3x+1) and (2x +2). Determine the value of m.

## Answer Key : 13-15

➤ **CHEMISTRY 11,12 & IB**

(A ) $CaCO_3 + 2HCl \rightarrow CaCl_2 + H_2O + CO_2$

Number of moles of HCl added , n= cv = 0.50 x0.10= 0.05 Excess HCl in the mixture was titrated with 22ml, 0.5mol/L NaOH ; $NaOH + HCl \rightarrow NaCl + H_2O$

Number moles of NaOH , n= cv; n= 0.50x 0.022= 0.011mol ; Excess HCl in the mixture= 0.011mol

Moles of HCl reacted with $CaCO_3$ = 0.05- 0.011 = 0.039

Moles of $CaCO_3$ = 0.039 /2 ( stochiometric ratio 1:2)

Mass of $CaCO_3$ = n x Mm = 0.0195 x 100= 1.95 g

Mass percent of $CaCO_3$ = (1.95 x100)/2= 98%.

(B) The emission spectrum of atomic hydrogen is divided into a number of spectral lines. These lines are due to electrons moving between energy levels in the atom. Transition of electron in hydrogen between quantized energy levels with different quantum numbers yields a photon by emission with quantum energy

(C) Third ionization energy magnesium > 3rd ionization energy of Fluorine. Reason – removal of an electron from an octet (3rd) is harder.

**BIOLOGY 12 & IB**

Sucrose glucose 1α→2 fructose

**FUNCTIONS 11**

(A) (i) $f(x) = 5x + 7$ (ii) $f(x) = -\frac{3}{2}x + 3$

(B) (i) $\frac{x+3}{x^2-4x-21}$, $\frac{1}{(x-7)}$ $x \neq 7, x \neq -3$

(ii) $\frac{x^2-3x-10}{x^2-2x-15}$ ; $\frac{(x+2)}{(x+3)}$, $x \neq 5, x \neq -3$

**ADVANCED FUNCTIONS 12**

(i) $D = \{x \in \mathbb{R} \mid x \neq \frac{5}{4}\}$ (ii) $\{y \in \mathbb{R} \mid y \neq 0\}$

(iii) $f(x) \neq 0$, there is no x intercept

(iv) $y = -3$ (v) Vertical asymptote $x = \frac{5}{4}$

(vi) the line $y = 0$ is a horizontal asymptote

**PHYSICS (12)**

The distance between X and Y is 500m.

car A, v = 20m/s, $d_1$= 171m; $t_1$ = 171/20 s

when the speed is doubled ,

v = 40m/s, $d_2$= 261m, $t_2$ = 261/40 s

car B, initial speed= v m/s; acceleration = a m/s²

When it crosses each other,

First instance, $d_1$= 500-171 = 329m; $t_1$ = 171/20 s;

Second instance, : $d_2$= 500-261 = 239m; $t_2$ = 261/40 s;

For the motion of car B ,

Use the kinematic equation, $\Delta d = V \times \Delta t + \frac{1}{2} a \Delta t^2$

$329 = V \times (171/20) + \frac{1}{2} a (171/20)^2$ .........(i)

$239 = V \times (261/40) + \frac{1}{2} a (261/40)^2$ .........(ii)

Solve for V, (initial speed of carB)

*Answer key 13-16, - next issue*


Contact: 647 341 3975
Dr. A.Sri Krishnaraj PhD
ask@ keentutoringcentre.com

KEEN TUTORING CENTRE

# சார்பியல்

37ஆம் பக்கத்தொடர்ச்சி

என்று புரிந்து கொண்டார். பொருட்களின் ஈர்ப்புக்குக் காரணம் வெளிநேரம் என எண்ணிய அயன்ஸ்ரைன், வெளி-நேரப் பரிமாணத்தின் அமைப்பு, இயல்பு என்பவற்றில் கவனம் செலுத்தத் தொடங்கினார். இந்நேரத்தில்தான் அயன்ஸ்ரைனுக்கு முன்னர் தான் அதிக கவனம் செலுத்தாத, மின்கொவ்ஸ்கி



வெளிப்படுத்தியிருந்த வளைந்த வெளிநேரத்தினையும் தீவிரமாக் கருத வேண்டி வந்தது.

# சங்க...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

காமம்

இல்லையேல் அனைவரும் துறவுபூண்டால் உலகம் வாழுமா?

உள்ளினும் நீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனது.



என வள்ளுவர் காமம் எத்துணை இன்பந்தரவல்லது என்பதனை எடுத்துரைப்பதற்கேற்ப தலைமகன் தலைமகளைக் கூடிப் புணர்தற் பொருட்டு அவளது எண்ணம் மேலோங்க காதல் இன்பத்தினை அள்ளிப்பருக நினைப்பது இயல்பே. காதல் காட்சிகள் உண்மையிலேயே காதலையும் காமத்தையும் பேசுவது மட்டுமன்றி இயற்கைவளம், தொழில்வளம், பொருள் சேகரிப்பு என்பனபற்றிய வாழ்வியல் கோலங்களை எடுத்துரைக்கும் தன்மை சங்கப்புலவர்களின் செய்யுட் செய்திகள்.




PARTY HALL
EVENT CENTRE
MEETING PLACE

AVAILABLE FOR RENT

Starting from $100.00


Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting, புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய 50 பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு. GTA Square Mall (FINCH & MIDDLEFIELD) தொடர்புகளுக்கு: 416.917.6883

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

# Malayal Bhagawathi Joythidam

## Pandit Tulsidhar Swamiji








### 100% Guaranteed Result

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

- கைரேகை
- கல்வி, உத்தியோகம்
- வதிவிடப் பிரச்சினைகள்
- குடும்ப பிரச்சினைகள்
- குழந்தை பாக்கியம்
- எதிரிகள் பிரச்சினைகள்
- கர்ப்ப தோஷம்
- நாம நட்சத்திரம்
- தொழில் வியாபாரம்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- சர்ப்ப தோஷம்
- கஸ்ட நஷ்டங்கள்

**Tel.:647.856.0559**

GTA Square Mall (2nd Floor)
5215 Finch Ave. E., Unit #257
Scarborough ON M1S 0C2
(FINCH & MIDDLEFIELD)

**Open 7 Days A Week, 10:00 am - 8:00pm**


நிரு
பிராண்ட்
Niru BRAND ®
JACK
MACKEREL
IN BRINE
தொடர்பிற்கு தொலைபேசி.
காட்சிக்கு தொலைக்காட்சி.
இணையத்திற்கு கணனி.
உணவிற்கு நிரு பிராண்ட்.
MARKETING BY TAMIL SOURCE


# சார்பியல் - 29

## விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

இன்னொரு விடயத்தினைப் பார்ப்போம். எங்களது புவியின் நில அமைப்பினைப் புரிந்து கொள்வதற்கு, வல்லுனர்கள் புவியில் அகலக்கோடுகளையும் நெடுங்கோடுகளையும் புவியின் மாதிரிக் கோள அமைப்பில் வரைந்துள்ளார்கள். நெடுங்கோடுகள் எல்லாம் வட, தென் துருவங்களின் ஊடாக, ஒரு புள்ளியின் ஊடாகச் செல்கின்றன. நாம் வாழுகின்ற இடத்தில் எமது புவியானது சமதளம் போன்றே காணப்படுகிறது. இதில் அருகருகே உள்ள இரண்டு நெடுங்கோடுகளைப் பார்த்தால் அவை சமாந்தரம் போலத் தோன்றுகின்றன. (சமாந்தர நேர்கோடுகள் ஒருபொழுதும் ஒன்றை ஒன்று சந்திக்கமாட்டா என யுகிளிடியன் கேத்திரகணிதம் கூறுகிறது.) ஆனால், புவியின் மேற்பரப்பின் வளைவு காரணமாக, எமது நிலப்பகுதியினையும் தாண்டி மேலே வடக்கிலோ அல்லது தெற்கிலோ செல்லுகின்ற நிலப்பகுதிகளின் ஊடாக அந்த நெடுங்கோடுகள் செல்ல, முனைவுகளில் அவை சந்திக்கின்றன. இது யுகிளிடியன் கேத்திர கணித அமைப்பை விலத்தின் அமைப்பல்லவா.

உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

அதாவது யுகிளிடியன் கேத்திர கணித




அமைப்பிற்குப் பொருத்தமான கிடைத்தளத்தில் ஒன்றை ஒன்று சந்திக்காத இரண்டு நேர்கோடுகள், அத்தளமானது வளைந்து யுகிளிடியனல்லா தளமாகும் போது எங்கேயோ ஒரு இடத்திற் சந்திக்கவும் கூடும். ஆயினும் அவை நேர்கோடுகளே. இனி, பூமத்தியரேகை என்பது ஒரு அகலக்கோடு என்று எங்களுக்குத் தெரியும். இதற்குச் செங்குத்தான இரண்டு நெடுங்கோடுகளைக் கருதுவோம். இவையிரண்டும் துருவத்தில் (முனைவில்) ஒன்றையொன்று செங்குத்தாகச் சந்திக்கின்றன எனவும் கருதுவோம். இப்போது பாருங்கள் பூமத்தியரேகையுடன் இரண்டு நெடுங்கோடுகளும் ஒரு முக்கோணத்தை அமைக்கின்றன. இந்த முக்கோணியின் மூன்று கோணங்களினதும் கூட்டுத்தொகை 270 (90 + 90 + 90 = 270) ஆகின்றது. ஆனால் யுகிளிடியனின் தளத்திலான முக்கோணியின் கோணங்களின் கூட்டுத்தொகை 180 பாகைக்கு அதிகமாகவும் கூடாது, குறையவும் கூடாது என்ற விதி எங்களுக்குத் தெரியும். புவியின் வளைந்த மேற்பரப்பின் யுகிளிடியனல்லா அமைப்பில் அது மீறப்பட்டு இருக்கின்றது.

இன்னொரு விடயத்தினையும் இந்தப் பூகோள அமைப்பில் இருந்து தெரிந்து கொள்வோம். பெருவட்டம் (Great Circle) என்பது, கிறீன்விச்சின் ஊடாகச் செல்கின்ற நெடுங்கோடு, கிறீன்விச்சில் ஆரம்பித்து வட(தென்) திசையாகச் சென்று வடமுனைவை, தென்முனைவு தாண்டி மீண்டும் கிறீன்விச்சிற்கு வருகின்ற ஒரு கோடு இது எப்பவும் நேராகவே செல்கின்றது. பொதுவாக நேர்கோடு ஒன்று மீண்டும் தன்புள்ளியிற் சந்திப்பதில்லை. அது ஒருதளத்தில் உள்ள நேர்கோடுகளுக்கே பொருத்தமானது. எமது புவியின் மேற்பரப்பானது வளைவுற்றுக் காணப்படுவதால், கிறீன்விச்சின் ஊடாகச் செல்கிற நேர்கோடானது மீண்டும் கிறீன்விச்சிற்கே வந்து தனது ஆரம்பப் புள்ளியில் சந்திக்கின்றது. எமது புவியின் மேற்பரப்பானது வளைந்த இருபரிமாணப் பரப்பாகும். அதனாற்றான், புவியின் மேற்பரப்பில் உள்ள நேர்கோடானது மீண்டும் மீண்டும் ஒரே பாதையிற் செல்கின்றது. அதுபோலவேதான் புவியின் மேற்பரப்பில் வரையும் பெரிய முக்கோணியின் மூன்று கோணங்களினதும் கூட்டுத்தொகை 180 பாகைக்கும் அதிகமாகக் காணப்படுகின்றது. இவற்றின் உதவியுடன், நாற்பரிமாண வெளிநேர வெளியின் அமைப்பினையும், அதன் இயல்புகளையும், அங்கு நடைபெறுகிற இயக்கங்களையும், பொதுச் சார்புத் தத்துவத்தின் வழியில் ஈர்ப்பிற்கான விளக்கத்தினையும் அயன்ஸ்ரைன் தந்தார்.

நாற்பரிமாண வெளி-நேரத்தின் இயல்பும் ஈர்ப்பின் விளக்கமும்.

சம்பவங்கள் ஒவ்வொன்றும் நாற்பரிமாண வெளியிலேயே நிகழ்கின்றன எனச் சிறப்புச் சார்புத் தத்துவத்தின் மூலமாகக் காட்டிய அயன்ஸ்ரைன், ஈர்ப்பின் விளைவினைப் பொருட்கள் காட்டுவது விசைகளினால் இல்லை (ஈர்ப்புவிசையினால் இல்லை) என்பதனையும் கண்டு தெளிந்து கொண்டார். எனவே அப்பிள் கீழே விழுவது, புவியை அம்புலி தொடர்ந்து வலம் வருவது, நாலாயிரத்தி அறுநூறு மில்லியன் ஆண்டாகப் புவி கதிரவனை வலம் வருவது எல்லாம் நியூட்டன் கூறியது போன்று ஈர்ப்புவிசையினாலாக இருக்க முடியாது

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



தொடர்ச்சி 34ஆம் பக்கம்

Mortgage solutions
to suit your needs.



Sri T. Sridharan, AMP
Mortgage Development Manager

I'll help you find the mortgage suited to your individual needs.
Call me today and let's get started.

Toronto East and Durham
416-953-3297
tharma.sridharan@
scotiabank.com

Scotiabank®

® Registered trademark of The Bank of Nova Scotia.

நகைச்சுவைத் தொடர் 272

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு நீதன்



## பேசப் படாத அனுபவங்கள்

ஐ.நா. பிரதிநிதி நவநீதம்பிள்ளை வருவார் - வரப்போகிறார் - வந்துவிட்டார். இலங்கையில் போரில் இறந்தகாலம் பற்றியும் போரில் இறந்த காரணம் பற்றியும் குறிப்பெடுத்தவர்கள் குறிப்பறியப்.. போகிறார்கள்.



செல்லம்மா …உனக்கு உன்ரை அப்பு பலாலிக்குக் கிட்ட தந்த சீதனக்காணி ஆமி பிடிச்சதெண்டு சொன்னனியெல்லோ நவநீதம்பிள்ளை அந்த.. இடமெல்லாம் பாத்தவவோ எனக்கேட்க செக்கண்ட்புளோர் செல்லம்மாவிற்கு அழுகைதான் வந்தது.



தம்பிப்பிள்ளை அதாவது செக்கண்ட்புளோர் செல்லம்மாவின் தகப்பன் கஸ்டப்பட்டு உழைத்து வாங்கிய காணி. இப்போ ஆமிக்காணியாக மாறி விட்டது. அது விற்று கடன் கொடுக்கலாம் என்ற நம்பிக்கையில் பலரிடம் கடன் வாங்கிவிட்டா. இப்போ காணியில்லை. கடன் குடுத்தவர்கள் இடைக்கிடை வந்து கதையோடு கதையாக அது சரி செல்லம்மாக்கா லைவ் இன்ஸ்சூரன்ஸ் ஏதன் செய்திருக்கிறியளோ என்று கேட்டால், எனக்கென்ன பிள்ளையோ குட்டியோ எனக்கேட்பா. கடன் கொடுத்தவர்கள் ஹாட் அற்றாக்கில் தான் திரும்புவார்கள்.




'கடன் பட்டார் நெஞ்சம்போல கலங்கினான் இலங்கை வேந்தன்' அது அந்தக்காலம்.
இப்போ கடன் கொடுத்தவர்கள் தான் கலங்குகின்றார்கள்.
அதுமட்டுமல்ல பலர் கடன் காசை கேட்கும்பொழுது ஆத்திரத்தில் பேசுவதால் தன்னைத்திட்டினார் என பொலீஸ் முறைப்பாடு செய்து, உதவு மனப்பான்மையில் கடனும் கொடுத்து சட்டத்தின் பிடியில் மாட்டுப்பட்டவர் பலர்.

'அவனுக்கென்ன பிழைத்துக்கொண்டான் அகப்பட்டவன் நானல்லவோ'
அன்றை சினிமாப்பாடல் ஞாபகம் வருகிறது.



ஸ்ரேயாவை மேடைக்கு கிட்ட கொண்டுவரேக்குள்ளை ரசிகர்கள் கிட்டப்போகாமல் பாதுகாப்பு குடுத்த மாதிரி நவநீதம்பிள்ளைக்கு பலத்த பாதுகாப்பு.



உலகமகா யுத்தம் 1….2…பார்த்தவர்களும் கேட்டவர்களும் சொல்லும் பல கதைகளைக் கேட்டிருக்கிறோம். நம்பவில்லை. இன்று தினம் தினம் பல கதைகளைக் கேட்கிறோம். இரசாயன ஆயுதங்கள் பாவித்தது என நிரூபணமாகியும் இனி விசாரணை அது இது என இழுபறிமுடிய இன்னும் எத்தனை வருடங்கள்???




நவநீதம்பிள்ளையின் வரவு பல சிறுவயதில் கண்ட சம்பவங்களும் இன்று நடைமுறையிலுள்ள சம்பவங்களும் கலந்து வந்தன. பாடசாலைக்கு கல்விப் பரிசோதகர் வருகிறாரென்றால் பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் படும் பாடு பின்தங்கிய பகுதிப் பாடசாலைகளில் ஆடுமாடுகளின் இருப்பிடமாகக் கொண்ட வகுப்பறைகளைக் கழுவித் துடைத்து வயலில் (அதிபர் ஆசிரியர்களின் வயல்களில்) வேலை செய்த மாணவர்களை வகுப்புகளில் அமர வைத்து கணக்குவிடும் (இல்லை கணக்குக்காட்டும்) பாடசாலைகளும் உள்ளன. 30 வருடப் போர்….இறுதி நேர ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்க்கொலை, இதனை ஒரு வார காலத்தில் நவநீதம்பிள்ளையிடம் எப்படிச் சொல்லுவது. அவர் எதனைத்தான் குறிப்பறிவது? குறிப்பெடுப்பது?




இராணுவம் அரச படைகள் ஆக்கிரமித்த காலங்களில் துப்பாக்கிச் சூட்டிலும் செல்லடியிலும் இறந்தவர்கள் எண்ணிலடங்காது. திருமணவீட்டிலும் மணவறையிலும் தம்பதிகள் இறந்த கதைகள் கண்ணை விட்டும் கருத்தை விட்டும் போகவில்லை. ஆனால் நாய்களுக்கு திருமணம் செய்து பிரபல செய்தியாக பத்திரிகை வானொலி தொலைக்காட்சி இணையத்தளமெல்லாம் செய்தி பரவியுள்ளது. திருமணமாக வேண்டிய பல இளைஞர் யுவதிகள் கால வரையறையின்றி சிறையிலுள்ளனர்.

புல்லாகிப் பூடாகி புழுவாய் மரமாகி
பல்மிருகமாகி பறவையாய் பாம்பாகி
எல்லாப்பிறப்பும் பிறந்திழைத்தேன் எம்பெருமான்…

நிலந்தன்மேல் வந்தருளி, நீள் கழல்கள் காட்டி
நாயிற்கடையாய் கிடந்த அடியேற்கு
தாயிற் சிறந்த தயவான தத்துவனே …….சிவபுராணம்

உன் கண் உன்னை ஏமாற்றினால்……
ஏமாறாதே ஏமாற்றாதே!….

'எத்தனை காலம்தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே சொந்த நாட்டிலே'
என பல பாடல்கள் நினைவுக்கு வருகின்றன…



ஞாபகம் வருதே!

செப்ரெம்பர் 1---15










1. தமிழறிஞர் தனிநாயக அடிகள் நினைவு தினம் (1980)
2. Labour day விடுமுறை தினம்
3. பாடசாலை கல்லூரி சர்வகலாசாலைகள் ஆரம்பம்
4. நல்லூர்க் கந்தன் தேர்
5. அன்னை திரேசா நினைவுதினம் (1997)
7. கலாயோகி ஆனந்தக்குமாரசாமி நினைவுதினம் (1947)
8. விநாயக சதுர்த்தி
8. ஆத்மஜோதி முத்தையா
11. சுப்பிரமணிய பாரதியார் நினைவு தினம்
15. ஆவணி ஞாயிறு கடைசி ஞாயிறு.


TUTORING

KEEN TUTORING CENTRE

By Qualified & Experienced Tutors
- CHEMISTRY, PHYSICS, BIOLOGY
- FUNCTIONS, ADV. FUNCTIONS
- CALCULUS & VECTORS, DATA MGT
- SCIENCE, MATH, ENGLISH, FRENCH

Individual & Small Group classes, Individual care

GR 1- 12 , UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"

Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com

SPECIAL CLASSES FOR
- PRE-UNIVERSITY
- MCAT EXAM
- IB & AP program


- SUMMER CLASSES "July- August"
- REGULAR CLASSES "Throughout the year"

உங்கள் கல்விக்கான சிறந்த தெரிவு



TUTORING

@ GTA Square



Saturday & Sunday 9:00 To 11:00
- Math - Grade 9 ,10 and 11 ($10 Per Hour )
- Advanced Functions - Grade 12 ($15 Per Hour )
- Vectors and Calculus- Grade 12 ($15 Per Hour )

Kamal: 416.696.5007 / 647.268.5007
15 years experience in teaching math for high school students
(Priority will be given for home work)



MATH, SCIENCE & ENGLISH TUITION

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.Classes available at Scarborough & Stouffville Contact: 647.340.9490 / 416.732.2228

# மொன்றியல் உலகத் திரைப்பட விழாவில் கனடியத் தமிழ் திரைப்படம்

## ஒரு துப்பாக்கியும் ஒரு மோதிரமும் இணைக்கும் ஆறு கதைகள் – A Gun & A Ring

இதுவரையில் யாரும் சொல்லாத கதையைச் சொல்ல வேண்டுமென்ற முனைப்போடு இளம் கனடிய இயக்குநர் லெனின் எம். சிவத்தின் எழுத்து, இயக்கத்தில் விஷ்ணு முரளியின் தயாரிப்பில் உருவான 'A Gun & A Ring' திரைப்படம் 37வது மொன்றியல் உலகத் திரைப்பட விழாவுக்குத் தெரிவாகியுள்ளது.

ஈழத்துப் போர்கால உயிரிழப்புகள், கொடூர நினைவுகளிலிருந்து மீளவும் முடியாமல் அவற்றை மறக்கவும் முடியாமல், தாம் குடியேறிய நாட்டில் புதியதொரு வாழ்வைக் கட்டியமைக்க முனையும் வெவ்வேறு தலைமுறையினர் எதிர்கொள்ளும் கடினமான யதார்த்தத்தை இத்திரைப்படம் ஆழமாக ஆராய முயல்கின்றது.

"படத்துக்குக் கிடைக்கும் இவ் அங்கீகாரம் எம்மைப் பெருமையுறச் செய்கிறது" என்று மகிழும் விஷ்ணு முரளி, 'இங்கே ஒரு புது வாழ்வைக் காண கடினமாக உழைக்கும் எம்மக்களுக்கு எவ்வாறு அவர்களின் கடந்த கால கசப்பான, கொடூரமான நினைவுகள் இடையூறாக இருக்கின்றன என்பது கண்டிப்பாக சொல்லப்பட வேண்டியதொரு கதை' என்கிறார்.

ஓகஸ்ட் 22 தொடக்கம் செப்ரெம்பர் 02 வரை நடைபெறவுள்ள மொன்றியல் உலகத் திரைப்பட விழாவில் கவனத்தை ஈர்க்கும் உலகத் திரைப்படங்கள் இடம்பெறும் 'Focus on World Cinema' பிரிவில் 'A Gun & A Ring' திரையிடப்படுகின்றது. வெற்றிமாறனின் இயக்கத்தில் வெளியாகி, ஆறு இந்தியத் தேசியவிருதுகளைப் பெற்ற 'ஆடுகளம்' திரைப்படமும் 2011ம் ஆண்டு இதே பிரிவில் திரையிடப்பட்டதும் குறிப்பிடத் தக்கது. நீண்ட காலமாக நிகழ்ந்துவரும் கனடாவின் திரைப்பட விழாக்களுள் ஒன்றான இவ்விழா, திரைப்படத் தயாரிப்பாளர் சங்கங்களின் சர்வதேச



சம்மேளனத்தின் அங்கீகாரம் பெற்ற ஒரேயொரு வட அமெரிக்கத் திரைப்படப் போட்டி விழாவாகும்.

'A Gun & A Ring' திரைப்படத்தின், சர்வதேச ரீதியிலான முதற்காட்சி கடந்த ஜூனில் நடந்தேறிய 16வது ஷாங்காய் சர்வதேசத் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. அங்கு, மதிப்புக்குரிய தங்கக் குவளை விருதுக்கும் (Golden Goblet) இப்படம் பரிந்துரைக்கப்பட்டிருந்தமையும் பலரும் அறிந்ததே. லெனினின் முதலாவது படமான 1999 பல சர்வதேச திரைப்பட விழாக்களில் பங்கெடுத்து பல விருதுகளை தட்டிச்சென்றமை குறிப்பிடத்தக்கது.

'A Gun & A Ring' திரைப்படச் சிறப்புக் காட்சி ஒன்று செப்ரெம்பர் 28, 2013 சனிக்கிழமை மாலை 7 மணிக்கு பெரும்-ரொறன்ரோவின் ரிச்மண்ட் ஹில் யோர்க் சினிமாவில் (York Cinemas) ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இளம் தொழில் முனைவர் விஷ்ணு முரளியும், அவரின் தந்தை முகுந்த முரளியும் இணைந்து நிறுவி, ரொறன்ரோவில் இயங்கும் பல்தொடர்பூடக நிறுவனமான Eyecatch Multimedia நிறுவனத்தின் சுயாதீனத் திரைப்படம் தயாரிக்கும் முதல் முயற்சியாக 'A Gun & A Ring' திரைப்படம் உருவாகியுள்ளது.

தொடர்புகளுக்கு: கோபி திரு - 647.427.4407
gobiraj7@gmail.com

காட்சிகள் - Cinema Quartier Latin (350 rue Emery Montreal QC H2X 1J1)
காட்சி 1: Aug 31 at 9:20PM in Hall # 11
காட்சி 2: Sept 01 at 5:00PM in Hall # 11
காட்சி 3: Sept 02 at 10:50AM in Hall # 16

# வளர்ந்து வரும் பரம்பரை



பூமியில் வளர்ந்து வரும் எம் பரம்பரை
பூப்பதும் காய்ப்பதும் ஒரேஒரு முறை

ஏழைகளுக்கு வாழ உதவுவதில் எழியஇனம்
எல்லோருக்கும் காய்கனி கொடுத்துதவும்
மனம்
குட்டி ஒன்றை மண்ணில் நாட்டி வைத்தால்
குட்டிகள் பலதை ஈன்று வைத்திடும் இனம்


இனங்களில் பல எம்மில் உண்டு அதில்
இதரை, கதலி, கப்பல், எனப்பல பெயர்
குருக்குத்தி நோய் வந்து எம்மை தாக்கிவிட்டால்
குலை கூட ஈணாமல் குருக்கனாகி மடிந்திடுவோம்
சத்தும் சுவையும் நிறைந்த எம் பழத்தை
சகலரும் விரும்பி சுவைத்து சாப்பிடுவர்
விரதவேளைகளில் விருந்து உபசாரங்களிலும்
விசேடமாக எடுத்து வருவர் எம் இலையை
கல்யாண வைபவம் என்று ஒன்று வந்தால்
கதலி வாழை பழக்குலையோடு மரத்தை
பலரையும் வரவேற்க இருமருங்கிலும்
பந்தலின் வாசல் முன்னே கட்டி வைப்பர்
வார்த்தைகள் நிறையவேண்டும் எம் இனத்தை
வாய்திறந்து நீங்கள் வாழ்த்துக்கள் சொல்ல
வாசித்து அறிந்து கொண்டிருப்பீர் நீங்கள்
வளர்ந்து வரும் பரம்பரை வாழை என்று

- கவிநாதம் - பரந்தாமன்


# அறிந்திருக்க...



- 25 வைட்டமின்கள் இதுவரை அறியப்பட்டுள்ளன.
- பாம்பின் கண்களின் மேல் இமை இல்லை.
- "ஏழையின் பசு" என வெள்ளாடு போற்றப்படுகின்றது.



- ஜீலம் நதிக்கரையின் மீது காஷ்மீர் அமைந்துள்ளது.
- "தாய்லாந்து" என்பதற்கு "சுதந்திர பூமி" என்பது பொருள்.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

Pre-Approvals | Purchases | Renewals | Refinances | New to Canada
Subo Thevarajah.,AMP
MORTGAGES
SUBOSHAN.COM
416.627.2222

வீடு வாங்க விற்க
Assist you with defficult Mortgages approval, Home inspection & Lawyer Services Comptitive Ratest / Free
உங்கள் வீட்டை விற்க முன் என்னை அழையுங்கள் இலவச மதிப்பீட்டுக்கு!!!
printhahomes@gmail.com
printhahomes.com
Cell: 416.836.3091
HomeLife / Future Realty Inc., Brokerage*
205-7 Eastvale Drive
Markham Ont, L3S 4N8
Bus: 905.201.9977
Fax: 905.201.9229
Printhini Nagaratnam
Sales Representative
*Independently owned & operated
$$$ Cash Back $$$
Rewards For Referrals

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்
SASI CHELVARATNAM
Sales Representative
Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S OC2
*Independently Owned & Operated

"Let me help you make the right choice"
SchurenSriskandarajah B.A
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

Canada Trust
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable
Low Mortgage Rates
கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள்
Buying Home Home Equity Line of Credit
Consolitation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute

Free Real Estate Class - Call: 416.321.6969

RealEstate / Mortgage / Commercial Investments
RE/MAX

MEADOWVALE & SHEPPARD
HOUSE FOR LEASE
Bedrooms: 4
Washrooms: 3
Rent: $1599

MAJOR MAC & BATHURST
HOUSE FOR SALE
Bedrooms: 4
Washrooms: 3
Price: $869,900
Over 2500 Sq.ft

NEILSON & SHEPPARD
CONDO FOR SALE
Bedrooms: 2
Washrooms: 2
Price: $199,900

LAWRENCE / MANSE / MORNINGSIDE
Bedrooms: 4
Washrooms: 3
Price: $629,900
Sep Entrance & Finished bsmt.

SOLD
NEILSON & SEWELLS
Bedrooms: 4
Washrooms: 4
Price: $449,900

WEIR ST & BRADFORD
1 Year Old House
Bedrooms: 4
Washrooms: 3
Price:$569,900
Over 2500 Sq.ft

Flexbile Commission & Proven Results
Hall Of Fame & Platinum Award Winner
A. Anton Jeeva B. Eng
Cell: 416.575.5055
Office: 416.321.2228
E-mail: anton.jeeva@gmail.com,
Web: newcondoproject.ca & antonjeeva.com
2210 Markham Rd., #1, Toronto, ON M1B 5V6

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
REAL ESTATE List Buy Sell
TOP 5%
SALES REPRESENTATIVES IN CANADA
CHAIRMAN'S CLUB AWARD WINNER 2012
HomeLife GTA Realty Inc., Brokerage
Raj Paramasamy Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
Guaranteed Result

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com www.tamilvanakkam.com

Every Story has a different Rate
What's Your's
Solution for every Mortgages
BonaFide
· New Mortgages · Refinance · First & Second Mortgages
New to Canada, Mortgage Switch, Self Employed
Pre-approvals, Residential & Commercial
Thayalan Gobalakrishnan
Mortgage Agent (GTA) Lic No:M12001612
Cell: 416.575.3211 / Fax:1.888.545.0462
E-Mail: thaya.gobal@gmail.com
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Call me for any Mortgage Financing Questions?

PRE CONSTRUCTION CONDOS FOR SALE
DOWNTOWN & OTHER AREAS
HARBOUR PLAZA RESIDENCE AQUALINA YONGE &RICH
Price Starting From $200k
RE/MAX Vision Realty Inc. Brokerage.
Call For VIP Pricing & Other Incentives
A. Anton Jeeva B.Eng (Real Estate / Principal Mortgage Broker)
Dir: 416.575.5055